# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 29 செவ்வாய்க்கிழமை (14.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 292


# மாகாண சபைகளுக்கு அதிகபட்ச அதிகாரம் வழங்க ஆராயப்படும்

## முன்னாள் பிரதமர் தலைமையில் அமைச்சர் குழு நியமனம்



கொழும்பு, செப்ரெம்பர் 14

மாகாண சபைகளுக்கு அதிகபட்ச அதிகாரம் வழங்குவது குறித்து அரசாங்கம் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன்பொருட்டு முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா தலைமையில் நால்வர் குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

13ஆவது அரசமைப்புச் சட்டத்துக்கு வலுவான திருத்தங்களைக் கொண்டு வந்து, மாகாண சபைகளுக்கு அதிகபட்சம் அதிகாரங்களை வழங்கி இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டு வருவதே அரசாங்கத்தின் குறிக் கோள் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிரணாப் முகர்ஜி இலங்கை விஜயம்

கொழும்பு, செப். 14

இந்திய மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அண்மைக்காலமாக இந்திய தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துகின்றனர் என வெளியாகும் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை அரசுடன் நிரந்தரத் தீர்வுகாணும் வகையில் பேச்சு நடத்த பிரணாப் முகர்ஜி இலங்கை

(24ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் நாடாளுமன்றில் இன்று இலங்கை விவகாரம்

லண்டன், செப். 14

இலங்கையில் உள்ள தற்போதைய நிலைமை தொடர்பாக இன்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைகளுக்கான கேள்வி நேரத்தின்போது பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரிடம் கேள்விகள் கேட்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கை தொடர்பாகவும் இலங்கையுடனான பிரிட்டனின் தற்போதைய உறவுகள் குறித்தும் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பதிலளிக்க உள்ளார். (ஒ-சி)

## 7,500 புலிச் சந்தேக நபர்கள் தொடர்ந்து தடுத்து வைப்பு

### சிறைச்சாலைகள் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

7500 தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'விடுதலைப் புலிகளின் சிரேஸ்ட தலை

(24ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை உள்விவகாரத்தில் அமெரிக்கா தலையிடக் கூடாது தேவையற்ற விமர்சனங்களை அது நிறுத்த வேண்டும்

## ஊடகத்துறை கெஹலிய ரம்புக்வெல அமைச்சர் காட்டம்



கொழும்பு, செப்ரெம்பர் 14

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்க நிறுத்தவேண்டுமென இலங்கை அரசு தெரிவிக்கின்றது.

இலங்கை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட 18ஆவது அரசமைப்புத் திருத்தம் குறித்து அமெரிக்கா கடுமையாக விமர்சித்திருந்தது. இந்த விமர்சனத்துக்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக தேவையற்ற, பொறுப்பற்ற வகையில் விமர்சனம் செய்வதை அமெரிக்கா நிறுத்த வேண்டும். அரசு தேவையற்ற விமர்சனங்களை கவனத்தில் கொள்ளாது. முதலில் அமெரிக்கா தனது சொந்த நாட்டுப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## 40 குதிரைவலு இயந்திரப் படகுகளுக்கு வட.கடலில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம்

கொழும்பு, செப். 14

வடக்குக் கடலில் மீன்பிடிக்க இது வரை காலமும் 40 குதிரைவலு கொண்ட இயந்திரப் படகுகளைப் பாவிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு நேற்றுமுன்தினம் தொடக்கம் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுவிட்டதாக மீன்பிடி அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கின் மோதல்கள் ஆரம்பமான காலம் முதல் இந்தத் தடை உத்தரவு கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

தற்போது இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளபோதும் வடகடலில் கடற்கண்ணிகள் அகற்றப்படாத பிரதேசங்களில் மீன்பிடிக்கும் தடை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மீன்பிடி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் நடத்திய ஆலோசனைகளின் போது இந்தத் தடையை நீக்குவதற்கான

(24ஆம் பக்கம் பார்க்க)

## சேனக சில்வாவுக்கு எதிராகக் குற்றப்பத்திரம்

கொழும்பு, செப் .14

சரத் பொன்சேகாவின் ஊடக இணைப்பாளரும் உதவியாளருமான சேனக சில்வாவுக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மாநாட்டுக்கான திகதி நிர்ணயிக்க ஐ.தே.க. செயற்குழு 18இல் கூடுகிறது



கொழும்பு, செப்.14

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறும். செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் தேசிய மாநாட்டுக்கான திகதி நிர்ணயிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சிப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது. அங்கு கட்சிப் பேச்சாளர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

(24ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்த் திருவிழாவுக்கு சென்ற குடும்பம் கொழும்பு திரும்பியபோது கோரவிபத்து

### இருவர் உயிரிழப்பு, அறுவர் காயம்

கொழும்பு, செப். 14

நல்லூர்த் திருவிழாவுக்காக யாழ்ப்பாணம் சென்றுவிட்டு வான் ஒன்றில் கொழும்புக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தவேளை சிலாபம் - மாரவில பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர். ஆறு பேர் காயம் அடைந்தனர். ஒருவர் சிராய்ப்புக் காயங்களுடன் தப்பிக் கொண்டார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 4 மணி அளவில் இந்த விபத்து இடம்பெற்றது. வான் கட்டுப்பாட்டை இழந்து ஓடி விபத்தில் சிக்கிக்கொண்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் - சங்கிலியன் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும்கொண்ட கந்தசாமி கமலராசன் என்பவரின் குடும்பத்துக்கே இக்கதி நேர்ந்துள்ளது.

கமலராசனின் மகன் சந்தோஸ் (வயது 05), வயோதிப மாமனார் மாணிக்கம் தம்புலிங்கம் ஆகியோரே உயிர் இழந்தவர்களாவர். சிகிச்சைக்காக மூவர் மாரவில வைத்

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாழ்த்துகின்றோம்



கல்விப் பணிப்பாளராய்
கருத்துடன் பணி செய்து
பணிச்சிறப்பால் வட மாகாண
கல்விப் பணிப்பாளராக
உயர்வு பெற்ற

**திரு.ப.விக்னேஸ்வரன்**

அவர்களைப் பாராட்டுவதுடன் அவரது புதிய பணி சிறக்க இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/திருக்குடும்ப கன்னியர் மடம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-570880)



ஏற்கனவே பதிந்த/புதிய மாணவர்களுக்கான அறிவித்தல்.

**"CERTIFIED MEDICAL ASSISTANT"(An US Curriculum)**

பயிற்சி நெறி ஆரம்பம் : *19/09/2010* காலை 10.00

A pathway for Nursing/Pharmacist/MLT career

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு02) CMA US Curriculum

**LH Lava Hospitals**

KU City & Guilds Qualified

After A/L



MBBS வைத்திய விரிவுரையாளர்களால் பிரபல வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.

பதிவு இறுதித்திகதி :17/09/2010

Quality Assured

**Knowledge Universe®**
Malaysian College of Business and IT
Tel: 0777302882 | # 75,Temple Road,Jaffna | www.kugroup.info



## ஆங்கிலம் கற்பது இலகுவானது.

ஆங்கில அறிவின் அவசியத்தை பாடசாலையில்,பரீட்சையில், நேர்முகத்தேர்வில்,பயணிக்கும்போது இன்னும் வாழ்வின் பல சந்தர்ப்பங்களிலும் உணர்ந்திருக்கிறீர்களா?

தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்*** அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

தனிப்பட்ட கவனிப்பில்,அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப ,நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட துன்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ?

14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்
Local and UK Certificates for Each Level

மாணவர்கள்,தொழில் புரிவோர்க்கான வகுப்புக்கள்

**City and Guilds UK Training and Certification*****

ESOL L1
ESOL L2
ESOL L3

எமது எளிமையான கற்பித்தல் முறை நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும்.. முன்னேற்றும்..ஒருமுறை வந்து பாருங்கள்.

Spoken English(KU/C&G) புதிய பிரிவுகள் விரைவில்..
IELTS Class Free*** பேசலாம் வாங்க !

Web Site with full info: WWW.KUGROUP.INFO

City & Guilds Approved Centre

இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதிக்கீட்டுக்கு அழையுங்கள்.
✆ 0777302882/0213208342

**Knowledge Universe**
Malaysian College of Business and ICT

City and Guilds Qualifications are accepted by BRITISH COUNCIL

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
23 . 11 . 1946



ஆண்டவன் அடியில்
28 . 08 . 2009

**திருமதி சுந்தரலிங்கம் பாக்கியலட்சுமி**

குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து
எம்மை பாசத்துடன் அரவணைத்து
நன்னெறி காட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சோடிருக்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

பூநாரி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(103316)


## ரூபா 3500 அபராதம்

தென்மராட்சி, செப்.14

அனுமதிப் பத்திரமின்றி பெற்றோல் விற்பனை செய்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் வரணி இடைக்குறிச்சி, நாவற்குழிச் சந்தி ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான் தலா 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் வித்தார். (ஒ-207)

## பொது இடங்களில் குப்பையை வீசிய 7 பேர் கைதாகினர்

சாவகச்சேரி, செப்.14

சாவகச்சேரி நகரப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு எதிராக பொது இடங்களில் குப்பைகள் கொட்டிய ஏழு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸாரும் சுகாதாரத் திணைக்களத்தினரும் இணைந்து நேற்று முன்தினம் நடத்திய டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது இவர்கள் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஏழு பேருக்கு எதிராக நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகளை விசாரித்த நீதிவான் இவர்களை எச்சரிக்கை செய்ததுடன் தலா 200 ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

## மரத்தில் தொங்கிய யுவதியின் சடலம்

சாவகச்சேரி, செப்.14

நாவற்குழி தச்சன் தோப்புப் பகுதியில் மரம் ஒன்றில் கயிற்றில் தொங்கிய நிலையில் யுவதியின் சடலம் காணப்பட்டது.

இவரது சடலத்தை சாவகச்சேரி பொலிஸார் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் ஒப்படைத்துள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை தனுஷா (வயது 19) என்னும் யுவதியே இறந்தவராவார். இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் நீதி மன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ஒ-207)

## 10 நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப்.14

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றிய பத்து நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் வன்னிப் பகுதி உள்ளூராட்சி சபைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாகாண ஆளுநரின் சிபார்சின் பிரகாரம் உடனடியாகச் செயற்படும் வண்ணம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவித்துள்ளார். (ஒ-207)

## பளைப் பகுதிக்கு விரைவில் மின்சாரம்

பளைப் பிரதேசத்திற்கு விரைவில் மின் சாரம் கிடைக்கவுள்ளது. இதற்காக எழுதுமட்டுவாழிலிருந்து பளை வரையில் மின் சாரக் கம்பங்கள் சீர் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே இப் பகுதியில் சேதமடைந்து காணப்படும் மின் கம்பங்கள் மாற்றப்பட்டு புதிய கம்பங்கள் நடப்பட்டு வருகின்றது. மின்சாரம் வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ள தென்னிலங்கையில் இருந்து மின்சாரசபை ஊழியர்கள் வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)


### வீடு வாடகைக்குத் தேவை

இருவர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில், தாவடி கோண்டாவில் இணுவில் பகுதிகளில் விரும்பத்தக்கது.
T.P. 0772487653



### தவறிவிட்டது

ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு M.குணசீலன் எனும் பெயர் முகவரியுடைய மோட்டார் வாகன இல. : NPGQ 2212 என்னும் இலக்கமுடைய பதிவுப் புத்தகம் மற்றும் Sticker என்பன நல்லூருக்கும் அன்னசத்திர ஒழுங்கைக்கும் இடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு :இல.:11, அன்னசத்திர லேன், கந்தர்மடம்.
T.P. : 0779491088



### மணமகள் தேவை

1983 ஆம் ஆண்டு அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்த யாழ். இந்து கௌரவ குடும்பத்தில் உள்ள சொந்தமாக பல வியாபார நிறுவனங்களை நடத்திவரும் மணமகனுக்கு அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அழகிய சிவந்த பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு: [illegible]



## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் புவியியல்பாட ஆசிரியர்
**வி.செந்தூரன்**
அவர்களின் பாசமிகு மாமியார்
**திருமதி சற்குணதேவி பரமேஸ்வரன்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**கலை, வர்த்தகக் கல்லூரி.**
பெரிய அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி.

(570884)



## CALLING FOR OCCUPANTS IN A 5 STORIED SHOPPING COMPLEX

**LOCATION: IN FRONT OF BUS STAND ATCHUVELY TOWN, SRI LANKA.**

at present the construction works of the 5 storied Shopping Complex Building is under progress at the above location. the complex is covered almost 1000 SQ.FT. area.

Facilities available in the shopping complex are

I. Fully Airconditioned
ii. Necessary Electricity Supply and The Generator Faci lity During The Power - Cut Period for The Entire Shopping Complex.
iii. Elevator Facility
iv. Telephone Facility as Required
v. Sanitary Facilities Including the Public.
vi. Vehicle Parking Area.
vii. First Floor only for Banks

Please Contact on the Undermentioned Telephone Numbers for Further Details and to get your Assignments as Early as Possible.

**In Sri Lanka : 0776152986**
**In Germany. : 00 49 231567 8133 - Fax Number**
**00 49 176855 27504**
**00 49 176664 98212**

✱ PLEASE NOTE THE CONTACT DETAILS SHOULD BE IN TAMIL

(c-570871)



## பிறந்தநாள் வாழ்த்து



இன்று 14.09.2010
திங்கட்கிழமை தனது
60ஆவது பிறந்த தினத்தில்
மகிழ்ந்திருக்கும்
**பாவிலுப்பிள்ளை கிறிஸ்ரி விக்ரர்**
**(செல்வராசா)**
அவர்களை மனதார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**தாய், சகோதரர், சகோதரிகள்,**
**அன்பர்கள்.**



## வாழ்த்தி வரவேற்கிறோம்

**அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று இன்று யாழ்.திரும்பும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உடற் பயிற்சி அணியினரையும் இவர்களை நெறிப்படுத்திய அதிபர், பொறுப்பாசிரியர்களையும் வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

**யா/புனித ஹென்றியரசர் கல்லூரிக் குடும்பம்.**

(103311)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசு கையில் எடுத்துள்ள அரிய கேடயம் உள்ளவரை....

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கரையோரங்களில் புதிதாகப் பாதுகாப்பு முகாம்களை - படை முகாம்களை - நிறுவுவதற்கு அரசாங்கம் - பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவுக்கேற்ப இப்பகுதிகளின் கரையோரங்களில் புதிதாக மொத்தம் இருபத்தைந்து கரையோரப் பாதுகாப்பு முகாம்களை நிறுவத் தீர்மானமாகியுள்ளது. இந்தப் புதிய முகாம்கள் கடற்படையினர் ஒருங்கிணைப்புடன் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போர்தான் முடிந்து போய்விட்டதே; முப்பது வருட காலப் போரை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டதால் ஜனாதிபதி மஹிந்த வேறு எந்த அரசுத் தலைவரையும் விட பெரும் சாதனையாளர் என்று தெற்கில் மதிக்கப்படுகிறார். ஏன், வேறு எந்தத் தலைவராலும் வெல்ல முடியாத போரைத் தாம் வேரோடு தகர்த்துவிட்டதாக - வெற்றிகொண்டுவிட்டதாக ஜனாதிபதியே பெருமிதத்துடன் பேசுகிறார். அபிவிருத்திக்குத் தடையாக இருந்த ஆயுதப் போராட்டத்தைத் தாம் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டதால், இனி நாட்டை அபிவிருத்தித் திசைக்குத் திருப்பி முன்னேற்றம் காண வேண்டும் என்பது தமது பெரும் இலக்கு என்றும் திட்டம் வகுத்துள்ளார் அவர். ஏன், அரசமைப்புச் சட்டத்துக்கான 18 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியதே நாட்டில் அபிவிருத்தியைக் கொண்டுவருவதற்கே என்று மந்திரிப் பிரதானிகள் சிலர் 'பிரசங்கம்' செய்து வருகின்றனர்.

ஆனால், இத்தனை பிரமாதங்களுக்கும் மத்தியில், போர் முடிவுற்ற பின்னரான கடந்த சுமார் ஒரு வருட காலத்தில் வடக்கு, கிழக்கில் மேன்மேலும் இராணுவ முகாம்கள் பெரும் எண்ணிக்கையில் நிறுவப்பட்டு வருகின்றன. அவை போதாது என்று, புதிய பெயரில், புதிய வடிவத்தில் கரையோரப் பாதுகாப்பு முகாம்களை நிறுவப் போகிறதாம் அரசாங்கம்!

போர் முடிந்த பின்னரும் மிகக் குறிப்பாக வடக்கு, கிழக்கில் படை முகாம்களின் எண்ணிக்கையை நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக அதிகரிப்பதில் அரசாங்கம் சாதனை ஒன்றையே நிலைநாட்டி வருகின்றது எனலாம். வடக்கு, கிழக்கில் எத்திசைக்குப் போனாலும், எவ்வழி திரும்பினாலும் படை முகாம்களே நீக்கமற இருக்கக் கூடியதாகக் கருமம் நிறைவேறி வருகிறது.

போர் முடிந்துவிட்டால் என்ன? தமிழ்மக்கள் இராணுவமயச் சூழலில், இராணுவக் குடியிருப்புகளின் மத்தியில் வாழவேண்டிய நிலை நீடிக்க வேண்டும்; அதுவே வடக்கு கிழக்கின் நிரந்தர நிலத்தோற்றமாக இருக்கவேண்டும் என்ற திட்டத்துடன் அரசின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் உத்தி அமைந்திருக்கிறது.

அதன் ஊடாக வடக்கு, கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்று எவரும் உரிமை கொண்டாட முடியாத நிலையைத் தோற்றுவிப்பதற்கான திட்டம் வெகு கச்சிதமாக அரங்கேற்றப்பட்டு வருகிறது.

போர் முடிந்தால் நாட்டுக்கு இப்போது பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்று அரசுதரப்பு டமாரம் அடிக்கிறது. அவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கில் மட்டும் பார்த்துப் பார்த்துப் புதிய இராணுவ - படை - முகாம்களை நிறுவுவது ஏன் என்ற கேள்விக்கு அரசாங்கம் முன்னரே தயாரிக்கப்பட்ட (Ready made) பதில் ஒன்றை வைத்திருக்கிறது!

பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கக் கூடிய சாத்தியம் உண்டு. அதனால் அவசரகாலச் சட்டத்தை இப்போதைக்கு நீக்கமுடியாது. பயங்கரவாதச் சட்டத்தையும் நீக்கமுடியாது. பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்று கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கலாகாத தமிழ் இளைஞர்களைத் தானும் விடுவிக்க முடியாது.

இந்த வகைக்குள்ளேயே வடக்கு, கிழக்கில் மேலும் இருபது புதிய படை முகாம்கள் அமைக்கப்படுவதும் அடங்கும்.

வடக்கு, கிழக்கில் அங்கு வாழும் மக்களுக்கு எதிராக எதைச் செய்ய வேண்டுமென்றாலும், அதற்கு முலாம் பூசுவதற்கு, மேற்கூறிய பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கும் அபாயம் இன்னும் நீங்க வில்லை என்ற காரணம் முன்வைக்கப்படுகிறது.

தமிழர்களுக்கு எதிரான, பாதகமான எந்த நடவடிக்கையையும் காப்பாற்றிக்கொள்ள அரசு கையில் எடுத்துள்ள 'அரிய', அதேவேளை உறுதியான கேடயம் அது.

தமிழ்மக்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையையும் நியாயப்படுத்த, சரிப்படுத்த பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கும் என்ற வாய்ப்பாடு பயன்படுத்தப்படும் நிலை நீங்கும் என்பதற்கான வாய்ப்பு இல்லை. பதினெட்டாவது அரசமைப்புத் திருத்தம் அந்த நிலைப்பாட்டை கால வரையறை எதுவுமின்றி நீடிக்க உதவும் என்பதே இப்போதைய யதார்த்தம். எவராலும் அதனைக் குறைக்கவோ, குலைக்கவோ முடியாது. இறுதியில் இது தமிழ் மக்களின் இன அடையாளத்தை ஒழிக்கும் ஆபத்துக்கு இட்டுச்செல்லும்.

# முல்லைத்தீவு, விசுவமடு மேற்குப் பகுதியில் 409 குடும்பங்கள் இன்று மீள்குடியமர்வு

## அரச அதிபர் தகவல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் விசுவமடு மேற்கில் 409 குடும்பங்கள் இன்று செவ்வாய்க் கிழமை மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவில் ஒன்றான விசுவமடு மேற்குக் கிராம அலுவலர் பிரிவிலேயே மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

வன்னிப்பகுதியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த நிலையில் செட்டிக்குளம் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினரே மீளவும் தமது பகுதிகளுக்கு மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

409 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 301 குடும்ப அங்கத்தவர்களே இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியிருந்தவர்களும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர். எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையே இவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர். இதில் 445 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 411 குடும்ப அங்கத்தவர்கள் அடங்குவர்.

இடம்பெயர்ந்துள்ள நிலையில் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதி அன்று விசுவமடு மகாவித்தியாலயத்துக்கு வருகைதர வேண்டும். அங்கு மாவட்டச் செயலக அதிகாரிகளாலும் இராணுவ அதிகாரிகளாலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து விசுவமடு மேற்கில் மீள்குடியமர அனுமதிக்கப்படுவார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இது வரையும் 16 ஆயிரத்து 769 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் - என்றார் அவர். (ஐ-14)

# இடம்பெயர்ந்தவர்கள் வீடுகளைப் புனரமைக்க குறைந்த வட்டியுடன் இலகு கடன் திட்டம்

## இலங்கை வங்கி வழங்க முன்வந்துள்ளது என்கிறார் அமைச்சர் டியூ

கொழும்பு, செப். 14

வடபகுதியில் இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியுள்ள மக்கள் புதிதாக வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கும் சேதமுற்றுள்ள தமது வீடுகளைத் திருத்திக் கொள்வதற்கும் இலங்கை வங்கியுடன் இணைந்து அரசு அவர்களுக்கு குறைந்த வட்டியுடன் கடன் வசதிகளை வழங்கவுள்ளது. அதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சரான டியூ குணசேகர இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசு மூலமாக இடம்பெயர்ந்தோருக்கு 50 ஆயிரம் வீடுகள் நிர்மாணித்து வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் 50 ஆயிரம் வீடுகளென்ற இத்தொகை இடம்பெயர்ந்த குடும்பங்கள் அனைத்துக்கும் போதுமானதல்ல என்பதோடு, இவற்றை நிர்மாணித்து முடிப்பதற்கு நீண்டகாலம் செல்லும் என்பதாலும் அரசு மக்களுக்குக் கடன்களை வழங்கத்தீர்மானித்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்துக்கு அமைய அரசிடமிருந்து அல்லது வேறு எந்தவொரு நிறுவனத்திடமிருந்தோ வீடோ அல்லது கடனையோ இதுவரை பெற்றுக் கொள்ளாத வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு புதிதாக வீடுகளை நிர்மாணித்துக் கொள்ளவும் மற்றும் சேதமுற்ற வீடுகளைத் திருத்திக் கொள்ளவும் இக்கடன் வசதிகள் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்கடன் வழங்கல் தொடர்பாக இலங்கை வங்கி 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதோடு இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியுள்ள குடும்பமொன்று 4% வருடாந்த வட்டி என்ற அடிப்படையில் 10 ஆண்டுகளில் மீளச் செலுத்தக் கூடியதாக அதிகபட்சக் கடன் தொகையாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்களைப் பெற இயலுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-22)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் திடீர் விஜயம்

## சுகாதார நிலைமைகளைப் பார்வையிட்டார்

கொழும்புத்துறை, செப். 14

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று திங்கட்கிழமை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

வைத்தியசாலையின் உள்ளக, சுற்றுப்புறச் சூழல் சுகாதார நடவடிக்கைகளை நேரில் அவதானிக்கும் பொருட்டு இந்த திடீர் விஜயம் இடம்பெற்றதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை 7.30 மணிக்கு வைத்தியசாலைக்குச் சென்ற அமைச்சர் நோயாளர் விடுதிகள், கழிப்பிடங்கள் மற்றும் கழிவுநீர் வடிகால்கள், வைத்தியசாலைச் சுற்றுப்புறங்கள் என்பவற்றைப் பார்வையிட்டார்.

சுகாதார, சுத்திகரிப்புப் பணிகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்படாமை குறித்து கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை அடுத்தே அவர் இக்கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிற்றூழியர், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கடமையுணர்வுடனும் பொறுப்புடனும் பணியாற்றி வைத்தியசாலையைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கிப்படுகிறது.

போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், வைத்தியர்கள், ஊழியர்களுடன் கலந்துரையாடி சுகாதார முன்னெடுப்பு ஆலோசனைகளையும் அமைச்சர் வழங்கியதாகக் கூறப்படுகிறது. (த-135)

# கம்பளையில் கோஷ்டி மோதல் பெண்கள் உட்பட 8 பேர் காயம்

கொழும்பு, செப்.14

கம்பளை - கீரபனவில் இரு முஸ்லிம் கோஷ்டிகளுக்கிடையே நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் ஐந்து பெண்கள் உட்பட எட்டுப்பேர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என கம்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த மோதல் சம்பவத்தில் பல வீடுகள் சேதமானதோடு இரண்டு ஓட்டோக்களும் முற்றாகச் சேதமடைந்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-சி)

# தயா மாஸ்டருக்கு அரச ஆதரவு தொலைக்காட்சியில் வேலை?

## இணையத் தளம் ஒன்றில் தகவல்



கொழும்பு, செப்.14

புலிகளின் ஊடகத்துறைப் பொறுப்பாளராக இருந்த தயா மாஸ்டர் அரச ஆதரவுத் தொலைக்காட்சி ஒன்றில் செய்திப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகிறார் என இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் ஊடகத்துறைப் பொறுப்பாளராக தயா மாஸ்டர் இருந்தபோது கொழும்பிலுள்ள தமிழ், சிங்கள ஊடகவியலாளர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டாண் தமிழ் ஒலி தொலைக்காட்சியின் செய்திப் பணிப்பாளராகவே இவர் கடமையாற்றுகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தயா மாஸ்டரும், புலிகளின் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய ஜோர்ஜ் மாஸ்டரும் படையினரிடம் சரணடைந்தனர். பின்னர் இவ்விருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஓ-சி)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 30 15.09.2010 | |
| | புதன்கிழமை |
| திதி: | : அட்டமி |
| | பி.இ.04.48 வரை |
| நட்சத்திரம் : | கேட்டை |
| | மு.இ.08.27 வரை |
| சுபநேரம் | : 04.33-06.03 வரை |
| ராகுகாலம் | : 12.03-01.33 வரை |

# வடக்கு மாகாண இலக்கிய விழா ஒக். 1இல் கிளிநொச்சியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 14

வடமாகாண தமிழ் இலக்கிய விழா திட்டமிட்டபடி அடுத்த மாதம் முதலாம் திகதிமுதல் மூன்று தினங்கள் கிளிநொச்சியில் இடம்பெறும் என யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து திருமறைக் கலாமன்றமும் யாழ். மத்திய கல்லூரியும் நிகழ்ச்சிகளுக்காக அழைக்கப்பட்டுள்ளன. இம்முறை கூடுதலாக கிளிநொச்சியில் இருந்தே நிகழ்வுகள் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றன.

இதன்போது ஆய்வரங்குகள், நூல் வெளியீடு, விருது வழங்கல் போன்றன இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்து பேராளர்களின் பெயர் விவரங்கள் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 3ஆம் நாள் ஆளுநர் விருது வழங்கப்படும்.

கலந்துகொள்ளும் பேராளர்களுக்குத் தங்குமிடவசதி மற்றும் ஏனைய வசதிகள் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் இலவசமாக வழங்கப்படும்.

இதேவேளை மேற்படி மூன்று நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பான மேலதிக விவரங்கள் விழா ஏற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள தொலைபேசி இலக்கமான 021326 6990 உடன் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம் என சலாசார உத்தியோகத்தர் மேலும் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர்

## முருகேசு சண்முகம்



கடந்த 15.08.2010 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் முருகேசு சண்முகம் அவர்களின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி, தந்தி, தபால், பத்திரிகை மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும் இன்னோரன்ன உபகாரங்களை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் தயவுசெய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அன்னை மடியில் 18.04.1926
ஆறுமுகன் அடியில் 15.08.2010

57, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
0212226129, 0212228020

குடும்பத்தினர்

## கூறுவிலை கோரல்

சபையின் யாழ். தலைமைக் காரியாலயத்தில் அலுமினிய பாட்டிசன் வேலை செய்வது தொடர்பான கூறுவிலைப் பத்திரங்கள் கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு அலுவலக நேரத்தில் 18.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று 23.09.2010 ஆம் திகதிக்கும் முன்னர் கூறுவிலைப் பெட்டிக்குள் இடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம்,
முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை

## சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்

**Kids Park Pre School & Day Care Center**



அநேக வேலை செய்யும் தாய் - தந்தையர்களின் வேண்டு கோள்களுக்கு இணங்க! எம் நிபுணத்துவ சேவையை முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் வழங்கி வருகின்றோம்!! (காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை)

* சிறார்களுக்கும் குழந்தைகளுக்கும் மிகப் பாதுகாப்பான சூழல் 2+ Play Group - 3+ Montessori 3+ Pre-School என்ற வகையில் உலகத் தரம் வாய்ந்த ஆங்கில - தாய் மொழி மூல பயில்வுகள்; விளையாட்டு, ஆடல்,பாடல் செயற்பாடுகள்

* ஆரம்பக் கல்வி பயிலும் பாடசாலைச் சிறார்கள் 12.30 தொடக்கம் 5 மணி வரையும் விளையாடி, மகிழ்வாகக் கற்று உறங்கி நல்வாழ்வு வாழ....

* களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கைவரை - பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் அரவணைப்பு - அர்ப்பணிப்பு 2011 ஆம் ஆண்டுக்கு வரையறுக்கப்பட்ட இடங்களே உண்டு. ஒக்ரோபர் 15 இற்கு முன் விண்ணப்பிக்கவும். ஒக்ரோபர் 17 விஜயதசமி நாளில் ஏடு தொடக்கலுடன் ஆரம்பம்.

பா.தனபாலன் - பணிப்பாளர்
(M.Phil in Pre School Education)
சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும், 528, பலாலி வீதி, திருநெல்வேலி.

தொடர்புகளுக்கு: 0779360607

குழந்தைகள் பராமரிப்பில் அர்ப்பணிப்பும் - ஆர்வமும் உள்ளவர்கள் பணிநிலைக்கு விண்ணப்பிக்க முடியும்

## வாகனப் புத்தகம், லைசன்ஸ் இன்றும் நாளையும் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 14

ஒரு தொகுதி பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்கள் இன்றும் நாளையும் யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன என்று மோட்டார் திணைக்கள அதிகாரி ஏ.எம்.குணரத்தினம் அறிவித்துள்ளார். இவற்றை விநியோகிப்பதற்காக கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் வருகைதந்துள்ளதால் சம்பந்தப்பட்டவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்களுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-16)

## தவறிவிட்டது

இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு என்னும் முகவரியுடைய செல்வி சுபாசினி ஆனந்தகுமாரசாமி என்பவரின் தே.அ.அ. (816751772 V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.: 0773597318

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம், 1977 ஆம் ஆண்டு கார்த்திகை 1 ஆம் பாதம் உதயத்தில் சுக்கிரன், சனி 12 செவ்வாய் உள்ள அழகிய தோற்றமுடைய சொந்தமாக தொழில் நடத்தி வரும் மணமகனுக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அழகிய மணமகளை எதிர்பார்க்கிறோம். தொடர்பு: 0775590935, 0776199094

## மரண அறிவித்தல்

### பொன்னையா சுந்தரலிங்கம்



கோப்பாயைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரலிங்கம் 11.09.2010 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் வல்லிபுரம், காலஞ்சென்றவர்களான பொன்னுப்பிள்ளை, முத்துப்பிள்ளை, கந்தையா, முத்தையா, சின்னப்பு, செல்வரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இரத்தினம், குமாரசாமி, தனபாலசுப்பிரமணியம், கந்தசாமி,காலஞ்சென்ற சதாசிவம் ஆகியோரின் மைத்துனரும் வசந்தாதேவி, ஸ்ரீறஞ்சினி, வரதராஜன், ஆனந்தராஜன் ஆகியோரின்பாசமிகு தந்தையும் சிவசுப்பிரமணியம் தவராசலிங்கம், பத்மதர்சினி, நிதி ஆகியோரின் அன்பு மாமனும் நித்தியரூபன், ஜெயந்தினி, சுகிர்தரூபன், நிரஜா, ஹரிஷ், விதுஷா, சேயோன், அபிஷன், அபர்ணா,அமரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
தொடர்பு:
தொ.பே.: 0770200735 (103315)

தகவல்:
குடும்பத்தினர்.

Quick Learning Course

**Spoken English with Grammar**

Duration 1 Month Rs.2000.00

உரையாடட் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. அடியகளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel:021 2224550 HotLines: 0777222422 / 0714299935

Batch - 1 20-09-2010 - 9.00am - 11.00am
Batch - 2 20-09-2010 - 3.00pm - 05.00pm
Batch - 3 22-09-2010 - 9.00am - 11.00am
Batch - 4 22-09-2010 - 3.00pm - 5.00pm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான இ.போ.ச. பஸ்சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 14

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு உட்பட்ட ஆழியவளைக்கான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பஸ்சேவை இன்று செவ்வாய்க்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளர் க. கணேசபிள்ளை உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. அதனை அடுத்தே மீளக்குடியமர்ந்த மக்களின் நன்மை கருதி பஸ்சேவை ஆரம்பிக்கப் படுகிறது. எனினும் ஆரம்பத்தில் பருத்தித்துறை பஸ் டிப்போவிலிருந்து ஆழியவளை வரையும் ஒரு பஸ் மட்டுமே சேவையில் ஈடுபடவுள்ளது. அந்த பஸ் சேவை யானது தினமும் காலை, மதியம், மாலை என மூன்று முறை இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. 90ஆம் ஆண்டு காலப்பகுதிகளுக்கு முன்னர் பருத்தித்துறை - ஆழியவளை, யாழ்ப்பாணம் - ஆழியவளை என மூன்று பஸ்கள் தினமும் சேவையில் ஈடுபட்டிருந்தன.

தற்போது நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மீளவும் ஆழியவளைக்கான பஸ் சேவை இன்று ஆரம்பிக்கப்படுகிறது என இலங்கைப் போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையானர் க.கணேசபிள்ளை தெரிவித்தார். (த-14)




# அரியாலைப் பகுதி விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் விதை நெல், உரம்

கொழும்புத்துறை,செப்.14

நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட அரியாலைப் பகுதி விவசாயிகளுக்கு நல்லூர் கமநல சேவைகள் அலுவலகத்தினால் விதை நெல், உரம் என்பன மானிய அடிப் படையில் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரியாலை கமநல அபிவிருத்திச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் விவசாயிகளுக்கு விவசாய உள்ளீட்டு உதவிகள் வழங்கப் படவுள்ளன.

அடுத்த வாரத்தில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென கூறப்படுகின்றது.

அதேவேளை இப்பகுதி விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதைக் காண முடிகிறது.

குறிப்பிட்ட அளவு தொழிலாளர்களே இப்பகுதிக்குள் சென்று விவசாய நடவடிக்கையில் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலி கால்நடைகளின் தாக்கத்தில் இருந்து நெற் பயிர்களை பாதுகாக்கும் பொருட்டு அனுமதிக்கப்பட்ட பகுதி வயல் நிலங்களைச் சுற்றி முட்கம்பி வேலிகள் விவசாயிகளின் உதவியுடன் அமைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாவலடி முதல் அரியாலை முனை வரையிலான விவசாய நிலங்களில் 15 வருடங்களின் பின்னர் இம்முறை முதல் முறையாக பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(த-135)

# சாவகச்சேரி வைத்தியசாலையின் சிறுவர் விடுதி இன்று கையளிப்பு

தென்மராட்சி,செப்.14

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் ஜப்பானிய நிறுவனத்தினால் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி சிறுவர் விடுதிக் கட்டடம் மற்றும் சிறுவர் பூங்கா ஆகி யன இன்று செவ்வாய்க்கிழமை வைத்திய சாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப் படவுள்ளன.

விடுதி மற்றும் சிறுவர் பூங்கா ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கு நிதி உதவி வழங்கிய நிறுவனப் பிரதிநிதிகள் இவற்றினை உத்தியோகபூர்வமாக கையளிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்துகொள்வார்.

இந்தக் கட்டடம் கடந்த 10ஆம் திகதி இந்து சமயப் முறைப்படி பால் காய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. (த-207)

# டெங்கு பரவும் அபாயம் இன்னும் தென்மராட்சியில் நீங்கிவிடவில்லை

தென்மராட்சி,செப்.14

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப் படும் 117 பேர் இதுவரை இனங்காணப் பட்டுள்ளனர்.

இந்த மாதத்தில் 10ஆம் திகதி வரை 4 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை - மழைகாலம் அண்மிப்பதால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடியதாக இனங் காணப்பட்டுள்ள இடங்களைத் துப்புரவு செய்து டெங்கு பரவாமல் தடுக்குமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

டெங்கு பரம்பல் பிரதேசங்களில் புகையூட்டல் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# ஓட்டோ குடை சாய்ந்ததில் கர்ப்பிணி மயக்கம்; சாரதி படுகாயம்

வடமராட்சி,செப்.14

கர்ப்பிணிப் பெண் ஒருவரை ஏற்றி வந்த ஓட்டோ ஒன்று குடை சாய்ந்ததில் , கர்ப்பிணிப் பெண் மயக்கமடைந்தார். இதன் சாரதியும் படுகாயத்துக்குள்ளானார்.

புலோலி சாரையடியில் சில தினங்களுக்கு முன்னர் இரவு 10 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறை நாலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் ஒருவரை, அவரது தாயார் சகிதம் மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு ஓட்டோ ஒன்று ஏற்றி வந்தது. குறித்த ஓட்டோ மிக வேகமாக வந்து கொண்டிருக்கையில் சாரையடியில் வீதி அகலிப்பு வேலை காரணமாக வீதியின் நடுவே வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த தார் பீப்பாக்களில் மோதி குடை சாய்ந்தது.

அருகில் உள்ள காவலரணில் இருந்த படையினரும், சம்பவம் நடைபெற்றதைக் கண்ட உணவக உரிமையாளரும் குடை சாய்ந்த ஓட்டோவிலிருந்து கர்ப்பிணிப் பெண்ணையும் தாயாரையும் மீட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் சேர்ப்பித்தனர்.

மயக்கமடைந்த கர்ப்பிணிப் பெண் தற்போது சிகிச்சைபெற்று வருகிறார். அவரது தாயார் எதுவித பாதிப்புக்கும் உள்ளாகவில்லை. (த-236)

# வெளியே சிந்தும் பொதுக்கிணற்று நீரால் பயணிகளும், மாணவர்களும் அவதி!

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்.கே.கே. எஸ் வீதிக்கும் யாழ். இந்துக் கல்லூரி வீதிக்கும் இடையில் உள்ள பொதுக்கிணற்றில் இருந்து வெளியேற்றப்படும் நீர் தேங்கி நிற்பதால் பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது.

இக்கிணறு குடிதண்ணீர்ப் பொதுக் கிணறாக இருப்பதால் அயலிலுள்ள பலரும் இக்கிணற்றில் இருந்து நீரினைப் பெறுகிறார்கள். இதன்போது வெளியேற்றப் படும் நீர் பாய்ந்து செல்வதற்கு வாய்க்கால் வசதி இல்லாத காரணத்தால் அதிகளவு நீர் கிணற்றினை சுற்றித் தேங்கி நிற்கிறது.


இதனால் கிணற்று நீரும் மாசடையும் வாய்ப்புக்களும் உள்ளன.

இது தவிர இவ்வீதியால் பயணிப்போர் நீர் தொடர்ந்து நிற்பதால் உண்டாகியுள்ள சகதியில் வழுக்கி விழுந்து விபத்துக்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இக்கிணற்றிலிருந்து நீரை அள்ளும்போது வெளியே சிந்தும் நீர் பாய்ந்தோட உரிய வடிகாலமைப்பை சம்பந்தப்பட்டோர் ஏற்படுத்தித் தரவேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (எ-313)

# யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்ற சிறுமிக்கு 6 மாதங்களின் பின்னர் சிகிச்சைத் திகதி

## அதுவரை காத்திருக்க வேண்டிய அவலநிலை




யாழ்ப்பாணம்,செப்.14

தனது மகளைச் சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற பெண் ஒருவருக்கு 6 மாத காலத்திற்குப் பின்னர் வருமாறு கூறப்பட்டு திகதி கொடுக்கப்பட்ட சம்பவமொன்று யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பக மேலும் தெரிய வருவதாவது:-

குறித்த பெண் தனது 8 வயதுப் பிள்ளைக்குக் காதையும் கழுத்தையும் அண்டிய பகுதியில் ஏற்பட்ட வீக்கத்துக்குச் சிகிச்சைபெறச் சென்றுள்ளார். பரிசோதனைகளின் பின்னர் அவருக்குச் சில மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. பின்னர் நாளை வந்து 'கிளினிக்கில்' திகதியைப் பெறுமாறு கூறப் பட்டது.

அதன்படி மறுநாள் அங்குசென்ற பெண் 'கிளினிக்கில்'' திகதியைப் பெற்றபோது 6 மாத காலத்தின் பின்னரான திகதியே வழங்கப்பட்டது. இது தொடர்பாக குறித்த பெண் அங்குள்ளவர்களிடம் கேட்டபோது குறித்த திகதி வரையான காலப் பகுதியில் தொடர்ந்து பதிவுகள் இருப்பதால்தான் 6 மாத காலத்தின் பின்னரான திகதி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அப்படியாயின் தனது பிள்ளையின் நோய்க்கு சிகிச்சை பெற என்ன வழி என வினாவியபோது வெளியில் தனியார் வைத்தியசாலையில் சென்று சிகிச்சை பெறுமாறும் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்தப் பெண் நேரடியாக 'உதயன்' அலுவலகத்துக்கு வந்து முறைப்பாடு செய்தார்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நோயாளிக்கு உரிய நேரத்தில் சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்யவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-15)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் உற்சவத்தையொட்டி இராணுவத்தின் 51ஆவது படையணியினரால் கடந்த 9ஆம் திகதி ஆலயத்துக்கு வந்த மக்களுக்கு உணவுப் பொருள்கள், குளிர்பானங்கள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

படையினர் உணவுப் பொருள்களை விநியோகிப்பதையும் ஆலயத்துக்கு வந்த அடியார்கள் அவற்றை வரிசையில் நின்று பெறுவதையும் படங்களில் காணலாம்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















யாழ்ப்பாணம் 'கேற்வே' நிறுவனத்தில் பயிற்சிகளை முடித்துக் கொண்டவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர் ஒருவரால் மலர்மால்ல அணிவித்து வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும், ஆசிரியர்களுக்கான ஐ.சீ.டீ.எல் பயிற்சி நெறியை நிறைவு செய்த ஆசிரியை ஒருவருக்கு யாழ்ப்பாணம் 'கேற்வே' நிறுவன நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனும், ஏ.எஸ்.ஏ.பி கற்கை நெறியைப் பூர்த்திசெய்த மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினரும் 'ஜோன் கீல்ஸ்' ஆங்கில புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு 'கேற்வே' நிறுவன கணக்காளர் எ.கனகசபையும் சான்றிதழ்கள் வழங்குவதை அடுத்துள்ள படங்களிலும் ஆசிரியர்கள் சார்பில் எஸ்.இராமநாதன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் இறுதிப் படங்களிலும் காணலாம்.

# 28 வருடங்களுக்கு மேலாக மாணவர்களுக்கு கணனி அறிவை வழங்கும் முன்னணி நிறுவனம் IDM

இந்து சமுத்திரத்தின் நித்திலமாகிய இலங்கைத் திருநாட்டில் கடந்த 28 வருடங்களுக்கு மேலாக சேவை ஆற்றிவரும் நிறுவனங்களில் ஒன்றாக IDM திகழ்கிறது IDM கணனிக்கல்வி நிறுவனமானது எமது மாணவர்களுக்கு முன் எழுப்பப்பட்டு வரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்விச் சவாலை முறியடிப்பதற்கு 28 வருடங்களுக்கு மேலாக கணனிச்சேவை ஆற்றிவரும் மூத்த முன்னணி நிறுவனம் என்பது அனைவரும் அறிந்த ஓர் பெருமைக்குரிய விடயம். இன்று நவீன உலகில் விஞ்ஞானம் மிக வேகமாக வளருகின்ற காலத்தில் அவ்வப்போது தகவல் தொழில்நுட்பக் கல்வியில் ஏற்படும் மாற்றங்களை உணர்ந்து அம்மாற்றங்களை எம்மாணவர்களுக்கு IDM உடனுக்குடன் வழங்கி வருகிறது. அத்தோடு மாறி வருகின்ற உலக நிலைமைகளுக்கேற்ப சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகளை இலங்கையர்களுக்கு IDM வழங்குகிறது. தமது எதிர்கால இலட்சியத்தை தகவல் தொடர்பாடல் கல்வி ஊடாகவோ அல்லது வணிக முகாமைத்துவக் கல்வி ஊடாகவோ அடைய விரும்பும் மாணவர்களுக்கு நிச்சயம் IDM Diploma ஓர் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயம் இல்லை. ஏனெனில் IDM Diploma கல்வி நெறியானது 1981இல் ஆரம்பிக்கப்பட்டு இற்றைவரை சுமார் 28 வருடங்கள் அனுபவம் கொண்ட ஓர் கற்கை நெறி ஆகும். அத்தோடு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியில் இலங்கையில் முதலாவதாக அரம்பிக்கப்பட்ட Diploma என்ற பெருமை IDM Diploma கல்விக்கே சாரும்.

அத்தகைய பெருமைவாய்ந்த IDM Diploma கற்கை நெறியை க.பொ.த. சாதாரண அல்லது உயர்தரப் பரீட்சைக்குப் பின் IDM Diplomaவினை கற்று தங்கள் உயர்கல்வி இலட்சியங்களை அடைந்த மாணவர்கள் பல இலட்சம் பேர். உங்கள் உயர்கல்வி இலட்சியத்தை அடைய IDM Diploma ஏன் சிறந்தது என்பதற்கு சில காரணங்கள்.

1) 28 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைத் தன்னகத்தே கொண்ட இலங்கையின் முதலாவது Diploma நெறி "அனுபவங்களை அனுபவங்களினால் அனுபவங்களினூடாகப் பெறுவதே கல்வி என்கிறார். கல்வியலாளர் யோன் டூஜி அவர் கூறியவாறு IDM 28வருடகால அனுபவங்களின் ஊடாக தான் பெற்ற அனுபவக் கல்வியினை IDM Diplomaவின் ஊடாக பறை சாற்றி வருகின்றது. அத்தோடு IDM தான் கடந்து வந்த 28 வருடகால அனுபவப் பாதையில் இற்றைவரை சுமார் 200,000இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு IDM Diploma வழங்கி பெருமையை பறைசாற்றி நிற்கின்றது. அனுபவம் வாய்ந்தவர்கள் எப்போதும் தம்மைத்தாமே முதல்வர்கள் என்று கூறுவதை காட்டிலும் தம்மிடம் சேவையைப் பெற்றவர்கள் அல்லது பெறுகின்றவர்களை முதல்வர்கள் ஆக்கு வதில் பெருமிதம் கொள்வார்கள். அந்த வகையில் IDM தம்மிடம் கற்ற மாணவர்களை அல்லது கற்கிற மாணவர்களை முதல்வர்கள் ஆக்குவதில் பெருமிதம் கொள்கிறது.

வி
ளம்பர
வரணம்

2) IDM Diploma நெறியானது உள்ளூரிலும் சர்வதேசத்திலும் அங்கீகாரம் பெற்ற ஒன்றாகும். நீங்கள் எங்கு சென்றாலும் அங்கு கற்ற விடயத்திற்கு சரியான அல்லது அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ் இல்லாவிட்டால் அந்தக் கல்விக்குச் செலவழித்த பணம் விரயமாகிறது. ஆனால் IDM Diploma கல்வி நெறியானது இலங்கையின் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்மானியில் பிரசுரிக்கப்பட்ட பாடநெறி ஆகும். IDM Diploma வினை கற்பதன் ஊடாக ஒரு தொழில் வாய்ப்பினைப் பெற்றிடலாம் என்பதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை ஒரு தக்க ஆதாரமாக கொள்ளலாம். மேலும் IDM Diploma நெறியானது சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்டமைக்கான ஒரு சான்றாக் அக்கல்வி நெறியானது பிரித்தானியாவின் EDEXCEL INTERNATIONAL UK மற்றும் NCC - UK கல்விச் சேவையினாலும் அங்கீகரிக்கப்பட்டதனை குறிப்பிடலாம். இவற்றுக்கு மேலாக IDM, NCC - UK நிறுவனத்திடம் இரண்டிற்கு மேற்பட்ட தடவைகள் விருதினைப் பெற்றிருப்பதனை குறிப்பிடலாம். அத்தகைய அங்கீகாரம் மிகுந்த DIPLOMA கல்வியை பாது காத்து தாய்த்திருநாட்டு மாணவர்களுக்கு வாழங்குகின்ற இன்றை IDM தலைமுறையினர் பெருமைக்குரியவர்களாகின்றனர்.

பிரித்தானியாவின் இளநிலைமானிப்பட்டப் படிப்பின் (DEGREE) முதலாவது பருவ காலத்திற்கு IDM DIPLOMA ஒப்பீட்டளவில் சமனானதாகும். வெளிநாட்டிற்குச் சென்று தமது உயர்கல்வியைப் பெற விரும்பும் மாணவர்களே! நீங்கள் உங்களுடைய ஒவ்வொரு துளிப்பணத்தையும் விரயமாக்காமல் பாதுகாப்பதற்கு சிறந்த வழி IDM Diplomaவினை பயில்வதே ஆகும். ஏனெனில் IDM Diploma ஆனது பிரித்தானியாவின் பட்டக் கல்விநெறியினை Semester 1 அமைவாக இருக்கிறது. எனவே மாணவர்கள் மீண்டும் பணம் செல வழிக்காமல் அல்லது குறைந்த செலவில் Semester 1 இனை IDMல் கற்றிட முடியும்.அத்தோடு IDM Diploma வின் ஊடாக இது வரை வெளிநாட்டுப் பட்டப் படிப்பினைக் கற்பதற்கான வாய்ப்பை சுமார் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பெற்றுள்ளார்கள். ஆகவே நீங்களும் IDM Diploma கற்கை நெறியைப் பயின்று 1000இல் ஒரு வராகுங்கள்.

3) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியில் ஏற்படும் மாற்றங்களை நிகழ்நிரைப் (UPDATE) மெருகூட்டப்பட்ட Diploma பாடநெறி IDM பாடநெறிகள் யாவும் அதற்கென சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட பாடவிதானக் குழுவினரால் அப் பாடங்களில் ஏற்படும் மாற்றங்கள் நிகழ் நிலைப்படுத்தப்படுகின்றது. IDM Diploma கல்விநெறியும் இப்பாட விதான சிறப்புக் குழுவினரால் கண்காணிக்கப்படுகிறது. இக் குழுவில் இடம்பெற்றுள்ள அனைவரும் சிறப்புத் தேர்ச்சியும் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமும் உடையவர்கள். இந்நிகழ் நிலைப்படுத்தலுக்கமைய IDM Diploma இம்முறை மாணவர்கள் தம்முடைய திறமைகளை வெளிக்காட்ட சந்தர்ப்பம் வழங்குகின்றது. அதாவது இம்முறை மாணவர்கள் இரண்டு விருப்பமான பாடங்களை தெரிவு செய்து அதில் சிறப்புத் தேர்ச்சி பெறமுடிகிறது. இவற்றுள் மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியில் 6 சிறப்புப் பாடங்களையும் வணிக முகாமைத்துவ கல்வியில் 5 சிறப்புப் பாடங்களையும் IDM வழங்குகின்றது. அதில் மாணவர்கள் தமக்கு விருப்பமான சிறப்புப் பாடத்தைக் கற்க முடியும்.

4)IDM Diplomaஇனைக் கற்பதன் ஊடாக 2 சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இன்றைய பொருளாதாரச் சூழலில் அங்கீகாரம் உடைய சான்றிதழைப் பெறவே மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குமிடத்து IDM Diploma வினை மாணவர்கள் பயில்வதன் ஊடாக இரண்டு அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ்களைப் பெறமுடிகிறது. ஒன்று IDM DIPLOMA சிறப்புச் சான்றிதழ் மற்றையது EDEXEL INTERNATIONAL - UK இற்கு 40 பவுண்ட்ஸ் செலுத்துவதன் மூலம் பிரித்தானியாவின் EDEXCEL சான்றிதழையும் பெறமுடிகிறது. இச்சான்றிதழ் பெறுவதன் மூலம் வெளிநாட்டில் கல்வி பயிலும் உங்கள் கனவை நனவாக்க முடியும்.

Edexel accrediated IDM Diploma in ICT

IDM Diploma inictயை கற்க விரும்புகின்ற மாணவர்கள் பின்வரும் துறைகளில் விருப்பமான பாடங்களைப் பயின்று சிறப்புத் தேர்ச்சி பெறலாம்.

(Specialized in Software development, Computer Networks, Hardware Engineering, Multimedia systems, Web technologies, Electrical and Electronic Engineering)

Edexcel accrediated IDM Diploma Business Management

IDM Diploma in Business Management இனை கற்க விரும்புகின்ற மாணவர்கள் பின்வரும் துறைகளில் விருப்பமான பாடங்களை பயின்றுசிறப்புத் தேர்ச்சி பெறலாம்.

(Specialized in Management, Marketing, Finance, Human Resources, E-Business)

# தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் துறைகளில் உயர்கல்வியை வழங்கிவரும் IIS நிறுவனம்

உலகின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் துறையிலே உயர் கல்வியினை வழங்கிவரும் பிரித்தானிய BCS (British Computer Society ) நிறுவனமானது 1969ஆம் ஆண்டிலிருந்து தனது சேவையை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனம் வட இலங்கையிலே தனது கல்விச் செயற்பாட்டை விஸ்தரிக்கும் முகமாக IIS CITY CAMPUS நிறுவனத்துடன் இயங்கவுள்ளது. இந்நிறுவனத்தின் கற்கை நெறிகள் யாவும் இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வட இலங்கையிலே BCS நிறுவனத்தின் நேரடியான அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பயிற்சி மையம் IIS CITY CAMPUS என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

BCS நிறுவனம் உலகில் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களின் ஊடாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் துறைகளில் கற்கைநெறிகளினை அறிமுகப் படுத்தி வருகின் றது.

அதிகரித்து வரும் உலகின் தகவல் தொழில் நுட்பத் துறைக்கு ஏற்பவும், தொழில் வழங்கு நரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும் மிகச் சிறந்த முறையிலேயே வடிவமைக்கப்பட்ட கல்வி முறைமையை யும் அதற்கான தகைமைகளை யும் மூன்று பிரிவுகளாக Certificate in IT, Diploma in IT, Professional Graduate Diploma in IT என வழங்கு கின் றது. இக்கற்கை நெறிகள் இரண் டாண்டு பயிற்சிக் காலத்தைக் கொண்ட தாகும்.

மேலும் இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள், தகவல் தொழில் நுட்பத் துறை சார்ந்த முகாமைத்துவமும் தகவல் தொழில் நுட்பத்துறை சார்ந்த பொறியியல் துறை என் பற்றில் தமது முது மாணிக் கற்கை நெறிகளை (M.Sc) மேற்கொள்ள முடியும்.

உலகின் உயர் கல்வி நிறுவனங்களினாலும் முன்னணி வகிக்கும் தொழில் தருநர்களினாலும் அங்கீகரிக்கப்பட்ட இப் பயிற்சி நெறியானது குடாநாட்டு மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். கணனி உயர் கல்விக்கு அனுபவம்மிக்க எமது நிறுவனத்தில் இக்கற்கை நெறியை நீங்கள் மேற்கொள்வதனூடாக இக் கற்கை நெறியின் வெற்றியை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் HND கற்றை நெறிக்கு இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு முற்றிலும் இலவசமாக BCS கற்கை நெறிகளினைப் பூர்த்தி செய்வதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் இரண்டு வருட காலத்தில் மாணவர்கள் Edexcel நிறுவனத்தின் HND சான்றிதழைப் பெற்றுக் கொள்வதோடு BCS நிறுவனத்தின் சான்றிதழையும் பெற்றுக் கொள்ள முடியும்.

உலகின் தலை சிறந்த இரண்டு நிறுவனங்களின் சான்றிதழை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை IIS CITY CAMPUS நிறுவனம் குடாநாட்டு மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது. இது இதுவரை எந்த ஒரு நிறுவனமும் சிந்திக்காத வழங்காத வாய்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்கைதிகள் முன்னோக்கிச் செல்வதற்கும் நல்லதைச் செய்யவும் சந்தர்ப்பம் வழங்கவேண்டும்

## யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க

யாழ்ப்பாணம்,செப்.14

கைதிகளை பின்னோக்கிய மனிதர்களாகப் பார்க்கக்கூடாது அவர்கள் முன்நோக்கிச் செல்லவும் நல்ல நிலைக்கு வரவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார் யாழ். சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க.

கைதிகள் தினத்தையொட்டி கடந்த சனிக்கிழமை 24 கைதிகளை விடுதலை செய்யும் நிகழ்வுக்கு தலைமை வகித்து நடத்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

சூழ்நிலைகள்தான் மனிதனைத் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றன. அவர் திருந்தி மனிதனாக வாழக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தால் நிச்சயமாகப் பயன் கிடைக்கும். எமக்கு எல்லா மக்களும் ஒன்றுதான். இப்போது விடுதலை செய்யப்படும் கைதிகள் நாளை தலைசிறந்த மனிதர்களாக உருவாகுவார்கள்.

இந்த மனிதர்கள் தமது வாழ்க்கையை சிறப்பானதாகத் தாமே அமைத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். இவர்கள் மீண்டும் சிறைக்கு வரமாட்டார்கள். சிறையில் இருந்து விடுதலையாகும் மனிதர்கள் திருந்திய மனிதர்களாக சமூகத்தில் தமது எதிர்கால வாழ்வை அமைத்துக்கொள்வார்கள் என்று ஜனாதிபதியும் நம்புகிறார்.

விடுதலை பெறும் இந்த மனிதர்களிடம் பல வகையான திறமைகள் உள்ளன. அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய நிகழ்வுகள் இப்போதுதான் முதல் தடவையாக நடைபெறுகின்றன. இத்தகைய திறமைகளை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் தொடர்ந்தும் நட்த்தப்பட வேண்டும் - என்றார்.

சிறைக்கைதிகளிடையே நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகளை சிறைச்சாலைகள் முன்னாள் அமைச்சர் மகேன் குணசேகர வழங்கினார். இந்நிகழ்வில் பிரதான ஜெயிலர் எஸ்.இந்திரகுமார், திருமதி உதித்தா குணசேகர ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் 13 கைதிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (த-6-7)

# பொற்றொழிலாளர்களை அமைச்சர் சந்திப்பார்

யாழ்ப்பாணம்,செப்.14

பொற்றொழிலாளர்களின் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளின் பொற்றொழிலாளர்கள் கலந்துகொண்டு தமது பிரச்சினைகளை முன்வைக்கவுள்ளனர். எனவே இந்தக் கலந்துரையாடலுக்கு அனைத்து பொற்றொழிலாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய பொற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் பூ.ம.செல்லத்துரை அறிவித்துள்ளார். (த-14)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோருக்கு தொழில் திறன் பயிற்சி வழங்குவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம்,செப்.14

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையால் யாழ்ப்பாணத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நன்மை கருதி தேசிய தொழில்திறன் சான்றிதழுக்கு அமைவாக மரத்தொழில் நுட்பம், கட்டட நிர்மாணம் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதுதொடர்பான கருத்தரங்கும் தம்மிடம் தொழில்பயிற்சி பயின்ற மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வும் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வலிகாமம், தென்மராட்சி பகுதிகளில் இடம்பெறவுள்ளன. இதில் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் கேட்டுள்ளார்.

வலிகாமத்தில் தொழில் பயிற்சி நிலையம், மின் உற்பத்தி நிலையம், சுன்னாகம் என்னும் முகவரியிலும் -

தென்மராட்சியில் - தொழில் பயிற்சி நிலையம் ஏ-9 வீதி,(சைவச் சிறுவர் இல்லம்) கைதடி என்னும் முகவரியிலும் மேற்படி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஐ)




# பிரதித் தேர்தல் ஆணையாளர் நாளை மறுதினம் யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம், செப்.14

2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தொடர்பான திருத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக உதவித் தேர்தல் ஆணையாளர் பி.எம். சிறிவர்த்தன நாளை மறுதினம் வியாழக் கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

18ஆம் திகதி சனிக்கிழமை வரை உதவி ஆணையாளர் யாழ்.நகரில் தங்கியிருந்து இடம்பெயர்ந்த மற்றும் வாக்காளர்களின் பெயர்ப் பட்டியல்களில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள தேர்தல் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-7)

# யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய பொதுமுகாமையாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.14

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொது முகாமையாளராக கே.கவிந்திரதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை சங்கத்திற்கு வருகை தந்த அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அங்கு பணியாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இக்கலந்துரையாடலில் சங்கத்துக்குப் புதிய பொது முகாமையாளர் இன்றிலிருந்து (நேற்றுத் திங்கட்கிழமை) தமது பதவியைப் பொறுப்பேற்றுப் பணியாற்றுவார் என்று அமைச்சர் தெரிவித்தார்.

சங்கப் பணியாளர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் சங்கத்தின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டும் இந்த நடவடிக்கையை நாம் அவசரமாக மேற்கொள்ள வேண்டி இருந்தது.

ஆகவே சங்கத்தின் வளர்ச்சிக்குப் பணியாளர்கள் சேவை மனப்பான்மையுடன் கடமையாற்ற வேண்டும் என்று அமைச்சர் கேட்டுள்ளார்.

மேலும் சங்கத்தின் முழுமையான பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கும் பணியாளர்களுடன் சந்தித்து மீண்டும் உரையாடுவதற்கும் இன்னும் ஒருவார கால அவகாசம் தருமாறும் அமைச்சர் தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்ட பொது முகாமையாளர் அச்சுவேலி, நல்லூர் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பொது முகாமையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

நேற்றைய அமைச்சருடனான கலந்துரையாடலில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன், முன்னாள் அரச அதிபர் கே.கணேஷ், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெறும் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்கு அங்கு பதவியில் உள்ள தலைவரையும், பொது முகாமையாளரையும் பதவி நீக்குமாறு கோரி சங்கப் பணியாளர்கள் அண்மையில் அமைச்சின் அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (த-26)

# சங்கக் கடையில் பணம் என நினைத்து சமுர்த்தி முத்திரைகளைக் களவாடிய சிறுவர்கள்

## திருடிய பார்சல் பின்னர் வீதியோரத்தில் மீட்பு

நவாலி,செப்.14

மானிப்பாய் ப.நோ.கூ.சங்க நவாலி கிளை 6 இல் களவு போன 67 ஆயிரம் ரூபா பெறுமதியான சமுர்த்தி உணவு முத்திரைப் புள்ளிகள் நவாலி பிரதான வீதியோரத்தில் சிந்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

கடந்த வியாழன் மாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் அழகிய உடை அணிந்த 16 வயது மதிக்கக் கூடிய யுவதியும், 10 வயது, 12 வயதுடைய இரு சிறுவர்களும் சம்பந்தப்பட்ட கடைக்கு முன் வந்திறங்கினர். சில நிமிட நேரத்தில் இரு சிறுவர்களும் உள்ளே சென்று முகாமையாளரிடம் 'ரொபி' தருமாறு சிறு தொகைப் பணத்தை கொடுத்து விட்டு பகிடிக் கதைகள் பேசிக் கொண்டிருந்தனர். அந்தச் சிறுவர்களில் ஒருவர் தனது கையினை மேசைக்கு கீழால் லாச்சியின் பின் பக்க வெளியூடாக உள்ளே விட்டு அங்கு கட்டி வைக்கப்பட்டிருந்த பார்சலை பணமென நினைத்து 'நைசாக' எடுத்து தனது காற்சட்டைப் பொக்கற்றில் வைத்த பின்னர் போய் வருகிறோமென கூறி மோட்டார் சைக்கிளில் விரைவாக சென்று மறைந்தனர்.

இடையில் இவர்கள் அப்பார்சலை பிரித்துப் பார்த்தபோது உணவு முத்திரைப் புள்ளிகள் இருந்ததைக் கண்டு திகைப்படைந்து வீசி எறிந்து விட்டு சென்றுள்ளனர். மறுநாள் தமது வீட்டு வாசலை துப்புரவு செய்வதற்கு வந்த பெண்மணியும் ஏனையோரும் இவற்றை எடுத்து கிளை முகாமையாளரிடம் ஒப்படைத்தனர்.

இவற்றில் இன்னும் ஐயாயிரம் ரூபா பெறுமதியான புள்ளிகள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. மேலும் அன்றைய தினம் அங்குள்ள இரு கடைகளில் கட்டிவைக்கப்பட்டிருந்த இருபதினாயிரம் ரூபா பணமும் மற்றொரு கடையில் மூவாயிரம் ரூபா பணமும் காணாமற்போயுள்ளது. (த-100)

# புள்ளிவிவர உத்தியோகத்தர்களுக்கு கொழும்பில் மூன்றுநாள் பயிற்சி

நாவற்குழி,செப்.14

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த புள்ளிவிவர உத்தியோகத்தர்களுக்கு இம் மாதம் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கொழும்பில் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

அடுத்த வருடம் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ள சனத்தொகைக் கணக்கீட்டுப் பணிகளுக்கு முன்னோடியாகவே இப்பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏனைய மாவட்டங்களில் பணிபுரியும் புள்ளிவிவர உத்தியோகத்தர்களுக்கும் இது போன்ற பயிற்சி நெறி தொகுதி தொகுதியாக நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

1981 ஆம் ஆண்டில் முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் சனத்தொகைக் கணிப்பீடு நடைபெற்றது.

30 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் அடுத்த வருடம்தான் இவ்வாறு கணிப்பீடு நடைபெறவுள்ளது.

1991ஆம் ஆண்டில் வடக்கு - கிழக்கில் யுத்தம் முழு அளவில் நடைபெற்ற காரணத்தால் 10 வருடங்களுக்கொருமுறை நடைபெறும் சனத்தொகைக் கணிப்பீடு நாட்டில் நடைபெறவில்லை. 2001 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் கணிப்பீடு நடைபெற்றாலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த முடிவுகள் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குடித்தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தினால் செய்யப்படும் இக் கணக்கெடுப்பு அறிக்கை சமூக, பொருளாதார, பண்பாட்டு ஆய்வுகளுக்கு துறைசார் அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த-121)



கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ்.சிறைச்சாலையில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் முன்னாள் அமைச்சர் மகேன்குணசேகர,சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க, பிரதான ஜெயிலர் எஸ்.இந்திரகுமார் ஆகியோர் சிறைக் கைதிகளுக்கு பரிசில்களை வழங்குவதை படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றம் நிகழ்ந்த சகல பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளை ஒரு வருடத்துக்குள் அபிவிருத்தி செய்து இயக்குவதற்கு நடவடிக்கை

17 வருடம் ஆசிரிய சேவையிலும்- 3வருடம் அதிபர் சேவையிலும், 3 வருடம் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் - ஒரு வருடம் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் 12 வருடம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் - என 36 வருடகால அரச சேவையினைத் தொடர்ந்து தனது அர்ப்பணிப்பான சேவையின் ஊடாக யாழ்ப்பாண கல்விச் சமூகத்துக்கு அளப்பரிய பணிகளையாற்றி கடந்த ஆறாம் திகதி முதல் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள பரமநாதன் விக்னேஸ்வரன் (வயது-57) தனது கடந்த கால கல்வித்துறைசார் அனுபவங்கள் தொடர்பாகவும், வட மாகாணத் தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள கல்வித்துறை அபி விருத்தித் திட்டங்கள் குறித்தும் 'உதயன்' வாசகர்களுடன் கருத்துக்களை பகிர்ந்து கொள்கிறார்.



★ தங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்?

காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட நான் காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்று யாழ். பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தினையும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவினையும் பெற்றேன்.

1974 ஆம் ஆண்டு அராலி இந்துக் கல்லூரியில் முதன்முதலாக ஆசிரியராகப் பணியில் இணைந்து கொண்டேன்.

1978-1990 காலப்பகுதியில் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திலும், 1991-1994 காலப்பகுதியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதிபராக நியமனம் பெற்றேன்.

அக்காலத்தில் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றினேன். 1994-1996 ஆம் ஆண்டு காலங்களில் சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டேன்.

பின்னர் 1997 ஆம் ஆண்டு யாழ்.வலயம் I இல்பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றேன். அப்பதவியில் இருந்து ஒரு வருட காலம் சேவையாற்றினேன்.

01.10.1998 ஆம் ஆண்டு தீவக வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டேன். அந்தப் பதவியிலிருந்து தீவகப் பகுதியில் நான்கு வருடம் சேவையாற்றினேன்.

2003-2004 ஆம் ஆண்டுகளில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினேன். பின்னர் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரை வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவியேற்று கடமையாற்றினேன்.

கடந்த 06.09.2010 ஆம் திகதி முதல் வடமாகாணத்தின் இரண்டாவது மாகாணக் கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளேன்.

கே: ஆசிரியர், அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் எனப் பல்வேறு பதவிகளை அலங்கரித்துள்ளீர்கள். இவற்றில் எந்தப் பதவி உங்களை மிகவும் கவர்ந்தது?

ப: ஆசிரிய சேவை, அதிபர் சேவை இவையிரண்டும் தான் பொறுப்பான பதவிகள். அத்துடன் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுகின்ற பதவிகளும் கூட. பிள்ளைகளினதும், சமூகத்தினதும் நன்மதிப்பைப் பெற்று அவர்களின் மனதை வெல்லுகின்ற சேவையினை ஆசிரியர், அதிபர் என்ற பதவிகள் ஊடாகவே செய்து கொள்ளலாம்.

வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்ற பதவிகள் ஊடாக கல்விச் சமூகத்துக்கு ஆற்றப்படுகின்ற சேவைகள் மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்களிடத்திலும் உடனடியாக சென்றடையாது.

அத்துடன் ஆசிரிய சேவையானது எல்லா பதவிகளையும் விட மேலானது - புனிதமானது- சுமை கூடியது. அந்த வகையில் நான் இருந்த காலங்களை

## மாணவர்களினதும், சமூகத்தினதும் மதிப்பை ஆசிரியர், அதிபர், பதவிகள் மூலமே பெறலாம்

ஒரு கணம் மீட்டிப் பார்க்கிறேன்.

அந்தக் காலப் பகுதியில் ஆசிரியர், அதிபர் பணிகளை செய்தவர்கள் அதனைப் புனிதத்துடன் சமூகச் சுமையாக நினைத்துப் பொறுப்புடன் செய்தனர். அதனால் மாணவர்கள் ஆசிரியர்களிடமும், படித்த கல்லூரிகள் மீதும் பற்றுள்ளவர்களாக இருந்தார்கள். அத்துடன் பாரம்பரியம் மிக்க கல்விச் சூழலை உருவாக்கினார்கள்.

உதாரணமாக ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பாரம்பரிய கல்விச் சமூகத்தை இங்கு குறிப்பிட்டுக் கொள்ளலாம். ஒறேற்றர் சுப்பிரமணியம் அத்தகையதொரு கல்விப் பாரம்பரியத்தை, சமூகப் பொறுப்புள்ள, ஒழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்கினார்.

அத்தகைய மாணவர் சமூகம் இன்றும் மரபு ரீதியாக வந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் இன்றைய சூழலில் சில ஆசிரியர்கள் தமது கடமைகளைப் பொறுப்புடன் சுமக்கிறார்கள். சிலர் ஏனோதானோ என்று செயற்படுகிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். எல்லோரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

கே: வன்னிப் பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள், குறித்து.....

ப: வன்னிப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் அனேகமானவை இயங்கத் தொடங்கிவிட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 121 பாடசாலைகளில் 81 பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

இங்கு 24 ஆயிரத்து 794 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். ஆயிரத்து 357 ஆசிரியர்கள் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள 54 பாடசாலைகளில் ஒரேயொரு பாடசாலை மட்டும் இயங்கவில்லை. ஏனையவற்றில் கற்றல் கற்பித்தல் நடைபெற்று வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 54 பாடசாலைகளில் 17 பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன. ஏனைய பகுதிகளில் மீள்குடியேற்றம் நடைபெற்றதும் மீதமுள்ள பாடசாலைகளும் இயங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளையும் மீள ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதற் கட்டமாக உடுத்துறை, மருதங்கேணி பகுதிகளில் உள்ள 3 பாடசாலைகள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

அடுத்து மாமுனை, ஆழியவளை பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளும் வெகுவிரைவில் ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

வன்னிப் பகுதியில் யுத்தத்தால் சேதமடைந்த பாடசாலைகளில் முதல் 28 பாடசாலைகளை முன்னணி நிலைக்கு அபிவிருத்தி செய்ய 'யுனிசெப்' நிறுவனம் முன்வந்துள்ளது.

அடுத்து வன்னிப்குதியில் யுத்தத்தினால் கூரைகளற்ற நிலையில் உள்ள பாடசாலைகளை புனரமைக்க வடக்கின் மீள்எழுச்சித் திட்டத்தின் ஊடாக வேலைத்திட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஏனைய பாடசாலைகளின் அபிவிருத்திக்கு இந்திய அரசாங்கம் முழு அளவிலான நிதி உதவிகளை மேற்கொண்டுள்ளது.

குறைந்தது இன்னும் ஒரு வருடத்துக்குள் வன்னியில் யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான பாடசாலைகள் யாவும் புனரமைக்கப்பட்டு அடிப்படை வசதிகள் யாவும் நிறைவு செய்யப்படும் என்ற நம்பிக்கையுடன் முழுவீச்சில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்தையும் புனரமைப்பது தொடர்பான விவரங்களினை மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி இந்திய அரசாங்கத்திடம் கையளித்துள்ளார்.

இந்திய அரசாங்கம் அதனை ஏற்று வடமாகாணப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளது. அந்த நிதி கிடைத்ததும் அனைத்துப் பாடசாலைகளும் முழுமையான முறையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

கே: அண்மையில் வடமாகாண பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றம் குறித்த சர்ச்சைகள் எழுந்ததே அது பற்றி?

ப: வடமாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் அளவுக்கதிகமான எண்ணிக்கையில் பணியாற்றுகிறார்கள். இந்த ஆசிரியர்களில் ஒரு தொகுதியினரை இடமாற்றம் செய்து ஏனைய இடங்களில் ஏற்பட்டுள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பமுடியும்.

அதனால் அத்தகையதொரு இடமாற்றத்தினை அண்மையில் மேற்கொண்டோம். பின்னர் அது பலரின் வேண்டுகோளின் படி மீளாய்வு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் விசேட தேவையுடையவர்கள் என்று கருதப்படுகின்ற குறிப்பாக கர்ப்பிணிமார், நோயாளர்கள், முன்னர் கஷ்டப் பிரதேசத்தில் கடமையாற்றியவர்கள் ஆகியோரைத் தவிர்த்துப் புதிய பெயர்ப் பட்டியல் ஒன்று தயாரிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பெயர்ப் பட்டியல் விரைவில் வெளியிடப்பட்டு அதற்கமைய ஆசிரிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**சந்திப்பு : கவிநேசன்**

கே: வடமாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுள்ள நீங்கள் எமது கல்விச் சமூகத்திற்கு கூறும் அறிவுரைதான் என்ன?

ப: எமது கல்விச் சமூகம் என்பது ஒழுக்கத்துடன் மிளிர்ந்து கொண்டு கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத்துறை என இன்னோரன்ன துறைகளில் சாதனைகளைப் பொறித்து வருகிறது.

அந்த நிலை தொடர்ந்தும் நிலைக்க வேண்டும் என்பதுதான் எமது முக்கியமான குறிக்கோளாகும்.

இதனைச் செயற்படுத்த அனைவரும் அர்ப்பணிப்புடனான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள் , அதிபர்கள் தமது பணிகளை கடமையென்று மட்டும் கருதி விடாது கடமைக்கப்பால் சமூகப் பொறுப்புணர்ந்து செயலாற்றினால் எதிர்காலத்தில் ஒழுக்கத்திலும் எமது பாரம்பரியங்களை பேணுகின்ற வகையிலும் பொறுப்புள்ள மாணவர் சமூகத்தினை உருவாக்க முடியும். இதற்காக அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாணத்தில்

# கிணறுகள், வீடுகள் இல்லாதோருக்கு அவற்றை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, செப். 14

கிழக்கு மாகாணத்தில் வீடு, கிணறு இல்லாதோருக்கு வீடுகள், கிணறுகள் அமைத்துக் கொடுக்கும் முயற்சியைக் கிழக்கு மர்காண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய மின்சார அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

முதற்கட்டமாகத் திருகோணமலை மாவட்டத்தில் வீடுகள், கிணறுகள் இல்லாதோருக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வு மாகாண அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கும் நிகழ்வு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமா லெவ்பை தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

முதற்கட்டமாக 30 பேருக்கு கிணறுகளும், 26 பேருக்கு வீடுகளும் கட்டுவதற்கான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன. மிகவும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றவர்களுக்கே மேற்படி உதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான நாகலிங்கம் திரவியம், எட்வின் சில்வா கிருஷ்ணானந்த ராஜா, பூ.பிரசாந்தன், கோரளைப்பற்று பிரதேசசபைத் தவிசாளர் தா.உதய ஜீவதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு காசோலைகளை வழங்கி வைத்தார்கள். மேற்படி நிகழ்வு வாழைச்சேனை பேசாலையில் அமைந்துள்ள குகநேசன் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (ளி)




## லாஹுகலப் பிரதேசத்தில் யானைகள் அட்டகாசம்

அம்பாறை, செப்.14

அம்பாறை மாவட்டத்தின் லாஹுகல பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மின்சார வேலியையும் உடைத்துக் கொண்டு கிராமத்துக்குள் நுழைந்த காட்டுயானைகள் அப்பிரதேசத்திலுள்ள வீடுகள் மற்றும் பயிர்களுக்கும் சேதத்தை விளைவித்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை ஓரளவு நிறைவடைந்த நிலையில், எல்லைப் புறக்காடுகளில் உள்ள யானைகளே இவ்வாறு உணவுக்காகவும் நீருக்காகவும் கிராமங்களுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்துள்ளன.

இவ்வாறு பல தடவைகள் தொடர்ச்சியாகக் காட்டு யானைகள் தொல்லை கொடுப்பதனால் பயத்தின் காரணமாகத் தாம் வீடுகளை விட்டு வெளியேறி வேறு இடங்களில் குடியிருப்பதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர். (ளி)

# உரமூடைகள் கடத்திய 2பேர் சந்தேகத்தின் பேரில் கைது

மட்டக்களப்பு, செப்.14

சட்டவிரோதமாக உரமூடைகள் கடத்தி வரப்பட்ட அரசுக்குச் சொந்தமான உர லொறியொன்றைக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் கைப்பற்றினர்.

அத்துடன், கடத்தலில் ஈடுபட்ட இருவரும் கைதுசெய்யப்பட்டனர் எனவும் களுவாஞ் சிக்குடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர்.மானவடு தெரிவித்தார்.

'மஹிந்த சிந்தனை' திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்குவதற்கென அனுப்பப்பட்ட உரமே இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. கல்முனையிலிருந்து கொழும்பிற்கு கடத்திக்கொண்டு வருகையில் கல்லாறு பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து உரலொறி மடக்கிப் பிடிக்கப்பட்டது.

சுமார் 80லட்சம் ரூபா பெறுமதியுள்ள 200 இற்கும் அதிகமான உரப்பைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ளி)


# சட்டவிரோதமாக மின்சாரம் பாவித்த 136பேருக்கு இருபத்தெட்டுலட்சம் ரூபா அபராதம் விதிப்பு

மட்டக்களப்பு, செப்.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத மின் பாவனையில் ஈடுபட்ட 136பேருக்கு 28லட்சம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் வீ.இராமக்கமலன் கடந்த 6ஆம் திகதி இந்த அபராதத்தை விதித்தார்.

கோயக்கொட்டிச் சோலைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 92 பேருக்கும் ஏறாவூர் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 46 பேருக்குமே இவ் அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் கொழும்பு அதிகாரிகளும் மட்டக்களப்பு உத்தியோகத்தர்களும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (ளி)



நோன்புப் பெருநாளை முன்னிட்டு அட்டாளைச்சேனை புறத்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்த வசதி குறைந்த பெண்களுக்கு உடுதுணி வழங்கும் நிகழ்வு அட்டாளைச் சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் உரையாற்றுவதையும், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரும், ஊடகவிலாளருமான எஸ்.எம்.அறூஸ் மற்றும் பிரதேச செயலாளர் எம்.எம் நஸீர் ஆகியோர் பெண்களுக்கு உடுதுணிகளை வழங்குவதையும்,கிராம சேவகர் எம்.சலீம் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# ஹல்து முல்லை தோட்டத்திற்கு சீரான தபால் விநியோகம் தேவை

## அரவிந்குமார் வேண்டுகோள்

கொழும்பு,செப். 14

எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற ஹல்துமுல்லை நிக்கபொத்த முத்துவான தோட்டத்திற்கு தபால் விநியோகத்தை முறையாக மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்குமாறு ஊவா மாகாணசபை உறுப்பினரும், ஊவா மாநிலப் பொறுப்பாளருமாகிய அ. அரவிந்குமார் தபால் தொடர்பு அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவிற்கு அவசர தொலைநகல் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இக்கடிதத்தின் நகல்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஊவா மாகாண ஆளுநர் நந்தா மெத்தீவ் மற்றும் ஊவா மாகாண முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேலும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஹல்துமுல்லை பிரதேச செயலகத்திற்குட்பட்ட நிக்கபொத்த என்ற இடத்தில் மின்சாரம், பாடசாலை,வைத்தியசாலை, போக்குவரத்துக்குச் சீரான பாதை மற்றும் தபால் சேவைகள் போன்ற எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற தோட்டமாக முத்துவான தோட்டத்தை அடையாளமிடலாம்.

பெரகலை/ வெள்ளவாய பிரதான வீதியிலிருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்தைக் கரடுமுரடான பாதையினூடாகப் பயணித்தால் இத்தோட்டத்தைச் சென்றடையலாம்.

300 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இத்தனியார் தோட்டம் பல உரிமையாளர்களுக்குச் சொந்தமானது. சுமார் 150 குடும்பங்கள் இங்கு வாழ்கின்றன.

தொலைத் தொடர்புகளுக்காக பல்வேறு வசதிகள் ஏற்பட்டிருக்கும் இந்நவீன யுகத்தில் இங்கு வசிப்பவர்களுக்கு மின்சாரமில்லாத காரணத்தினால் தொலைபேசிகளை கூடப் பயன்படுத்த முடியாத துரதிஷ்ட நிலைமை இருக்கின்றது.

இவர்கள் ஏனையவர்களோடு தொடர்புகளை மேற்கொள்வதற்கு தபால் சேவையிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது. ஆனால், இவ்வசதிகள்கூட அங்கு சரியாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.


சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு தோட்டப்புறங்களில் தபால் விநியோகத்திற்கென ஊழியர்கள் நியமிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்கும் வெளியார். ஒருவர் நியமனம் செய்யப்பட்டார்.

மிகவும்அசௌகரியமான சூழலில் இப்பணியை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததால் இரண்டே மாதங்களின் பின் அவர் சேவையிலிருந்து விலகிக் கொண்டுள்ளார். அதற்குப் பின் அப்பதவிக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

ஏதோ ஒரு வகையில் தங்களுக்கு சிறிதளவான விமோசனமாவது கிடைத்திருக்கின்றது என்ற நம்பிக்கையிலிருந்த முத்துவான தோட்ட மக்களுக்கு மிஞ்சியது பலத்த ஏமாற்றமே.

எனவே, இப்பிரச்சினைக்குத் தீர்வாக அங்கு படித்த விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில இளைஞர்கள் மத்தியிலிருந்து ஒருவரை தெரிவு செய்து நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு அரவிந்தகுமார் கேட்டிருக்கிறார். (ளி)




# வங்கி அதிகாரி போல் நடித்து பண மோசடி செய்த பெண் கைது

## கண்டி பொலிஸாரால் மேல் விசாரணை

கண்டி,செப். 14

வங்கி அதிகாரிபோல் நடித்து வீடுகளில் பணம் மோசடி செய்த பெண் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வங்கி அதிகாரிபோல் நடித்து கண்டியிலும் அயலிலும் உள்ள வீடுகளுக்கு மிடுக்காகச் சென்று அதிக வட்டி பெற்றுத் தரும் சேமிப்புக் கணக்குகளை ஏற்பாடு செய்து தருவார் எனக் கூறிப் பலரிடம் பண மோசடி செய்த பெண்ணே கண்டி குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின் இவருக்கு உடந்தையாகச் செயற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கண்டி தெல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவரெனவும் மற்றவர் கொழும்பு வாசியெனவும் தெரிய வருகின்றது.

கைது செய்யப்பட்ட ஆண் கொழும்பில் நடந்த பல்வேறு குற்றச் செயல்களுக்காகத் தேடப்பட்டு வந்தவராவார்.

இவ்விருவரும் போதைப் பொருள் வியா பாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கண்டி பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் ஜயசுந்தரவின் பணிப்புரையின் கீழ் பொலிஸ் அத்தியட்சகர் எம்.பீ.ஜே. மொஹட்டி கெதர தலாத்து ஓய பொலிஸ் பொறுப்பதிகாரி கமல் ஆரிய வண்ஸ ஆகியோர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ளி)

# கண்டி இந்திய உதவித் தூதரகம் நடத்தும் வருடாந்த ஹிந்தி தினம்

கண்டி, செப். 14

உலக ஹிந்திமொழி தினத்தை முன்னிட்டு கண்டி இந்திய உதவித் தூதரகத்தின் பாரத்திய கலா கேந்திரா 'வருடாந்த ஹிந்தி தினம்-2010' நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை, கண்டி திரித்துவக் கல்லூரி மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு ஒழுங்கு செய்துள்ளது.

கண்டி இந்திய உதவித் தூதுவர் ஆர்.கே. மிஸ்ரா தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்திற்கு பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுனர் டிக்சிரி கொப்பேகடுவ, கௌரவ அதிதிகளாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மத்திய மாகாண தமிழ் கல்வி இந்து கலாசார அமைச்சர் அனுஷியா, சிவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் ஹிந்தி மொழி வகுப்புகளில் சித்தி பெற்ற 117 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதோடு, கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



வீட்டுச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். உறவினர்கள் சிலரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பழைய நண்பர் அல்லது தோழி ஒருவரைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். நீங்கள் எதிர்பாராத சில நல்ல சம்பவங்கள் நடக்கலாம்.

### இடபம்



குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நீங்கள் செய்த தவறு ஒன்றை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கம்பீரமாக நடந்து கொள்வீர்கள். தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்வர். திட்டமிட்ட காரியம் ஒன்று நடக்காமல் போனாலும், திட்டமிடாத காரியம் ஒன்று நடக்கலாம். எதிர்பாராத பண வரவுகளைப் பெறலாம்.

### மிதுனம்



அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிகளுக்கு ஆளாகலாம். மற்றவர்களின் செலவில் உங்களின் சில தேவைகள் நிறைவேறலாம். பழைய கடன் பாக்கி ஒன்றை தீர்க்க முற்படுவீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் சில விடயங்கள் பற்றி ஆலோசனை நடத்துவீர்கள். உங்களுக்கு தெரியாத ஒரு விடயத்தில் நண்பர்கள் வழிகாட்டுவர்.

### கடகம்



துவங்கிய சில வேலைகளைப் பாதியில் விட்டு விட்டு மற்றொரு வேலையில் ஈடுபடலாம். கடன் மிகுதி ஒன்றைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். உங்களின் பரச்சினை ஒன்றை நண்பர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். சிலருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் போகலாம். குறுகிய தூர பயணம் செல்லலாம்.

### சிங்கம்



வெறுப்பு, விரக்தி விலகி எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். வெளிவட்டாரத்தில் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்கள் மூலம் முடிப்பீர்கள். அரசு காரியங்களில் இழுபறிகள் காணப்படும். காத்திருப்புகள் நேரும்.

### கன்னி



நேற்று செய்யாமல் விட்ட வேலை ஒன்றை இன்று செய்வீர்கள். உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு பிடித்த சில விடயங்கள் உங்களுக்கு பிடிக்காமல் போகலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பழைய நண்பர் ஒருவர் உங்களிடம் உதவி கேட்கலாம். குடும்பச் செலவு கூடும்.

### துலாம்



கனிவாகப் பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். காலை நேரத்தில் குடும்பத்திற்கு தேவையான பொருள் ஒன்றை வாங்கிக் கொடுப்பீர்கள். உங்களுக்கு பிடிக்காத காரியம் ஒன்றை குடும்ப உறுப்பினர்கள் செய்யலாம். சில வேலைகளைச் செய்ய மறந்து விடலாம்.

### விருச்சிகம்



மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர் ஒருவரிடம் கடனுதவி கேட்கலாம். தாய் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். இழப்புகளை தவிர்க்க எதையும், ஒரு முறைக்கு பல முறை ஆலோசித்து செய்ய வேண்டும். சக ஊழியர்களிடம் கோபதாபங்கள் ஏற்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லும் சூழல் உருவாகும்.

### தனுசு



புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் கூடும். ஆசைப்பட்ட பொருள் ஒன்று கிடைக்கலாம். வருமானமாக வந்த பணத்தில் ஒரு பகுதியை மற்றொரு காரியத்திற்காக செலவு செய்வீர்கள், உங்களுக்குக் கிடைக்கும் ஆதாயம் ஒன்றைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படுவர். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் உண்டு.

### மகரம்



சிலரிடம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவீர்கள். பழமையான விடயங்களில் நாட்டம் செல்லும். பிள்ளைகள் உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். பிரபலமான ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்துவீர்கள். நடக்குமோ, நடக்காதோ என சந்தேகத்தில் இருந்த ஒரு காரியம் நல்லவிதமாக நடக்கும்.

### கும்பம்



முன்பின் பார்த்திராத ஒருவருக்காக வெளியிடங்களில் காத்திருப்பீர்கள். நண்பர்களுடன் கொண்டாட்டங்கள், விருந்து, விசேடங்களில் பங்கேற்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலைவீர்கள்.

### மீனம்



மறதியால் அவதிகளுக்கு ஆளாகும் நாள். வாகன பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையும். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். விளையாட்டாகச் செய்த சில காரியங்கள் விபரீதமாக முடியலாம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது யாரிடமும் வாக்குவாதங்கள் செய்ய வேண்டாம்.

## தேங்காய் வீழ்ந்து குழந்தை காயம்

தென்மராட்சி,செப்.14

மரத்தில் இருந்து வீழ்ந்த தேங்காய் அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஒரு வயதுக் குழந்தையைத் தாக்கிக் காயப்படுத்தியது. கொடிகாமத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.கபிசாம் என்னும் குழந்தையே காயமடைந்தது.

இதேவேளை மீசாலைப் பகுதியில் முறிந்து வீழ்ந்த நாவல் மரக் கிளையினுள் அகப்பட்டு கே.குமாரசாமி (வயது 55) என்பவருக்கு தோளில் காயமேற்பட்டது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-207)


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி
மாபெரும் கல்விக் கண்காட்சியும்
சாகச நிகழ்வுகளும் - 2010

மாணவர் மகிழ்களம்

- பாடரீதியான புத்தாக்க படைப்புகளும் முன்வைப்புகளும்.
- கல்வி,.தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் கண்காட்சியும் மலிவு விற்பனையும்.
- சாகச. நிகழ்வுகள்: ரயிலில் பயணம், பாதாளக் கிணற்றில் கார் மற்றும் சைக்கிள் ஓட்டம், வட்டக் கூட்டினுள் ஓடும் மோட்டார் சைக்கிள், மெரிக்கோ ரவுண்ட், பலூன் துள்ளல், மந்திர வித்தைகள்.

இடம்: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

காலம்: 16 தொடக்கம் 19 செப்ரெம்பர் 2010 வரை கல்விக்கண்காட்சியும்
16 தொடக்கம் 21 செப்ரெம்பர் 2010 வரை சாகச நிகழ்வுகளும்.

கல்விக் கண்காட்சி: இலவசம் (காலை 8 மணி - மாலை 4 மணி வரை)

சாகச நிகழ்வுகள்:
நுழைவுச்சீட்டு மாணவர்களுக்கு 30/=, ஏனையோருக்கு - 50/=(காலை 8 மணி - இரவு 10 மணி வரை மாணவர்களும், பொதுமக்களும் பார்வையிடலாம்.)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

ஊடக அனுசரணை
உதயன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி


## தொலைக்காட்சியில் வரலக்ஷ்மி விரத பூஜை

யாழ்ப்பாணம்,செப்.14

கொழும்பு-சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடத்தில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீவரலக்ஷ்மி விரத பூஜையின் தொகுப்பு ரூபவாஹினி தமிழ் அலைவரிசையான ''நேத்ரா ரீவி'யில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிமுதல் 6 மணி வரை ஒலிபரப்பாகும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-ஐ)

## நீர்வேலியில் மீண்டும் உலாவும் திருடர்கள்

நீர்வேலிப் பகுதியில் திருடர்களின் கைவரிசை மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் நீர்வேலி தெற்குப் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளில் இரவு வேளை உட்புகுந்து திருடுவதற்கு முயற்சித்த திருடர்கள் வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டதால் அந்த இடத்தைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டுக்காரர் திடீரென விழித்துக் கூக்குரல் போட்ட சமயம் திருடர்கள் தமது திருட்டைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

திருடர்களின் இந்தத் திருட்டு முயற்சியால் இப்பகுதி மக்கள் இரவில் பீதியுற்று உள்ளனர்.

(6-26)


**சேவை**

UK,IRELAND, POLAND போன்ற நாடுகளுக்கு STUDENT VISA ஆவணங்கள், ஒழுங்குகள் துரித கதியில் செய்து கொடுக்கப்படும். மற்றும் Financial Sponsorship என்பன.
தொடர்பு கொள்ளவும்:- 0779218444, 0214910959

**கதியால்கள் தேவை**

கிளுவை, வாதநாராணி, பூவரசு கதியால்கள் தேவை. சிறிய தொகை என்றாலும் பரவாயில்லை
தொடர்பு கொள்ளவும்:- தொ.பே:- 0787885306

**Canada Work Permit**

ஆலோசனைகளுக்கும்
விசாவிற்கும்
தொடர்பு:- 0754518650


## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07.12.1923 அமரர் மறைவு 28.05.1985

கந்தையா பூபாலசிங்கம்

(உரும்பிராய் கிழக்கு)

திதி: 14.09.2010

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
இருந்து எங்களுக்கு நல்வழி காட்டிய எங்கள்
அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைப் பிரிந்து
இருபத்தைந்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவு எம்நெஞ்சை விட்டு அகலாது!
உங்கள் பிரிவால் வாடும்:

அன்பு மனைவி, சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'முரளி இல்லம்', சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25th Year உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# கணனிச் சிறப்பிதழ்

## சந்தர்ப்பங்களை சாதகமாக்கிக் கொள்ளுங்கள்

நீங்கள் தோற்றிய A/L பரீட்சைப் பெறுபேறுகள் உங்கள் எதிர்பார்ப்புக்கு மேலாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றோம். உயர்தரப் பெறுபேறுகள் உங்கள் வாழ்க்கையில் அடுத்த கட்டத்தினைத் தீர்மானிக்க இருக்கின்றது என்பதனை நாங்கள் அறியாதவர்கள் அல்ல. உங்கள் எதிர்காலம் தொடர்பாக, அதாவது தொடர்ச்சியான உங்கள் உயர்கல்வி வாய்ப்புக்கள் பற்றியோ அல்லது ஓர் கௌரவமான வேலை வாய்ப்பு பற்றியோ நீங்களும் உங்களது பெற்றோரும் சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள் என எம்மால் உணர முடிகின்றது. இவ்விரண்டாம் நிலைக்கல்வியை முடித்துக்கொண்ட நீங்கள் இனிமேல் எடுக்க இருக்கின்ற முடிவுகள் மீதமுள்ள உங்கள் வாழ்க்கைப்பயணத்தை தீர்மானிக்கும் சக்தி கொண்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் பெற்றோர், மற்றும் கற்றோருடன் கலந்து ஆலோசித்து ஓர் சிறந்த முடிவினை எடுப்பதன் மூலம் உங்கள் பாதையை பிரகாசமாக்கிக் கொள்ளுங்கள். இந்நிலையில் நீங்கள் எடுக்கும் முடிவு தான் உங்களுடைய எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகின்றது. கடந்த தசாப்தங்களைப் போல் அல்லாது இன்றைய நாளில் எமது மாணவர்கள் உயர்கல்வியைக் கற்பதற்கான ஏராளமான வாய்ப்புக்கள் பல உண்டு. பல்கலைக்கழக அனுமதியினை தவறவிட்டு விட்டோமே என்றோ அல்லது A/L பரீட்சையிலே சிறப்பாக செயற்படவில்லை என்றோ நீங்கள் கவலைப்பட தேவையில்லை. நடந்த விடையங்கள் நடந்தவையாக இருக்க நடக்கவிருக்கும் விடையங்களை நல்லதாக்கிக் கொள்வோம்.

மிக வேகமாக சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகிலே காலம் மிகவும் பொன்னானது. இழக்கின்ற ஒவ்வொரு நொடியும் திருப்பிப்பெற முடியாதவையாகும். எனவே நீங்கள் உங்களுக்கான காலத்தை வீணடிக்காது உங்களுடைய A/L பெறுபேறுகளுடன் உங்களுக்கு முன் குவிந்திருக்கும் சந்தர்ப்பங்களை சாதகமாகப் பயன்படுத்தி இன்றே உயர் கல்வியைத் தொடர ஆரம்பியுங்கள்.

கடந்த 15 வருடங்களாக உங்களுடன் 'இணைந்து சேவையாற்றும் எமது நிறுவனத்திற்கு அறிமுகம் தேவையில்லை எனக் கருதுகின்றோம். கணனிவிஞ்ஞானம், பொறியியல், வர்த்தக முகாமைத்துவம் ஆகிய மூன்று பீடங்களின் கீழ் நாம், எமது கல்விச்செயற்பாட்டை நடாத்தி வருகின்றோம். நீங்கள் விரும்பிய எத்துறையிலும் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் பட்டக்கல்வியை மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் உள்ளது .



மேலும் இக்கல்வியாண்டிலே Diploma In Web Development என்னும் விசேட கற்கை நெறி எமது நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தபட்டுள்ளது. இக்கற்கை நெறியானது ஒரு வருட கால (1000 மணித்தியாலங்கள்) போதனையுடன் கூடிய செய்முறைப்பயிற்ச்சியை கொண்டுள்ளது. உங்கள் எதிர் காலத்தை மாற்றியமைக்க இதோ ஓர் சந்தர்ப்பம். இப்பயிற்ச்சி நெறிக்கான கட்டணம் 85,000.00 ஆகும். இப்பயிற்ச்சிக் கட்டணத்தை மாணவர்கள் மாதாந்த தவணைக்கட்டணமாக செலுத்த முடியும். இக்கற்கை நெறியிலே HTML, CSS, JAVASCRIPT, PHP, CMS, LAMP SOLUTION,SEO (Search Engine Optimization),SEM (Search Engine Marketing) ஆகிய பாடவிதானங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளது. முழுமையான செய்முறைப்பயிற்சியை கொண்ட இக்கற்கை நெறியானது மாணவர்களுக்கு இலகுவான வேலை வாய்ப்பினை இலங்கையின் வடக்கு ,தெற்கு பகுதிகள் உட்பட சர்வதேச நாடுகளிலும் பெற்றுத்தரக்கூடியதாக உள்ளது.ஒரு வருட கால இப்பயிறச்சி நெறியைப் பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள் இக்கற்கை நெறிக்காக செலவு செய்த பணத்தை குறைந்தது மூன்று மாத காலத்தில் மீளப்பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளது .இக்கற்கை நெறியானது துறைசார் வல்லுநர்களால் நடாத்தப்படுகின்றது.



குடாநாட்டு மாணவர்களுக்காக ஓர் சிறந்த வரப்பிரசாதமாக எமது நிறுவனத்தினால் BCS கற்கை நெறியும் இக்கல்வியாண்டிலே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உலகின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல்த் துறையிலே உயர்கல்வியினை வழங்கிவரும் பிரித்தானிய BSC (British Computer Society) நிறுவனமானது வட இலங்கையிலே தனது கல்விச் செயற்பாட்டை விஸ்தரிக்கும் முகமாக IIS CITY CAMPUS நிறுவனத்துடன் இயங்கவுள்ளது.வட இலங்கையிலே BCS நிறுவனத்தின் நேரடியான அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பயிற்ச்சி மையம் IIS CITY CAMPUS என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதிகரித்து வரும் உலகின் தகவல் தொழில்நுட்பத்துறைக்கு ஏற்பவும், தொழில் வழங்குநரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பவும் மிகச்சிறந்த முறையிலே வடிவமைக்கப்பட்ட கல்வி முறைமையையும் அதற்கான தகைமைகளையும் மூன்று பிரிவுகளாக Certificate in IT, Diploma in IT, Professional Graduate Diploma in IT என வழங்குகின்றது. இக்கற்கை நெறிகள் இரண்டாண்டு காலப் பயிற்ச்சிக்காலத்தை கொண்டதாகும் .மேலும் இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள், தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த முகாமைத்துவமும், தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த பொறியியல் துறை என்பவற்றில் தமது முதுமாணிக்கற்கை நெறிகளை (M.Sc) மேற்கொள்ளமுடியும்.

மேலும் HND கற்கை நெறிக்கு இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு முற்றிலும் இலவசமாக BCS கற்கை நெறிகளினை பூர்த்தி செய்வதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் இரண்டு வருட காலத்தில் மாணவர்கள் Edexcel நிறுவனத்தின் HND சான்றிதழைப் பெற்றுக்கொள்வதோடு BCS நிறுவனத்தின் சான்றிதழையும் பெற்றுக்கொள்ள முடியும்.

உலகின் தலைசிறந்த இரண்டு நிறுவனங்களின் சான்றிதழை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை IIS CITY CAMPUS நிறுவனம் குடாநாட்டு மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இவையாவும் இதுவரை எந்த ஒருநிறுவனமும் சிந்திக்காத வழங்காத வாய்ப்புக்களாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25th Year உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கணனிச் சிறப்பிதழ்

## அரசின் புலமைப்பரிசிலுடன் வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்களையும் தரும் கணனிப்பொறியியலாளர் கற்கைநெறி

**கணினித் துறையில் நாம் எவ்வாறு கற்கை நெறிகளைத் தேர்வு செய்வது.**

இன்று அனைவர்க்கும் கணினி என்பது இன்றியமை யாததாகி விட்டது. எத்துறை சார்ந்தோருக்கும் தமது துறையை மேலும் விருத்தி செய்ய கணினி அறிவு மிகவும் அவசியமாகும்.

ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட அல்லது அலுவலகத் தேவைகளை இலகுபடுத்த பிரயோகப் பொதிகள் (Microsoft Office, Open Office) இலத்திரனியல் தபால் (e-mai) , இணையப்பாவனை (Internet handling) என்பவற்றில் தேர்ச்சி மிகவும் அவசியமானதாகும். இதனாலேயே எவ்வேலை வாய்ப்புகளின்போதும் ஆங்கிலப் புலமையுடன் கணினிப்புலமையும் கட்டயாமாக எதிர் பார்க்கப் படுகின்றது.

போட்டி நிறைந்த இவ்வுலகில் துறைசார்ந்த புலமையை மேம்படுத்த அவரவர் துறையில் பல்வேறு சிறப்பான பிரயோகப் பொதிகள் வெளிவந்துள்ளன.

அச்சகத்துறையில், கணக்கீட்டுத்துறையில், தரவுப் பேணல், புகைப்படத்துறையில், பல்லூடகத்துறை யில், கட்டட வடிவமைப்புத் துறையில், மருத்துவத்துறையில், என துறைசார்ந்த புலமையை மேம்படுத்த அவரவர் துறைசார்ந்த பிரயோகப் பொதிகளில் தேர்ச்சி பெறுவது அவசியமானதாகும்.

புதிதாக வேலைவாய்ப்பை தேடிக்கொள்ள விரும்புவோர் தமது இயல்பான ஆற்றலுக்கேற்பவும் தற்போதைய உலக தொழில் சந்தைக் கேற்பவும் தமது அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக மாணவர்கள் தமக்குரிய தொழில் வாய்ப்புகளை முதலில் இனங்காண வேண்டும்.

**தொழில் வாய்ப்புக்களை எவ்வாறு இனங்காணலாம்.**

தமது சூழலை அவதானித்தல், பத்திரிகைகளை அவதானித்தல். இன்று உலகில் உள்ள அனேக நாடுகளில் உள்ள வேலை வாய்ப்பு சம்பந்தமான விபரங்கள் இணைய சஞ்சிகைகளில் வெளியிடப்படுகின்றன.

அதுமட்டுமன்றி அனேகநாடுகள் தம்நாடுகளில் உள்ள ஆட்தேவையாக உள்ள தொழிற்பட்டியலை (Demands job list) இணையத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளன.

இவற்றை ஆய்வு செய்து தமக்கு ஆர்வம் உள்ள தொழில்களில் தகைமையையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
தகவல் தொழில்நுட்பத்துறையை பொறுத்தவரையில் அதிகளவான வேலைவாய்ப்புக்கள் இணையம் மூலமே கோரப்பகின்றன.

இலங்கையில் http://www.topjobs.lk/எனும் தளமும் மிகப்பிரல்யமானது. வெளிநாட்டு தொழிற்சந்தை சம்பந்தமான விபரங்களை www.monster.ca www.careerbuilder.com தளங்கள் மூலம் அறியலாம்.

தகவல் தொழில்நுட்பத்துறையில் உயரிய வேலைவாய்ப்பை பெறவிரும்பும் ஒருவர் தொழில்வாய்ப்பு சந்தையையும் அதற்கு எவ்வகையான தகைமைகள் தேவைப்படுகின்றன என்றும் அறிவது மிக முக்கியமானதாகும்.

பின்னர் அதற்குரிய தகைமையை வழங்கும் தரமான கற்கை நெறிகளை விரைவாகவும் முழுமையாகவும் கற்றுத் தேர்ந்து தகைமை வாய்ந்த சான்றிதழ்களை பெறவேண்டும். தான் இலக்காக கொண்ட தொழில்வாய்ப்பு சார்ந்த தொழில் அனுபவத்தை பெற்றுத்தரக்கூடியதான அதனினும் குறைந்த தொழில் ஏதேனும் ஒன்றில் பயிலுனராகவேனும் அனுபவத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்குறித்த தகுதியை உடையவர் செல்ல விரும்பும் நாடொன்றில் அவர் விரும்பும் தொழில் ஆள்தேவையாக உள்ள தொழிற்பட்டியலில் (Demands job list) இருந்தால் அவர் இலகுவாக(Work Permit)தொழில் அனுமதி அல்லது- (Skill Migration) புலமையாளருக்கான குடிவரவு அனுமதியை பெறமுடியும்.
உதாரணமாக தகவல் தொழில்நுட்பத்துறையில் வலையமைப்பு பாதுகாப்பு (Network Security) ஆனது அதிகளவில் வெற்றிடங்களை உடையதாக காணப்படுவதுடன் உலகின் அனேக நாடுகளில் தொழிற்பட்டியலில் (Demands job list) இல் தொடர்ச்சியாக காணப்படுகின்றது.

இதற்கான தகைமைகளாக, (மைக்ரோ சொப்ற் கணனிப் பொறியியலாளர் வலையமைப்பு பாதுகாப்பு சிறப்புத் தேர்ச்சி MCSE- spl in Network security,சர்வதேச கணினித் தொழில்நுட்ப நிறுவனங்களின் அமைப்பின் வலையமைப்பு சிறப்புத்தேர்ச்சியாளர் அங்கத்துவம் (ComTIA Security+), கனடா லினக்ஸ் புலமையாளர் நிறுவனத்தில் வலையமைப்பு பாதுகாப்பில் சிறப்புத் தேர்ச்சி (Linux Professional Institute_Ontario, Candada_securfty), சிஸ்கோ நிறுவனத்தின் சி.சி.என்.ஏ. (CISCO, CCNA, CCNP) ஆகிய தகைமைகள் கோரப்படுகின்றன.

எமது யாழ் மாணவர்கள் பலரும் இத்தகைய தகைமைகளை பெறுவதற்கான வசதிகளின்றி பல்வேறு சட்டரீதியற்ற வழிகளை நாடி வெளிநாடு செல்லுவதும் அங்கு போதிய வருமானம் உடைய தொழில்கள் இன்றி இன்னல் படுவதை அவதானித்த பலரதும் ஆலோசனைக் கிணங்க இல,324 பலாலி வீதி, பரமேஸ்வராசந்தியில் அமைந்துள்ள ஐ.நா.அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட எம்.சி.எஸ்.**(MCS)** நிறுவனம். மேற்குறித்த நிறுவனங்களின் பயிற்சி நிலையமாகவும் அங்கீகாரம் பெற்ற பரீட்சை நிலையமாகவும் திகழ்கின்றது.

ஐக்கிய அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக் கழகத்தில் $40000 (Rs.500 000) கற்பிக்கப்படும் அதே கற்கை நெறியை 38000 Rs.ற்கு மிகுந்த சமூகப் பொறுப்புடன் போதித்து வருகின்றது. தற்போது இக்கற்கை நெறிக்கான பரீட்சைக் கட்டணங்களை, கௌரவ ஜனாதிபதி அவர்களின் கீழ் இயங்கும் ICTA அமைப்பு வழங்கி இலங்கையில் தகவல் தொழில் நுட்ப ஆளணியை விருத்தி செய்ய பாடுபட்டு வருகின்றது.

சர்வதேச வேலைவாய்ப்புகளை பெறுவதில் ஆங்கில அறிவு தடையாக இருப்பதனை உணர்ந்து ஆங்கிலக் கற்கை நெறியை சிறப்பாக போதித்து வரும் MCS நிறுவனம் தற்போது (Test of English as a Foreign Language) TOEFL பரீட்சை நிலையமாகவும் செயற்பட்டு வருகின்றது.

உலகின் தொழிற்சந்தைக் கேற்க மாணவர்கள் கற்கை நெறிகளை தேர்வு செய்து அதற்கான தகைமையையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வது அவர்களின் கனவை நனவாக்கும்


## கற்கைநெறிகளுக்கு MCS ஏன்?

* ஐ.நா அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம்.
* அரச அதிபர் கணினிப்பயிற்சிக்குழுவாக தொழிற்படும் நிறுவனம்.
* கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து சிறப்பு விருதினை பெற்ற நிறுவனம்.
* இலங்கை கணினிச்சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற நிறுவனம்.
* தொழில் வழிகாட்டல்களையும் மேற்கொள்ளும் நிறுவனம்.
* அரசின் புலமைப் பரிசில்களை பெற்றுத்தரும் நிறுவனம்.
* 1999ம் ஆண்டிலிருந்து அடிப்படைக் கணினிப்பயிற்சியினை பல்லாயிரக்கணக்கானோருக்கு இலவசமாக வழங்கிய நிறுவனம்.
* பட்டதாரி விரிவுரையாளர்களினாலும் கணினிப் பொறியிலாளாலும் விரிவுரைகள் நடாத்தப்படும் நிறுவனம்.
* யாழ் குடாநாடு இக்கட்டான சூழ்நிலையிலிருந்தபோதும் BIT கற்கைநெறியை சிறப்பாக நடாத்தும் வடக்கு கிழக்கின் ஒரே நிறுவனம்.
* CIMA, Microsoft, SunMicrosystem, COMTIA, CISCO, HP, Linux, Toefl, ICDL, Adobe, BCS ஆகிய முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுவதுடன் அவற்றின் பரீட்சை நிறுவனங்களாவும் விளங்கும் நிறுவனம்.

### தொழிற்சந்தைக்கேற்ப வினைத்திறன் மிகு கற்கைநெறிகளை வழங்கும் உலகின் முன்னணி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த பயிற்சி மையம், அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையம்

CIW
ICDL International Computer Driving Licence
Microsoft
Approved Test Centre
CompTIA
bcs
Adobe
IBM
CIMA
CISCO
DELL
Linux
OpenOffice.org
Sun microsystems
TOEFL
solaris
MySQL
hp

MCS அனைவருக்கும் ICDL, Hardware,English கற்கைநெறிகளிற்கு 100% Discount
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்(பரமேஸ்வராச்சந்தி அருகே)
Bus Route 764
Supported By UNDP/JRRP
SMS your name & course to 0772 395 895 & get 90% Scholorship
web: www.mcsitcampus.org


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

25th Year உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கணனிச் சிறப்பிதழ்

## துறைசார்ந்த படிப்புக்களும் வேலைவாய்ப்புக்களும்

குறுகிய காலத்தில் கணனி படிப்பினைப் படித்து உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பதே இன்றைய இளைஞர்களின், இளம் பெண்களின் விருப்பம். அதிகம் படிப்பதைவிட ஆழமாய்ப் படித்தல் நன்கு பயன்தரும். செம்மையான வேலை வாய்ப்புக்கள் அள்ளித்தரும் சில பயன்தரும் கணனி படிப்புக்கள் காண்போம்.

**Computer Engineering (USA)(கணிப்பொறியியலாளர் USA)**

(Microsoft), (RED hat) ஆகிய நிறுவனங்கள் வழங்குகின்றன. Windows, Linux ஆகிய இயங்கு தளங்களில் காணப்படுகிறது. LAN, WAN, MAN, Wireless Netwoking, Shell scripting ஆகியவற்யை திறம்பட கற்க வேண்டும். படிப்புக்காலம் : **3** முதல் **6** மாதங்கள் (குறுகிய கால விரைவுப்படிப்பும் உண்டு.

**வேலை** : வலைய அமைப்பாளர் **(Network Administrator)** அல்லது பொறி ஆட்சியர் **(System Administrator)** ஊதியம் ஆண்டொன்றுக்கு $50000 (www.payscale.com).

நல்ல நிலைக்கு வர 6 மாதம் முதல் 1 ஆண்டு வரை ஆகும். மேலும் முன்னேற Solaris போன்ற இயங்குதளங்களை கற்றுத்தேற வேண்டும். கீழ்க்காணும் ஏதேனும் ஒரு சான்றிதழ் பெற்றிருத்தல் சிறப்பு.

**சான்றிதழ்கள் :**

- Microsoft Certified System Engineer with network security spl.
- CCNA (Cisco Certified Network Administator)
- CCNP (Cisco Certified Network Professional)
- CWNA (Cisco Wireless Network Administrator)
- RHCE (Redhat Certified Engineer)
- Certified Ethical Hackers
- Sun Certified Java Programer

மேற்படி கற்கை நெறிகளை இல. **324** பலாலி வீதி பல்கலைக்கழகசந்தி அருகே அமைந்துள்ள **MCS** தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பயிலும் மாணவர்களுக்கு இலங்கை அரசு புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றது. இதுவரை 62 மாணவர்கள் அரசின் புலமைப்பரிசிலை பெற்று வருகின்றனர்.

வேலைவாய்ப்புக்களை வாரி வழங்கும் தளங்கள் சில உங்கள் பார்வைக்கு,

**www.monster.com** **www.hotjobs.com,**
**www.naukri.com** **www.timesjobs.com**
**www.recuitment.com** **www.jobstreet.com**
**www.carreirbuilder.ca** **www.computingcareers.co.uk**

**Graphics & Animations Developer (வரைகலை வடிவமைப்பாளர்)**

3D Studio Max, Maya, Adobe Premier, Photoshop போன்றவைகளை திறம்பட கற்க வேண்டும்.

**வேலை:** Silicon Graphics Designer அல்லது Animation Engineer.
ஊதியம்: விளம்பரங்கள், திரைப்படங்களுக்கு Animation செய்யும் வாய்ப்புண்டு. செய்யும் வேலையைப் பொறுத்து 1 இலட்சம் வரை ஊதியம் பெறலாம்.
**சான்றிதழ்கள்** :Adobe Certifications (அடோப் நிறுவனத்தின் சான்றிதழ்கள்)

**Java Developer (ஜாவா வடிவமைப்பாளர்)**

Core Java, J2EE, J2ME திறம்பட கற்க வேண்டும்.

**வேலை**: Java Programmer ஊதியம் : ரூ.40,000/- (தொடக்கமாக)

**சான்றிதழ்கள்**: Sun Certified Java Programmer

**Web designer (இணைய வடிவமைப்பாளர்)**

மாணவர்கள் சுயமான தொழில் வாய்ப்பைப் பெறக்கூடியதும், வேறு தொழில் செய்வோர் மேலதிக வருமானம் ஈட்டக்கூடிய Out Sourcing ஊடாக தொழில் வாய்ப்புக்களை பெறக்கூடியதுமான கற்கை நெறி VB.net, javascript, vbscript, HTML, DHTML, XML, Flash, PHP திறம்பட கற்க வேண்டும்.

**வேலை** : Web designer / Content Manager ஊதியம் : ரூ.40.000/- (தொடக்கமாக)
**சான்றிதழ்கள்:** Zend Engineers, CIW Web Masters,

**MYOB, Quick Book, ACC PACK Accountant,**

Tally கணக்காளர் மிகவும் பயனுள்ள கற்கை நெறி

**வேலை:** Tally Accountant , ஊதியம்: ரூ.20000/- (தொடக்கமாக)

**Desktop Publishing**

Adobe Photoshop CS, CorelDraw, FlashCS5, Powerpoint, MS-Word , MS-Excel போன்றவற்றை திறம்பட கற்றல் வேண்டும்.

**வேலை:** Desktop Publisher or Operator, ஊதியம்: ரூ.**15000**/- (தொடக்கமாக)
**சான்றிதழ்கள்: ICDL, ICDL e-Type(BCS-UK), Adobe Certification**

**Diploma in Auto CAD, Engineering Drawing, 2D, 3D Designing**

**வேலை:** கட்டட வரை கலைஞர், ஊதியம் ரூ.25,000/- (தொடக்கமாக)
**சான்றிதழ்கள்:ICDL CAD,**

**Diploma in English, IELTS, TOFEL, Spoken, Listening, Writing, Reading**

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களையோ, மேற்படிப்புக்களை பூர்த்தி செய்வதற்கும் மிகவும் பயனுள்ளது.





Want to Qualify in IT ?

3 Pass A' Levels? Pending Result → Register for BIT
No Pass A' Levels? No Pass O' Levels? Foundation in Information Technology

Bachelor of Information Technology
University of Colombo

BIT மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி BCS, Computer Engineer(USA), ICDL, Sun Java தகைமைகள்

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

Per Year - ~~55000~~/= 25000/=

FIT, Sem.1, Sem.3 & Sem.5 உங்கள் தெரிவிற்கேற்ப விரிவுரை நேரங்கள்

CIMA UK 100% Discount சித்தி

அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம், பரீட்சை நிலையம்.
MCS இல் CIMA அனைத்து கற்கை பிரிவுகளும்.
எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரிப்பரீட்சைகள்
Job Gurantee Skill Migration, Australia, Canada, UK



Per Module- ~~12000~~/= 2000/=
Free Courses ICDL Diploma in English

JOB (Earn Rs.75,000/-)
CCNP (1 year)
JOB (Rs.20,000/- as a trainee)
CCNA
A/L & O/L

100% PASS RATE CISCO Training Centre at Jaffna

CCNA® CCNP®

அரசு(ICTA)வழங்கும் Scholarship

Benefits of Becoming A CISCO Engineer
- It is a Qualification to migrate to Austrailia, Canada etc
- International salary scale is approximately US$ 5,000
- It helps to get a well paid job in Srilanka & Overseas

Be a Qualified CISCO NETWORK ENGINEER

Network Software Engineer
Microsoft Certified
அரசு(ICTA)வழங்கும் Scholarship

Sri Lanka needs over 5000 it Professionals By 2011 For IT Sector. - Madu Ratnayake - Genral Manager, Virtusa
Earn Rs.30,000/= starting salary per month.
Rs.120.000/= per month with 3 years Experience in SriLanka.
US$ 6000 per month in Middle East, Europe and USA
Source : http://mcpmag.com/salarysurveys/
www.careerbuilder.ca



Per Module Rs.4800 Only

USA, singapore, Australia, Canada, US இல் உள்ள Microsoft.Tech இல் பட்ட மேற்படிப்பை மேற்கொள்ளலாம்.

Microsoft CERTIFIED Systems Engineer

Qualification awared by Microsoft USA
-endorsed by Bill Gates
State -of - art computer lab Facilities
Excellent Job opportunities for sucessful Graduates

CIW Professional இணையத்தள வடிவமைப்பில் சர்வதேச அங்கத்துவம்-CIW
Web Development
Duration 2 Months

Contents : XHTML, CSS, JavaScript , PHP, MySQL, XML (RSS,Maps) Dreamweaver, Photoshop, Flash, Server(Apache and IIS)Domain Registration, Hosting, Control panel, SearchEngine optimize, Google™ (WebMaster tools, AdSense, Adwords)E-mail marketing, Affiliate marketing, Merchant tools.
Extra: Introduction ASP, JSP

பதிவுகளை 17.09.2010 க்கு முன்பு மேற்கொள்ளவும்.

MCS
SMS your name & course to 0772 395 895 & get 90% Scholorship
Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(பரமேஸ்வராச்சந்தி அருகே) web: www.mcsitcampus.org


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

25th Year உதயன் மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கணனிச் சிறப்பிதழ்

ESOFT www.esoft.lk

## எவர் என்ன சொன்னாலும் தகவல் தொழில்நுட்ப துறையில் சாதனை மாணவர்களை உருவாக்கி சாதனை படைத்தது ESOFT மட்டுமே........

இரண்டாயிரமாம் ஆண்டில் எமது நிறுவனம் தனது கதவுகளை திறந்தபோது, நாம் அடிப்படை அறிவிலிருந்தே தொழில்சார் கற்கை நெறிகளை அறிமுகம் செய்தோம். எப்படியும் தரமானதோர் கல்வியினை வழங்குவதிலேயே நாம் ஆர்வம் காட்டினோம். அதனை மாணவர்களும் சரிவர புரிந்து கொண்டனர். இதனூடாக எமது துறையில் நாம் உச்ச நிலையை அடையமுடிந்தது. இன்று நாம் கொழும்பு பல்கலைகழகத்தின் (BIT DEGREE) தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமானிப் பரீட்சைக்கான வழிகாட்டல் நிறுவனங்களில் முன்னணியில் திகழ்கின்றோம். அதுபோல (BCS) கணனி விஞ்ஞானமானிப்பட்டம் பெறுவதற்கான பரீட்சைக்கான வழிகாட்டும் கல்வியாளர்களாகவும் விளங்குகின்றோம்.

மாணவர்கள், தொழில்வாய்பைத் தேடுவோர் ஆகிய எவரும் தமது கல்விக்கான உச்சநோக்கத்துக்குஅமைய எமது நிறுவனத்தில் கல்விவாய்ப்பினை பெறமுடியும். இன்றைய காலங்களில் இந்நிறுவனத்திற்கு ஊடாக கல்வி கற்றோரிற்கு கிடைத்ததை விடவும் அதிகமான அளவில் அதைவிடவும் சிறப்பான வசதிவாய்ப்புக்களை Esoft தற்போது வழங்கி வருகின்றது.

அண்மையில் G.C.E.A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் மாணவர்களின் பெற்றோரும் நேரடியாக எமது கிளைநிறுவனங்களிற்கு விஜயம் செய்து எமது நிறுவனத்தின் கல்வி செயற்பாடுகள், அதற்கான புதிய வசதி வாய்ப்புக்கள் என்பவற்றை அறிந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஒரு நியாயமான கால எல்லைக்குள் மிகச்சிறந்த ஒரு கல்வித்தரத்தையும் பட்டத்தையும் கணனித்துறையில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் விதத்திலான பல்வகைப்பட்ட கல்வித்துறைகளை அறிமுகம் செய்துள்ளோம்.

**இங்குள்ள கல்வித்துறைகள் பற்றிய சுருக்கம்...........**

### BIT DEGREE

இலங்கை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கொழும்பு பல்கலைக்கழக, மொறட்டுவ பல்கலைக்கழக BIT பயிற்சி நெறியானது, பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாத மாணவர்களும் கணனி துறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ய வழிவகுக்கின்றது. ஒவ்வொரு வருடத்தை பூர்த்தி செய்யும் போதும் அதற்கான சான்றிதழ்கள் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும்.
மென்பொருள் அபிவிருத்தி துறையில் பட்டதாரிகளை கொழும்பு பல்கலைக்கழகத்தினூடாக உருவாக்குவது எமது நோக்கங்களில் ஒன்றாகும். இத்துறை வேலை வாய்ப்புக்களை அதிகம் தருவதாகவும் பெறுபேறுகள் வெளியாகும் முன்னரே பல வெளிநாட்டுநிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களை தருவதாகவும் அமையும். இரண்டாயிரமாம் ஆண்டு முதல் இத்துறை தொடர்பாக தரமான கல்வியை வழங்குவதோடு Esoft மாணவர்கள் அதிசிறந்த பெறுபேறுகளுக்கான தங்கப்பதக்கங்களையும் பெற்றுள்ளனர். அத்துடன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பங்காளியாக மேற்குறிப்பிட்ட வகுப்புக்களையும் Esoft நடாத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

### BCS Higher Education Qualification

கணனித்துறையில் மிகவும் குறுகிய காலத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு இலகுவான பயிற்சி நெறியாக BCS விளங்குகின்றது. இப்பயிற்சி நெறி தகவல் தொழில்நுட்பத்துறையில் ஒரு Chartered தகமையாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலும் இப்பயிற்சி நெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் இலங்கையில் உள்ள மொறட்டுவ பல்கலைக்கழகத்திலும், இலண்டனில உள்ள 50 இற்கும் மேற்பட்ட முன்னனிப் பல்கலைக்கழகங்களிலும் தங்கள் பட்ட மேற்படிப்புக்களை தொடரமுடியும்.
ஒருவர் 16 வயது நிரம்பியவராக இருந்து க.பொ.த சாதாரணதரத்தை சித்தியடைந்திருந்தால் இத்துறையில் பயில முடியும்.

துரித வழித்திட்டம் - BCS பயிற்சிநெறி ஆனது 18மாத காலப்பகுதியை உள்ளடக்கியது. ஏனைய பட்டப்படிப்புக்கள் போல் 36-48 மாதங்கள் வரையிலான நீண்டகாலம் இதற்கு அவசியம் இல்லை.

Esoft மாணவர்கள் தொடர்ச்சியாக மிகச்சிறந்த பெறுபேறுகளை பெற்று சர்வதேச தரத்தில் பரிசில்களை பெற்றுள்ளனர். Esoft நிறுவனமானது இலங்கையில் BCS கற்பதற்கான ஒரு சிறந்த நிறுவனமாக விளங்கிவருகின்றது. இதற்கான சான்றுகளாக எமது மாணவர்கள் தொடர்ச்சியாக 2008,2009 ஆண்டுகளில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பலசர்வதேச விருதுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### Edexcel HND

இலண்டனில் உள்ள Edexcel நிறுவனமானது சர்வதேச அங்கீகாரத்துடனான உயர் டிப்ளோமா (Higher Diploma) சான்றிதழ்களை தகவல் தொழில்நுட்பம், வியாபார முகாமைத்துவம் போன்ற துறைகளில் வழங்கிவருகின்றது. இரண்டு வருடங்களை உள்ளடக்கிய இப்பயிற்சி நெறியை பூர்த்தி செய்பவர்கள் இலண்டன் சென்று இறுதியாண்டைத் தொடர்வதன் மூலம் சர்வதேச அங்கீகாரத்துடனான பட்டப் படிப்பை பூர்த்தி செய்ய முடியும்.
மேலும் இப்பயிற்சி நெறியின் இறுதியாண்டை கொழும்பிலும் தொடரமுடிவது வெளிநாடுசென்று பயிலமுடியாத மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக உள்ளது.எமது நிறுவனத்தில் பின்வரும் துறைகளில் இப்பயிறிசி நெறியைத் தொடாரமுடியும்.

- HND in Computing
- HND in Business(General)
- HND in Business IT
- HND in Business HR
- HND in Busess Management

### Short Term Courses

எமது டிப்ளோமா பயிற்சி நெறிகள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்டவை. இப்பயிற்சி நெறிகளில் இணைவதன்மூலம் மாணவர்கள் தங்கள் எதிர்கால தகவல் தொழில்நுட்ப துறையை சரியான முறையில் தெரிவு செய்வதற்கான அடிப்படை விடயங்களை அறிந்து கொள்ள முடியும். இப்பயிற்சி நெறி 4 மாதங்களை உள்ளடக்கியது.
மேலும் இப்பயிற்சி நெறி பின்வரும் சிறப்பு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

- Diploma in IT
- Diploma in Business Management
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering

எமது அனைத்து வெற்றிகளிற்கும் எமது அனுபவமும், திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்களே காரணம்.

மாணவர்களிற்கு சிறந்த கல்வியை ஊட்டுவதற்காக நாம் எமது விரிவுரையாளர்களிற்கு சிறந்த பயிற்சிகளை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வழங்கிவருகின்றோம்.
இலங்கையின் கல்வியமைச்சின் அங்கீகாரத்துடன் ஆசிரியர்களிற்கான கணனி பயிற்சி நெறிகளையும்வழங்கி வருகின்றோம். இதில் சிறப்பம்சம் என்னவென்றால் போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க ஆசிரியர்கள் 100பேருக்கு இதுவரை நாம் ICDL பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்துள்ளோம் . மேலும் இம்மாவட்டத்தில் உள்ள அதிபர்கள், உபஅதிபர்களுக்கான பயிற்சி நெறியை மிகவிரைவில் தொடங்கவுள்ளோம்.

**எமது கல்வி தவிர்ந்த செயற்பாடுகள்**

ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களது கல்வி தவிர்ந்த ஆக்கங்களை வெளிக்கொணர்வதற்காக நாம் Sports Day, Annual Tour, Cricket Festival, Get Together போன்றவற்றை எமதுஅனைத்து கிளைகளிலும் நடாத்தி மாணவர்களிடையே மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்தவும் Esoft ஒரு களமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

BCS British Computer Society - UK

Esoft ல் BCS கற்பவர்களே சர்வதேச ரீதியிலும் முதற் பரிசுகளை பெறுபவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

BCS பட்டமளிப்பு விழாவில் பல சிறப்பு விருதுகளை Esoft மாணவர்கள் வென்றார்கள் என்பதைஉங்களுக்கு அறித்தருகின்றோம்.....





Top Candidate Certifcate Level | Top Candidate Diploma Level | Top Candidate PGD Level
BCS Convocation 2008 ESOFT Students

Top Candidate Certifcate Level | Top Candidate Diploma Level | Top Candidate PGD Level | Top Candidate PGD Level
BCS Convocation 2007 ESOFT Students

Worldwide Winners
BCS Convocation 2006

**டிப்ளோமாக் கற்கைநெறி**

- Diploma in Information Technology
- Diploma in Web Engineering
- Diploma in Software Engineering
- Diploma in Business Management

BIT

BIT கற்கை நெறிக்கு தொடர்ச்சியாக இலங்கையின் No1 நிறுவனமாகத் திகழும் Esoft நிறுவனத்தின் அனைத்துக் கிளைகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

**உங்கள் பதிவுகளை எமது கிளைகளில் மேற்கொள்ளவும்**

2009ம் ஆண்டு நிகழ்ந்த கொழும்புபல்கலைக்கழக BIT பட்டமளிப்பு விழாவில் 138 மாணவர்கள் பட்டம் பெற்றார்கள். அவர்களில் 72 மாணவர்கள் எமது நிறுவனத்தில் கல்வி கற்றவர்கள் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.



The Gold Medalist in 2009 BIT Convocation | The Gold Medalist in 2008 BIT Convocation | First Class Degree Holder 2007 BIT Convocation

BIT HOTLINE 077-3099308

மாணவர்களே!
BIT கற்கை நெறிக்கு இலங்கையின் No1 நிறுவனத்தில் இணைவதற்கு உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

## HND IN COMPUTING
edexcel-UK

Sun Certification for Java | Network Admimistration Linux | MCITP / MCTS Microsoft | CCNA Cisco | ICT, GIT | ICDL International Computing Driving Licence | After A/L Students DiTEC | Dip in Computerized Accounting

edexcel-UK HND

- HND in Business
- HND in Business IT
- HND in HRM
- HND in Business Management

எமது 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாருமே வழங்காத புலமைப்பரிசில்கள்
எமது வழமையான பயிற்சிக் கட்டணம் 201600.00
புலமைபரிசில் இதோ....
Full Payment Plan Rs.201,600 - 75000 (Scholarship) = 126,600/= மட்டுமே
Installment Plan Rs.201,600 - 50000 (Scholarship) = 151,600/= மட்டுமே

**Auto CAD**

பிரபல விரிவுரையாளர்களால் 2D, 3D வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது.

ESOFT www.esoft.lk

ESOFT Computer Studies
Regional Head Office
114, Navalar Rd Jaffna
T.P: 0212224148

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Jaffna | : 267, Navalar Road, | 021 222 0345 | Kilinochchi | : 01, Kanagapuram Road, | 021 228 5444 |
| Nelliyady | : 153, Jaffna Road, | 021 226 4940 | Vavuniya | : 115, Mill Road, | 024 222 6060 |
| Chavakachcheri | : Periya Arasady, | 021 227 0333 | Mannar | :Convent St, Sinnakadai, | 023 222 3377 |

Branches Islandwide: Anuradhapura, Bandarawela, Battaramulla, Colombo, Empilipitiya, Galle, Ja-Ela,Kalmunai, Kandy, Kegalle, Kiribathgoda, Kurunegala, Matale, Matara, Nawlapitiya, Negombo, Piliyandala, Polonnaruwa.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# TECHNO WORLD
# கணனிப் பயிற்சி நிறுவனம் வழங்கும்
## WIN மெகா புலமைப்பரிசில் இலவசப் பரீட்சை

தகவல் தொழில்நுட்பத்துறையில் 11 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் இந்நிறுவனமானது இவ்வாண்டும் நாடளாவியரீதியில் கொம்பியூட்டர் உயர்கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் 19.09.2010 ஞாயிறு நடத்தவுள்ளது.

கணனிக் கல்விக்காக நாடளாவிய ரீதியில் 20 பயிற்சிமையங்களில் நடைபெறும் இந்த இலவசப் புலமைப் பரிசில் பரீட்சை கணனியில் ஆர்வமுடைய அனைவரையும் தன்னகத்தே உள்வாங்கி அவர்களின் தேவைகளுக்கு ஏற்பவும் ஆற்றலுக்கு ஏற்பவும் கணனிப் பயிற்சியினை வழங்குவதில் முதலிடத்தில் உள்ளது. **Techno World** கணனிப் பயிற்சி நிறுவனம்.

இப்புலமைப்பரிசில் பரீட்சையானது பொதுஅறிவு மற்றும் பொது உளச்சார்பினைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. இப்பரீட்சையில் மாணவர்கள் பெறும் புள்ளிகளுக்கமைய 30%, 40%, 50%, 60%, 70% மற்றும் 80% வரையான ஸ்கொலர்சிப் வழங்கப்படும். இதனைப் பெறுவதனூடாக மாணவர்களின் கட்டணச் செலவு குறைக்கப்படுகிறது.

இவ்வாறான ஸ்கொலர்சிப்பினூடாக கடந்த காலங்களில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பயன்பெற்றுள்ளார்கள். கிராமம் முதல் நகரம் வரை அனைவருக்கும் கணனிக் கல்வியை சர்வதேச தரத்திலும் குறைந்த கட்டணத்திலும் இலகுவான முறையிலும் தகவல் தொழில்நுட்பத் துறையில் நவீன பயிற்சிகள் அனைத்தையும் கணனியில் ஆர்வமுடைய அனைவருக்கும் கொண்டு செல்வதே **Techno World**டின் பிரதான நோக்கமாகும்.

இம்முறை நீங்களும் பங்குபெறுங்கள் வெற்றி நிச்சயம். இந்த இலவச பரீட்சை பற்றிய மேலதிக விவரங்களுக்கும் பரீட்சைக்கான இலவச அனுமதிகளுக்கும் கிராமம் முதல் நகரம் வரை காணப்படும் எமது 20 பயிற்சி மையங்களை நாடவும்.

### யாழ். குடாநாட்டில் Techno World பயிற்சி மையங்கள்

- → கஸ்தூரியார் வீதியில் → 344, கஸ்தூரியார் வீதி.
- → மானிப்பாயில் → மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில் யாழ்.வீதி.
- → திருநெல்வேலியில் → 64, பலாலி வீதி.
- → சாவகச்சேரியில் → ஹென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில்.
- → நெல்லியடியில் → மாலிசந்தி - கரவெட்டி - நெல்லியடி.
- → மீசாலையில் → ஐயாகடைச் சந்தி.

ஆகிய 06 பயிற்சி மையங்களிலும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

### மதகு புனரமைப்பு

வரணி-குடத்தனை பிரதான வீதியில் பல காலமாக உடைத்திருந்த நிலையில் இருந்த சிறிய கண் மதகு ஒன்று கடந்தவாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் புதிய கொங்கிறீட் கண் மதகுகள் போடப்பட்டு திருத்தப்பட்டுள்ளது.

இப்பாலம் பல காலமாக உடைத்திருந்த நிலையில் பாதுகாப்புத் தரப்பினர் இந்த உடைந்த மதகின் மீது மண்போட்டு மூடிய நிலையில் வாகனங்கள் பயணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பாதையில் குறிப்பிட்ட தூரம் வரை ஆதாவது மாசேரிக் கிராம எல்லையில் இருந்து குடத்தனை 6ஆம் கட்டை வரை இவ் வீதி சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகப் புனரமைக்கப்படவில்லை என்பது குறிப்பித் தக்கது.(த-122)

### ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 55
திகதி - 11.09.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: A அதிர்ஷ்ட இலக்கம்: 02 வெற்றி இலக்கம்: 2 8 8 7 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | ரூ. | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A | 02 | 2 | 8 | 8 | 7 | 8 | 17,577,737.00 | - |
| 1 பரிசு | | 02 | 2 | 8 | 8 | 7 | 8 | 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 2 | 8 | 8 | 7 | 8 | 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 8 | 8 | 7 | 8 | 10,000.00 | 26 |
| 4 பரிசு | | | | | 8 | 7 | 8 | 1,000.00 | 251 |
| 5 பரிசு | | | | | | 7 | 8 | 50.00 | 2381 |
| 6 பரிசு | | | | | | | 8 | 20.00 | 23416 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | ரூ. | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 2 | 8 | 8 | 7 | | 1,000.00 | 24 |
| 8 பரிசு | | | 2 | 8 | 8 | | | 100.00 | 244 |
| 9 பரிசு | | | 2 | 8 | | | | 50.00 | 2443 |
| 10 பரிசு | A | | | | | | | 20.00 | 9655 |
| 11 பரிசு | A | 02 | | | | | | 100.00 | 1116 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,873,620.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ. 17,924,215.00



## 25 உதயன் வெள்ளிவிழாவை முன்னிட்டு
# மாணவர் திறனறியும் போட்டிகள்

மாணவர்களே!

★ உங்களின் பொது அறிவு, பொது உளச் சார்ந்த திறனை நிரூபிக்க ஒரு பொன்னான வாய்ப்பு!

★ 25ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும் உதயனின் வெள்ளி விழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான திறனறியும் விசேட போட்டி.

★ தவறாது பங்குபற்றி உங்கள் திறமையை வெளிப்படுத்தி பரிசுகளையும் சான்றிதழ்களையும் வென்றிடுங்கள்.

கோட்டம், வலயம், மாகாணம் ஆகிய நிலைகளில் மூன்று பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படும்.

பிரிவு I - தரம் 6, 7, 8 மாணவர்கள்
பிரிவு II - தரம் 9, 10, 11 மாணவர்கள்
பிரிவு III - தரம் 12, 13 மாணவர்கள்

பதிவுகள் பற்றிய விவரமும் மேலதிக தகவல்களும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


Win மெகா கம்பியூட்டர் ஸ்கொலர்ஸிப்

... இலவச பரீட்சை ...

19-09-2010

உங்கள் அறிவுத்திறனை நிரூபித்து 80% ஸ்கொலர்ஸிப் வெல்லுங்கள்



இன்று முதல் நெல்லியடி மற்றும் மீசாலையிலும்

இலவச அனுமதிகளை அருகில் உள்ள எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்...

TECHNO WORLD Studies (Pvt) Ltd

கணினிப் பயிற்சி நிறுவனம்

344, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎4921124
மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில் யாழ் வீதி, மானிப்பாய். ☎4922400
64, பலாலி வீதி, திருநெல்வேலி. ☎4922401
கென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில், சாவகச்சேரி. ☎5102600
246/25, மாலி சந்தி, கரவெட்டி-நெல்லியடி
ஐயாகடை சந்தி, மீசாலை

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்


### மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2291
திகதி 12.09.2010

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்: C 8 1 9 9 7 6

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | | | | | | | | ரூபா | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | C | 8 | 1 | 9 | 9 | 7 | 6 | 10,000,000/= | - |
| 1ம் பரிசுகள் | | 8 | 1 | 9 | 9 | 7 | 6 | 20,00,000/= | 01 |
| 2ம் பரிசுகள் | | | 1 | 9 | 9 | 7 | 6 | 100,000/= | 08 |
| 3ம் பரிசுகள் | | | | 9 | 9 | 7 | 6 | 10,000/= | 64 |
| 4ம் பரிசுகள் | | | | | 9 | 7 | 6 | 1,000/= | 728 |
| 5ம் பரிசுகள் | | | | | | 7 | 6 | 100/= | 7170 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 6 | 20/= | 71228 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | | | | | | | | ரூபா | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 8 | 1 | 9 | 9 | 7 | | 10,000/= | 08 |
| 8ம் பரிசுகள் | | 8 | 1 | 9 | 9 | | | 1,000/= | 74 |
| 9ம் பரிசுகள் | | 8 | 1 | 9 | | | | 100/= | 712 |
| 10ம் பரிசுகள் | | 8 | 1 | | | | | 50/= | 7105 |
| 11ம் பரிசுகள் | C | | | | | | | 20/= | 28431 |


அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா 10,186,863.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா 7,458,630.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சியின் பொருளாதாரத்தில் தோற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலை

வடமராட்சி, கைத்தொழிற் துறையில் முன்னணி வகிக்கும் இடமாக விளங்குவதால் யாழ்ப்பாணப் பொருளாதாரத்தில் இதன் வகிபங்கு முக்கியமானது. அந்த வகையில் தோற்பொருள் உற்பத்தியிலும் விவசாயம், மீன்பிடி, நெசவுத் தொழில் போன்றவற்றில் இது சிறந்து விளங்குகின்றது. அந்த வகையில் 'தோற்பொருள் உற்பத்தி' பற்றி ஏற்கனவே உதயனில் வெளியான வடமராட்சி வலம் பகுதியில் 'குடிசைக் கைத்தொழில்' மீட்சி பெறுமா என்ற தலைப்பில் ஆராயப்பட்டிருந்தது. இந்த வகையிலே வடமராட்சி, வதிரிப் பகுதியில் தோற்பொருள் உற்பத்திச் சாலை ஒன்று 15.08.2010 ஞாயிற்றுக்கிழமை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் இலங்கை கைத்தொழில் அதிகார சபைப் பணிப்பாளர் ஜஸ்மின் ஞானப்பெரும, இலங்கை கைத்தொழில் அதிகார சபைப் பொறுப்பதிகாரி எல்.பி.எஸ். கருணதாச மற்றும் கரவெட்டிப் பிரதேசசெயலர் எஸ்.சத்தியசீலன் மற்றும் பலரும் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

இங்கு உற்பத்தி செய்யும் செருப்புகள் யாழ்ப்பாணப் பகுதியில் விநியோகிக்கப்படுகின்றது. ஆரம்ப கட்டமாக இங்கு ஆண், பெண் என இருபாலருமாக 15 பேர் கொண்ட குழு கடமையில் ஈடுபடுகின்றது. இந்தக் குழு யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாக விளங்குகின்றனர். இதனால் சுமார் 150 குடும்பங்கள் வாழ்வாதாரத்தைப் பெறும் சூழல் உருவாகியுள்ளது. இத் தொழிலை மேம்படுத்தவும் பாதணி உற்பத்தியில் தொடர்ச்சியாக இளைஞர், யுவதிகளைப் பயிற்சியில் ஈடுபடுத்தவும் முயன்று வருகின்றனர். இத்தொழிற்சாலை இலங்கைத் தோற்பொருள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

இதற்கான மூலப் பொருள்களைப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சே வழங்கி வருகின்றது. இவர்களின் எதிர்காலத் திட்டமாக யாழ்ப்பாணத்தின் பிரதான நகரங்கள் எல்லாவற்றிலும் தமது காட்சிக் கூடங்களை நிறுவி தமது வியாபாரத்தைப் பெருக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. இப்போது 5000 சோடி சப்பாத்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் தற்போது பயிற்சிகள் வழங்கும் காலமாக (Training period) ஆக விளங்கி வருகின்றது. இவர்களுக்கான மூலப் பொருள்கள் கொழும்பில் இருந்தே இறக்குமதி செய்து வழங்கப்பட்டு வருகின்றது. பயிற்சிகளை வழங்குவதற்கென இலங்கைக் கைத்தொழில் அதிகார சபையின் நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவிற்காக இலங்கைக் கைத்தொழில் அதிகாரசபையில் மொறட்டுவவைச் சேர்ந்த மதுரங்க சமரக்கோன் மற்றும் நிபுணத்துவக் குழுவில் இலங்கை கைத்தொழில் அதிகார சபையை சேர்ந்த ஆறுமுகம் ஆனந்தகுமார் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். எனவே இதுவரை காலமும் தமிழ் மாணவர்கள் இப்பயிற்சி நெறியைக் கட்டுகஸ்தோட்டை கல்லூரியில் கற்று வந்தனர். ஆனால் தற்போது தமிழ் யாழ்.மாவட்டப் பயிற்சியாளர்கள் இங்கு கல்வி கற்றுத் தமது தொழிலை மேம்படுத்தவும் வருமானத்தைப் பெற்றுக் கொள்வும் ஏதுவாக அமைகின்றது. இதற்கான தொழிற்சாலைக் கட்டடம் சுமார் 10 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை சிறப்பாக இயங்கி வருகின்ற போதும் தமது தொழிலைப் பெருக்கிக்கொள்ள, இலக்கினை வெற்றிகரமாக அடைய இன்னும் பல தேவைப்பாடுகள் உள்ளதாக எம்மிடம் தெரிவித்தனர். இவர்கள் தளபாடப்பற்றாக்குறை, பொருள்கள் பற்றாக்குறை என்பவற்றை எதிர்கொள்கின்றனர். இங்கு வேலை செய்யும் வறிய பெண் பிள்ளைகள் தூர இடங்களில் இருந்து வருகை தருவதால் போக்குவரத்தில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் இவர்களுக்கு சைக்கிள்களை வழங்கக் கோருகின்றனர். எனவே மேற் குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்க்க அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் தேவைப்படுகின்றதாகத் தெரிவிக்கின்றனர். எனவே தயவு செய்து உதவிகளை வழங்க கோருகின்றனர். கோரிக்கை நிறைவேறுமா? காலம் தான் பதில் சொல்லும்.




தொகுப்பு: ஹரிஸ்

# வீதி சமிக்ஞைகள் எங்கே?



வடமராட்சியில் பல இடங்களில் வீதிச்சமிக்ஞைகள் நிறுவப்படாமல் உள்ளன. நிறுவப்பட்ட சில வீதிச்சமிக்ஞைகள் சேதமடைந்தும் உள்ளன. அந்த வகையிலே பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் மஞ்சள் கோடுகள் வடமராட்சியின் முக்கிய சில இடங்களில் அழிந்துள்ளன. குறிப்பாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி மெதடிஸ்தமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை போன்ற வடமராட்சிப் பாடசாலைகளுக்கு முன்னால் மஞ்சள் கோடுகள் நிறுவப்படாமல் உள்ளது பற்றி நாம் கேள்வி எழுப்புகிறோம். சில பாடசாலைகளுக்கு முன்னால் இவை அழிந்த நிலையில் உள்ளன.

ஆனாலும் பாடசாலைகள் தொடங்கும் வேளையிலும் முடியும் வேளையிலும் பாடசாலைகளுக்கு முன்னால் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவது பாராட்டப்படக் கூடியது. குறிப்பாக வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் நிர்வாகத்தொகுதி வீதியின் ஒரு புறமும் சில கட்டடப்பகுதிகள் வீதியின் இன்னொரு பக்கமாகவும் உள்ளன. இதேவேளை மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையின் நிமித்தம் வீதியைக் கடக்க முற்படும் சந்தர்ப்பத்தில் வீதி விபத்துகள் அதிகம் ஏற்படவாய்ப்புண்டு.

இது போன்ற கட்டட அமைப்பு முறையில் மேலும் சில பாடசாலைகள் உள்ளன. இந்நிலையில் விபத்துக்கள் ஏற்பட்டபிறகு இது தான் காரணம் என்று நடவடிக்கை எடுப்பதிலோ அல்லது விழுந்தடித்து அறிக்கை விடுவதிலோ எந்த அர்த்தமும் இல்லை: எனவே வீதிச் சமிக்ஞைகளைப் பேணுவதும் சேதமடைந்துள்ள வீதிகளை புனரமைப்பதும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கடமையல்லவா? வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளே இது உங்களின் கவனத்திற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரின்றிக் கருகும் நிலையில் நெல்வயல்கள்; உதவி செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி,செப்.14

கிளிநொச்சி மாவட்டத்தில் ஸ்கந்தபுரம் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட நெல் வயல்கள் போதிய நீர் பாய்ச்சப்படாமை யால் எரியும் நிலையிலுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அக்கராயன் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்டு வரும் இந்த நெல்வயல்களுக்குப் போதிய நீர் பாய்ச்ச முடியாத அளவுக்கு குறைந் தளவு நீரே வாய்க்கால்களில் உள்ளது. மக்கள் இந்தப் பிரதேசத்தில் மீள்குடி யேறிய பின்னர் நெற் செய்கையை ஊக்கு விக்கும் முகமாக அரசு சில மானியங்களை வழங்கி ஊக்குவித்திருந்த போதிலும் அறுவடை நெருங்கும் வேளையில் நீர்ப் பற்றாக்குறை காரணமாக இவை முழுமை யாகப் பாதிப்படையக் கூடிய நிலையில் உள்ளதால் விவசாயிகள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் விரைந்து செயற்பட்டு தாம் எதிர்நோக்கும் பயிர் நாசத்தைத் தடுக்க வேண்டுமென்பதே இப்பகுதி விவசாயிகளின் வேண்டுகோ ளாகும்.

(க-405)

# பளை நகரப் பகுதியில் டெங்கு ஒழிப்புக்கான புகையூட்டல் நடவடிக்கை

பளை,செப்.14

பளைநகரப்பகுதியில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த புகையூட்டல் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன.

நகரப் பகுதியில் உள்ள படைமுகாம் ஒன்றில் இருந்த படை வீரர் ஒருவருக்கு டெங்கு நோய் இருப்பதாக இனங்காணப் பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பளை நகரப்பகுதியில் உள்ள அனைத்து அரச திணைக்களங்கள் மற்றும் படையி னரின் முகாம்கள் ஆகியவற்றில் புகை யூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாக பளை சுகாதார வைத்திய அதி காரி பிரிவுத் தலைமை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.பாலதேவா தெரிவித்துள் ளார்.

(க-எ-236)

# பச்சிலைப்பள்ளியில் மீள் குடியேறியவர்களுக்கு தறப்பாள், மரங்கள் கையளிப்பு

பளை,செப்.14

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத் துக்கு உட்பட்ட 597 குடும்பங்களுக்கு தற்காலிக குடிசைகள் அமைப்பதற்காக தறப்பாள், மரங்கள் போன்றன வழங் கப்பட்டுள்ளன.

யுத்தத்தினால் வீடுகளை இழந்த குடும்பங்களில் 597 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் தற்காலிக குடி சைகளை அமைப்பதற்காக இந்த தறப் பாள் மற்றும் மரங்கள் வழங்கப்பட்டதாக பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் ரி.முகுந்தன் தெரிவித்தார்.

(த-313-315)




# வசதிகளற்ற பஸ் தரிப்பிடம்; மழை,வெயிலில் காயும் பிரயாணிகள்

பளை,செப்.14

மீள்குடியேற்றம் நிகழ்ந்து இரண்டு மாதங்களைக் கடந்த நிலையிலும் பச்சி லைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பளை நகர பஸ் தரிப்பிடம் போதிய வசதிகளற்றுக் காணப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த பஸ் தரிப்பிடத்திலேயே முச்சக் கரவண்டி, மினிபஸ் போன்றவையும் தரித்து நிற்பதால் போதிய இடவசதி இல்லாததன் காரணமாக இவற்றை நகர்த் துவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன.

மேலும் பேருந்துப் பயணிகள் தரித்து நிற்பதற்கான கட்டட வசதிகளும் இல்லா ததால் மழை, வெய்யிலில் அவர்கள் அகப்பட்டு துன்பத்தை அனுபவிக்கின் றனர்.

எனவே துன்பத்திற்குள் சிக்கி அல் லாடும் இந்த மக்களை மென் மேலும் வருத்தாமல் இந்த பஸ் தரிப்பிடத்தை சீர் செய்து வழங்க வேண்டியது உரிய வர்களின் கடமையென பாதிக்கப்பட்ட இந்த மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

(க-313-315)

# கிளிநொச்சியின் ஏனைய பகுதிகளிலும் மக்கள் விரைவில் குடியமர்த்தப்படுவர்

## கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ராஜகுரு தெரிவிப்பு

பளை,செப்.14

சாந்தபுரம் மக்கள் மீள்குடியேற்றப் பட்டது போல கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் நிகழாத ஏனைய கிராமங் களிலும் மக்கள் விரைவில் குடியேற்றப் படுவர் என கிளிநொச்சி மாவட்ட கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் ராஜகுரு தெரிவித்துள்ளார்.

சாந்தபுரம் மக்களை குடியேற அனு மதித்தமை தொடர்பில் இராணுவத் தள பதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞா னம் சிறிதரன் சார்பில் நன்றி தெரிவிக் கப்பட்ட போது கருத்து தெரிவித்த இரா ணுவத் தளபதி மக்களைச் சொந்தக் காணி களில் குடியேற்றத் தாம் முழுமனதுடன் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் விரை வில் ஏனைய கிராமமக்களும் சொந்தக் காணிகளுக்குச் செல்ல அனுமதியளிக் கப்படுவர் எனவும் தெரிவித்தார்.

(க-301)

# அநாதைப் பிள்ளைகளுக்கு மாதாந்த உதவிப்பணம் வழங்கல்

பளை,செப்.14

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள அநாதைப் பிள்ளைகளுக்கு மாதாந்தம் 3000 ரூபா சிறுவர் நன்னடத்தை திணைக்களத் தினால் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

தாய், தந்தையை இழந்து உறவின ரோடு அல்லது ஏனையோரின் தயவில் தங்கி வாழும் அநாதைப் பிள்ளைகளின் அன்றாடத் தேவைகளுக்காக மாதாந்தம் இந்தத் தொகை ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுவதாகப் பிரதேச செயலாளர் ரி.முகுந்தன் தெரிவித்தார்.

(க-313-315)

# பளையில் பொது இடங்களில் 6 மலசல கூடங்கள் அமைப்பு

பளை,செப்.14

பளை நகரத்தின் பச்சிலைப்பள்ளி பிர தேச சபைக்கு உட்பட்ட பொது இடங் களில் ஆறு மலசல கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளதாக பிரதேச சபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

பொதுச் சந்தை, பஸ் தரிப்பிடம், புது காட்டுச் சந்தி, பிரதேச சபை உபஅலு வலகம் ஆகிய இடங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக ஆறு மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற் றின் பராமரிப்புப் பணிகளை பிரதேச சபை மேற்கொண்டு பொது மக்களின் நன்மை கருதி முக்கியமான பொது இடங்களில் இந்த ஆறு மலசல கூடங்களை அமைத்து வழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-315-313)

# மன்னாரில் பாணின் விலை 55 ரூபா; கண்டுகொள்ளாத அரச அதிகாரிகள்

மன்னார்,செப்.14

நாடு பூராவும் பாணின் விலை மூன்று ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள போதி லும், மன்னாரில் அதன்விலை 10 ரூபா வால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அண்மையில் ஒரு கிலோ மாவின் விலை மூன்று ரூபாவால் அதிகரிக்கப் பட்டது தெரிந்ததே. இதன் பிரகாரம் வெதுப்பக உரிமையாளர் சங்கங்கள் தன்னிச்சையான முறையில் பாணின் விலையையும் மூன்று ரூபாவினால் அதி கரித்திருந்தன. இதன் பிரகாரம் நாடு பூராவும் பாண் ஒன்றின் நிர்ணயிக்கப்பட்ட விலை 45 ரூபா என அறிவித்துள்ள போதி லும் மன்னாரில் மட்டும் 10 ரூபாயால் அதிகரித்து 55 ரூபாவாக விற்பனை செய் யப்படுகின்றது.

இதனை மன்னார் மாவட்ட செயலகத் திலுள்ள உயர் அதிகாரிகள் கண்டு கொள் ளாமல் உள்ளனர். அப்பாவி மன்னார் மக் கள் கேட்கும் பணத்தைக் கொடுத்து பாணை வாங்கிச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளதாகவும் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

(க-80)

# கிளிநொச்சி வைத்தியசாலையின் புனர்வாழ்வுச் சிகிச்சை நிலையம் பொதுமக்களுக்கும், படைவீரர்களுக்கும் ஒரு வரப்பிரசாதம்

கிளிநொச்சி,செப்.14

கிளிநொச்சி வைத்தியசாலையில் தனி யான பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு புனர்வாழ்வுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


'ஹன்டிக்கப் இன்ரர் நஷனல்' நிறு வனத்தின் அனுசரணையுடன் யுத்தத்தின் காரணமாக கை, கால் போன்றவற்றை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங் கள் பொருத்தப்படுவதுடன், முள்ளந் தண்டுப் பாதிப்பால் கை,கால் வழங் காதவர்கள், வலுக்குறைந்த சிறுவர்கள், மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப் பட்டவர்கள் எனப் பல தரப்பினருக்கும் இந் தச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சிகிச்சை நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களை 'ஹன்டிக் கப் இன்ரர் நஷனல்' நிறுவனம் வழங் கியுள்ளதுடன் சிகிச்சை பெறுவோருக்கு செயற்கை அவயவங்கள், சக்கர நாற்காலி, ஊன்றுகோல்கள் விசேடமாக வடிவமைக் கப்பட்ட படுக்கைகள், மெத்தைகள் என்பன வற்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வடமாகாணத்தில் கிளிநொச்சி வைத் தியசாலையில் மட்டுமே இந்த நிறுவனம் இதுபோன்ற சேவைகளில் ஈடுபட்டு வரு வதனால் பாதிக்கப்பட்டவர்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருப் பினும் வாரத்தில் செவ்வாய், புதன், வியா ழன் ஆகிய தினங்களில் நடைபெற்று வரும் இந்தச் சிகிச்சை நிலையத்திற்கு நேரடியாகச் சமுகமளித்து சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியில் அவயவங்களை இழந்தவர் களும், பல்வேறு பாதிப்புக்களுக்கு ஆளாகிய வர்களும் உள்ளதால் இந்தச் சிகிச்சை நிலையம் அவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதில் பொது மக்கள் மட்டுமன்றி படைவீரர்களும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-405)



கடந்த 8 ஆம் திகதி முதல் டிப்போவாக மாற்றப்பட்ட கிளிநொச்சி பஸ் நிலையத்தின் படங்கள் இவை.

தேசமடைந்து காணப்படும் பஸ்நிலையக் கட்டடமொன்றை முதலாவது படத்திலும், மூடிக்கிடக்கும் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பெட்டிக்கடைகளை இரண்டாவது படத்திலும், டிப்போவாக மாறியுள்ள பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பேருந்துகளை மூன்றாவது படத்திலும், கனகபுரம் சாலையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தனியார் பஸ்வண்டிகளை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனரலுக்கு எதிராக சாட்சியமளித்த ஐ.தே.க. எம்.பிக்கள் அரசுடன் இணைந்து சுகபோகம்

## விஜித ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 14

சரத் பொன்சேகா எம்.பிக்கு எதிராக சாட்சியமளித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட லக்ஸ்மன் செனிவிரத்ன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் அரசுடன் இணைந்து சுகபோகம் அனுபவிக்கின்றனர் என ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. விஜித ஹேரத் நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டினார்.

ஜனநாயகத் தேசிய முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் மாலை கொழும்பு ஹோயிஸ் ஹோட்டலில் நடைபெற்றது. அவர் அங்கு தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

லக்ஷ்மன் செனிவிரத்ன எம்.பி. அரசமைப்புத் திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்களித்து விட்டு ஹெலிக்கொப்டரில் சவாரி செய்கிறார். பொன்சேகாவுக்கு எதிராக சாட்சியமளித்த மற்றொருவரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு பரிசாக அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகாவின் வழக்கு விசாரணை செய்யப்பட்ட முதலாவது இராணுவ நீதிமன்றத் தீர்ப்பில் அவரது பட்டங்கள், விருதுகள் பறிக்கப்பட்டன. இரண்டாவது இராணுவ நீதிமன்றம் நாளை முதல் 17ஆம் திகதிவரை தொடர்ந்து கூடுகின்றது. இந்தப் பொய்யான இராணுவ நீதிமன்றங்களை எதிர்த்து மக்கள்அணிதிரளவேண்டும். அரசமைப்புத் திருத்தம் கடந்த 8 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக வாக்களித்த எதிரணி எம்.பிக்கள் பலருக்கு நான்கு முதல் ஐந்து கோடி வரை வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருத்தம் நிறைவேற்றப்பட்டதால் ஜனாதிபதி ஏகாதிபத்திய வாதியானார். மக்கள் பாற்சோறு உண்டுவெடிகளைக் கொளுத்தி அதனைக் கொண்டாடினர். அதற்கு பிரதி உபகாரமாக மறுதினமும் பாணின் விலையை மூன்று ரூபாவால் உயர்த்தி மக்களுக்கு அரசு விருது வழங்கியது.

- இப்படி அவர் சொன்னார். (சி)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தர்மலிங்கம் கமலாம்பிகை**

திதி: பூர்வபக்க ஸப்தமி
(14.09.2010)

மலர்வு
12★05★1939

உதிர்வு
18★09★2007

எமது அன்புத் தெய்வமே! ஆண்டுகள் மூன்று
உருண்டோடி விட்டாலும்
எமது இதயத்தின் வேதனை ஆறிடுமோ?
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

''அம்பிகை வாசா'',
சூராவத்தை, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்து

14
.
09
.
2010



## ஏகாம்பரம் கருணாகரன்

இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை மாலுசந்தி, அல்வாயைச் சேர்ந்த ஏகாம்பரம் கருணாகரன் தனது 60ஆவது பிறந்தநாளை மகிழ்வுடன் கொண்டாடுகின்றார். இவரைப் பல்லாண்டு காலம் நலமுடனும் மகிழ்வுடனும் வாழ்கவென வாழ்த்துபவர்கள்:

மனைவி, பிள்ளைகள்,
பேரமக்கள், மருமக்கள்.

மாலுசந்தி,
அல்வாய். (103295)


## மணமகள் தேவை

சொந்தமாகத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதி, மதம் எதுவும் பார்க்கப் படமாட்டாது. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
தொடர்புக்கு: 0214915777 (103307)

## விற்பனைக்கு

தனிப்பட்ட பாவனையிலிருக்கும் நல்ல நிலையிலுள்ள 49CC மோட்டார் வாகனம் மற்றும் பிரத்தியேக வகுப்பிற்குப் பயன்படுத்தக் கூடிய இருக்கை வாங்குகள் என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0770280017. (103304)

## மணமகள்தேவை

பிரான்ஸ் நாட்டில் தொழில் புரியும் யாழ். இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய தமது மகனுக்குத் தகுந்த மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.
நட்சத்திரம்-பூசம் 4ஆம் பாதம், பாவம்-10
தொடர்புகளுக்கு:- விளம்பர இல.4071
மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## சங்கீத் களஞ்சியம்

கால்நடை வளர்ப்பிற்கான மாஸ், மருந்து மற்றும் கோழிக்குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இன்று (14.09.2010) கோழிக்குஞ்சு வழங்கப்படும்.
பொன்னாலை வீதி,
மானிப்பாய். (103293)
உரிமையாளர்.
தொ.பே.: 0778448659.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



இராமலிங்கம் சுப்பிரமணியம் நடராசா
(Senior Research Assistant RDA)

மலர்வு:
17.10.1954

உதிர்வு:
15.08.2010

அன்பு மழை பொழிந்து - எங்கள்
அகங்களில் நிறைந்துள்ளவரே!
அங்கத்தில் நோய் வந்து
அயர்ந்த போதிலும்
அலுவலகப் பணி தொடர்பாய்
அயராது உங்கள் வாய் பேசும்
கடமையை கனதியாய் மதித்தீர்
கணவன் என்ற கடமையையும்
கனிவான தந்தை என்ற பாத்திரத்தையும்
பார்போற்றச் செய்தீர்
கீதாசாரமே வாழ்வின் சாரம் என்பதை உணர்ந்து
உங்கள் சாந்திக்காய்
நல்லூர்க் கந்தனை வேண்டுகின்றோம்

இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
201, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரத்தில் நடந்த தடகளப் போட்டிகளில் வெற்றிகளைப்பெற்ற யாழ். மாவட்ட வீரர்கள்

வலி.வடக்கு,செப்.14

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே அனுராத புரம் நகரசபை மைதானத்தில் நடத்திய தடகளப் போட்டிகளில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட வீரர்கள், வீராங்கனைகளின் விவரம் வருமாறு:

* 16 வயதுப் பிரிவில் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம் ஜெயந்தன் உயரம் பாய்தலில் முதலிடம்.
* 18 வயதுப் பிரிவில் யாழ்ப் பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கிறிஸ்ரி ரஞ்சன் மனோ எல்விஸ் 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடம்.

20 வயதுப் பிரிவு

* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யைச் சேர்ந்த இரட்னம் எட்வேட் எடின் 100 மீற்றர் முதலாம் இடம்- 200 மீற்றர் மூன்றாம் இடம்.
* பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரியைச் சேர்ந்த வடிவேஸ்வரன் ஹரிகரன் தட்டெறிதல் முதலாம் இடம்.
* யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீபன் எடிக் பிரதாப் 400 மீற்றர் தடை தாண்டல் முத லாம் இடம்.
* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யைச் சேர்ந்த பூவிலிங்கம் பாலசங்கர் உயரம் பாய்தலில் நான்காம் இடம்.

23 வயது திறந்த போட்டி

* யாழ்ப்பாணப் பிரிவைச் சேர்ந்த செல்வி கஜித்தா விமலானந் உயரம் பாய்தல் முதலாம் இடம்.
* தெல்லிப்பழைப் பிரிவைச் சேர்ந்த மகாராசா பார்த்தீபன் தட்டெறிதலில் நான்காம் இடம்.

இந்தப் போட்டிகளில் யாழ். மாவட் டத்தைச் சேர்ந்த 18 வீரர்கள், வீராங்க னைகள் கலந்துகொண்டமை குறிப்பி டத் தக்கது. (த-86)

## அரையிறுதியாட்டத்தில் பற்றிக்ஸ், பெனடிக்ற்

யாழ்ப்பாணம்,செப்.14

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப் பிரி வினர்களுக்கான தரம் III க்கான கிரிக்கெட் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென்.பெனடிக்ற் கல்லூரி அணி மோதவுள்ளது.

இந்த ஆட்டம் நாளை மறுதினம் வியாழக் கிழமை கொழும்பு புகையிரதத் திணைக்கள விளையாட்டு மைதானத்தில்இடம்பெறவுள்ளது.

இப் போட்டியில் பங்கு கொள்வதற்காக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி நாளை புதன்கிழமை கொழும்பு புறப்படுகின்றது. (த-23)

## பெண்களுக்கான 200 மீற்றரில் லக்காசினியின் சாதனை பதிவாகியது

வலி.வடக்கு,செப்.14

வடமாகாண விளையாட்டுத் திணைக் களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் வடமா காணத்திற்கான 200 மீற்றர் பெண்களுக் கான சாதனையாக வவுனியா மாவட்டத் தைச் சேர்ந்த கே.லக்காசினியின் சாதனை பதிவு செய்யப்படவுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளின் பெறு பேறுகளின் அடிப்படையில் புதிய சாத னைப் பட்டியல் வடமாகாண விளை யாட்டுத் திணைக்களத்தினால் தயாரிக்கப் படுகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளில் 200 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப் போட் டியில் 2007 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.நிரஞ்சலா 30:3 செக்கனிலும், 2009 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மோசாந்தி 29:4 செக்கனிலும், 2010 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்காசினி 28:6 செக்கனிலும் ஓடியுள்ளார்கள்.

இதன் அடிப்படையில் வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாத னையாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.லக்காசினியின் சாதனை பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

## பாடும் மீன் – உதயதாரகை அணிகளின் ஆட்டம் சமநிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம்,செப்.14

பாடும் மீன் 'பி' அணிக்கும் கற்கோ வளம் உதயதாரகை அணிக்கும் இடை யிலான ஆட்டம் சமநிலையில் முடிவுற் றது.

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் யாழ். மாவட்ட கழகங்களுக்கு இடையிலான லீக் முறை யிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. ஆட்டம் ஒன்றில் குருநகர் பாடும் மீன் 'பி' விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை விளையாட் டுக்கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணியும் தலா ஒவ் வொரு கோல்களைப் போட்டமையால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. (த-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# யூனியன் வி.கவை 92 ஓட்டங்களால் வென்றது திருநெல்வேலி வி.க அணி

வலி.வடக்கு,செப்.14

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத் திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் 92 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத் தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகமும் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல் வேலி கிரிக்கெட் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது.

ரஜிந்தன் 10 நான்குகள், 3 ஆறுகளுடன் 79 ஓட்டங்களையும், லவன், சுரேந்திரன் தலா 25 ஓட்டங்களையும் பிரதீஸ் 21 ஓட்டங்களையும் சுபாஸ் 19 ஓட்டங்க ளையும் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட் டங்களும் பெறப்பட்டன.

யூனியன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வைகுந்தன் 6 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக் களையும் கபில் 6 ஓவர்கள் பந்து வீசி 59 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஹரி, ஜான்சன் தலா 5 ஓவர்கள் பந்து வீசி முறையே 21,30 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒருவிக்கெட்டையும்கைப்பற்றினார்கள்.

206 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக்கழகம் 18.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது.

ஜான்சன் 2 ஆறு, ஒரு நான்குடன் 19 ஓட்டங்களையும் தயாளன் 2 நான்குடன் 16 ஓட்டங்களையும் கபில், ஹரி தலா 14 ஓட்டங்களையும் வைகுந்தன் 12 ஓட்டங் களைப் பெற்றதுடன் உதிரிகளாக 16 ஓட்டங்களும் பெறப்பட்டன.

திருநெல்வேலிகிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கோபி 4 ஓவர்கசள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் சஜீவன் 2 பந்துகளை வீசி ஒரு ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும், சுரேந்திரன், பிரதாப், சைலேஸ்வரன், சுபாஸ் முறையே 09,18,23,28 ஓட்டங் களைக் கொடுத்துத் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (த-86)

## ஆனந்த ரட்ணம் வெற்றிக் கிண்ணம்; ஹொக்கிப் போட்டி முடிவுகள் சில

வலி.வடக்கு,செப்.14

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி ரி.ஆனந்த ரட்ணம் ஞாபகார்த்த வெற் றிக் கிண்ணத்திற்காக நடத்திய பெண் களுக்கான ஹொக்கிப் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:

மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்திற் கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரிக்கும் இடையே நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மல்லா கம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 02:00 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-86)

## மல்யுத்தம், ஜிம்னாஸ்ரிக் போட்டிகள் 18 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள்

வலி.வடக்கு,செப்.14

இலங்கை கல்வி அமைச்சின் ஏற் பாட்டில் அகில இலங்கை பாடசாலை அணி களுக்கு இடையே நடைபெறும் தேசிய மட்டத்திலான ஆண்களுக்கான மல்யுத்தப் போட்டி மற்றும் ஆண்கள், பெண்களுக் கான 'ஜிம்னாஸ்ரிக்' போட்டிகள் எதிர் வரும் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான மல்யுத்தப் போட்டி கள் நீர்கொழும்பு மேரிஸ்ரெலா வித்தி யாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் சுமார் 220 வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

ஆண்கள்,பெண்களுக்கான 'ஜிம் னாஸ்ரிக்' போட்டிகள் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற வுள்ளன.

இப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் 250 வீரர்களும், பெண்கள் பிரிவில் 250 வீராங் கனைகளுமாக சுமார் 500இற்கும் மேற் பட்டவர்கள் கலந்துகொள்வார்கள் என வும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இரு போட்டிகளிலும் வடமாகா ணப் பாடசாலை அணிகள் எவையும் கலந்துகொள்ளவில்லையென்பதும் குறிப் பிடத்தக்கதாகும். (த-86)




யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தலைமையகம் யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து பொதுமக்கள், படையினர்களுக்கு இடையே நல்லுறவை வளர்க்கும் முகமாக நடத்திய 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் சம்பியனாகிய இலங்கை விமானப் படையின் பலாலி அணியையும், இரண்டாம் இடத்தைப்பெற்ற யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணியையும்,மூன்றாம் இடத்தைப்பெற்ற இலங்கை இராணுவப் படையணியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் ஒருங்கிணைப்புக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 14

கோப்பாய்ப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறமாட்டாது என கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் தெரிவித்துள்ளார். (த-72)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 16.01.1924

உதிர்வு: 19.08.2007

திதி: ஸப்தமி

**தம்பு சுவாமிநாதன் (T.S)**

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டுப் பிரியா

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.*

-குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி


### அமரர் நீக்லஸ் பிரான்சிஸ்

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு.பி.அன்ரனி அவர்களின் தந்தையார் 11.09.2010 அன்று காலமாகிவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/சென்மேரீஸ் வித்தியாலயம் (O.L.R).

## மரண அறிவித்தல்கள்

மாணிக்கம் சம்புலிங்கம்



செல்வன் கமலராசன் சந்தோஷ்



சங்கிலியன் வீதி,நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சம்புலிங்கம் மற்றும் அன்னாரின் பேரனான கமலராசன் சந்தோஷ் ஆகியோர் (12.09.2010) ஞாயிற்றுக்கிழமையன்று அகால மரணமடைந்தார்கள்.

அவர்களின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறவுள்ளன. அதுபற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
0776256304

## திருமதி சற்குணதேவி பரமேஸ்வரன்



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணதேவி பரமேஸ்வரன் நேற்று (13.09.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சண்முகநாதன் தம்பதியரின் அன்பு மகளும் பரமேஸ்வரனின் (ஓய்வுபெற்ற தபாலதிபர், யாழ்ப்பாணம்) பாசமிகு மனைவியும், சங்கீதா, பாலமுருகன், பிருந்தாயினி ஆகியோரின் அன்புத் தாயும் செந்தூரனின் (ஆசிரியர், யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி) பாசமிகு மாமியாரும் நிரூஜா, வரலக்ஷன் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக அல்லாரை கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*
தொ.பே:-0773904399 (103302)

தகவல்:
குடும்பத்தினர்,
(மருமகன்-வி.செந்தூரன்).

### 18ஆவது அரசமைப்புத் திருத்தம்

# இலத்திரனியல் ஊடகங்களும் சுதந்திரமாக இயங்க வழி வகுத்துள்ளது என்கிறார் டி.யூ.

கொழும்பு, செப். 14

18ஆவது அரசமைப்புத் திருத்தம் தேர்தல்களின்போது அனைத்து இலத்திரனியல் ஊடகங்களும் சுதந்திரமாக இயங்க வழிவகுத்துள்ளது. இந்த விடயம் குறித்து எதிர்க்கட்சிகள் பேசுவது இல்லை என சிறைச்சாலைகள் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்தார்.

ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஐந்தாவது தேசிய பேராளர் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு ஜானகி ஹோட்டலில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பேசும்போத அமைச்சர் மேற்கண்டாவறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தேர்தல்களின்போது முன்னர் தேசிய தொலைக்காட்சி சேவை மற்றும் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு மாத்திரம் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்மூலம் அனைத்து ஊடகங்களும் தேர்தல்களின்போது சுதந்திரமாகச் செயற்பட வழிசெய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் பக்கச்சார்பு இன்றி சுதந்திரமாகச் செயற் படவேண்டும். நான் நீண்ட காலம் தேசிய தொலைக்காட்சிச் சேவையின் தலைவராக கடமையாற்றியுள்ளேன். எனவே நானும் ஓர் ஊடகவியலாளன்தான். அது மட்டுமன்றி எமது கட்சிப் பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றேன்.

ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால் மட்டுமே தங்களது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் 5ஆவது பேராளர் மாநாட்டில் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலுமிருந்து பெருந்தொகையான ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர். (சி)

## பட்டப்பகலில் வீடொன்றில் திருடமுயன்ற சிறுவர்கள் மக்களிடம் பிடிபட்டனர்

அரியாலை, வில்வர்தெருப் பகுதியில் உள்ள வீடொன்றில் திருட முயன்ற இருவர் நேற்றுமுன்தினம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

குறித்த வீட்டின் ஓடுகளைப் பிரித்து உள்சென்று நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் வீட்டுப் பொருள்களைக் களவாடமுற்பட்டபோதே அயலவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருட்டில் ஈடுபட்ட 10 வயது, 17 வயதுள்ள இருவரையும் பொதுமக்கள் பிடித்துக்கட்டி வைத்து சிவில் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (த-135)

## மின்தடை

கொழும்புத்துறை, செப். 14

மின் பராமரிப்புக் காரணமாக குடாநாட்டின் சில இடங்களில் நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5மணிவரை மின்தடை ஏற்படுமென மின்சாரசபை யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் நாளையும் நாளை மறுதினமும் மின்தடை இருக்கும்.

அதேவேளை- எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதிகளில் மின்தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-135)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2155 திகதி 11-09-2010

ஆங்கில எழுத்திற்கும் U

வெற்றி எண்கள் 44 45 46 69

போனஸ் இல: 08

ஜக்பொட் பரிசு ரூ. 13,043,225/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 181076 | 20/- | 3,621,520/- |
| 2 இல | 13068 | 100/- | 1,306,800/- |
| 3 இல | 270 | 1,000/- | 270,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7110 | 40/- | 284,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 479 | 1,000/- | 479,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 05 | 10,000/- | 50,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,043,225/- | - |
| 1 இல + போனஸ் இல | 8665 | 100/- | 866,500/- |
| 2 இல + போனஸ் இல | 389 | 500/- | 194,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | *326 | 200/- | 65,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,561,920/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 211419 | | 9,161,920/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 302308588-5-08 |
| திருகோணமலை | 302308677-5-45 |
| களுத்துறை | 302309724-9-36 |
| பதுளை | 302309007-6-39 |
| குருணாகல் | 302305211-1-40 |
| கொழும்பு | 302311001-3-39 |
| யாழ்ப்பாணம் | 302318049-4-04 |
| கேகாலை | 302311012-5-20 |
| மட்டக்களப்பு | 302311491-7-49 |
| மொணராகலை | 302304836-9-37 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 13,537,750/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி வைத்திலிங்கம்

(பிரபல வர்த்தகர், சுன்னாகம்)



பங்களா ஒழுங்கை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வைத்திலிங்கம் அவர்கள் நேற்று (13.09.2010) திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நன்னிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி, சிவகுரு, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவமலர் (லண்டன்), ஞானமலர், அருந்ததி, சந்திரமலர், சிவகுமாரி, பாலகௌரி(கனடா), பாலசரஸ்வதி, முருகதாசன், கண்ணதாசன் (கண்ணதாசன் அழகு மாடம், சந்தை தெற்கு வீதி, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் சின்னத்தம்பி, தங்கராஜா, தேவராஜா (ஓய்வுபெற்றஆசிரியர்-மானிப்பாய் இந்துக் கல்லூரி) காலஞ்சென்ற ஸ்ரீவரதலிங்கம் மற்றும் அரசரட்ணம்(கனடா), சந்திரகுமார் (சுன்னாகம் ப.நோ.கூ.ச), தயானி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பங்களா லேன்,*
*மல்லாகம்.*
தொ.பே.இல: 0213219443 (103294)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண விரைவில் இலங்கை வருகிறார் பிரணாப்

## முன்னாள் மத்திய அமைச்சர் இளங்கோவன் தெரிவிப்பு

இராமேஸ்வரம், செப். 14

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் இலங்கை செல்லவுள்ளார் - என்று முன்னாள் மத்திய அமைச்சரும், தமிழகக் காங்கிரஸின் முன்னாள் தலைவருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தெரிவித்தார்.

மேலும், தனக்கு எதிராகச் செயற்பட நினைத்தால் காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியிலிருந்து தங்கபாலுதான் நீக்கப்படுவார் - என்றும் அவர் தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் கூறியவை வருமாறு -

தங்கபாலுவின் செயற்பாடுகள்தான் திருப்திகரமாக இல்லை. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு அவர் பணியாற்றவில்லை. தமிழகத்தில்வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி தொடருமானால் மொத்தமுள்ள 234 தொகுதி களில், காங்கிரஸ் கட்சிக்கு 110 தொகுதி களை ஒதுக்க வேண்டும்.



1980 இல் காங்கிரஸ் கட்சித் தலைவியாக இந்திரா காந்தி இருந்தபோது, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியுடன் காங்கிரஸ் கட்சி 110 தொகுதிகளில் போட்டியிட்டது. அதேபோல், வரும் சட்டப்பேரவைத் தேர்தலிலும் காங்கிரஸ் கட்சிக்கு தி.மு.க. 110 தொகுதிகளை ஒதுக்க வேண்டும். இதில் ஓரிரு இடங்களை வேண்டுமானால் தி.மு.க. குறைத்துக் கொள்ளலாம்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தும் சம்பவம் குறித்து இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் இலங்கை அரசிடம் பேச்சு நடத்தியுள்ளார். இதற்கு நிரந்தரத் தீர்வுகாண மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் இலங்கை செல்லவுள்ளார். - இப்படி அவர் தெரிவித்தார்.

## தமிழக மீனவர்கள் விரட்டியடிப்பு

மண்டபம், செப். 14

கச்சதீவுக் கடல் அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் விரட்டியடித்துள்ளனர் - என்று தமிழக நாளேடு தெரிவித்துள்ளது.

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் 500 இற்கும் அதிகமான விசைப் படகுகள் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றன.

கச்சதீவுப் பகுதியில் நடுக்கடலில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினர், இப்பகுதியில் மீன்பிடிக்கக்கூடாது என எச்சரித்து விரட்டியுள்ளனர்.

இம்முறை அதிக எண்ணிக்கையில் இலங்கைக் கடற்படையினர், எல்லையில் குவிந்துள்ளனர் என கரைதிரும்பிய மீனவர்கள் கூறினர் - என்றும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 16 இல் அமெரிக்கா செல்கிறார் நிருபமா



புதுடில்லி, செப். 14

இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் நாளை மறுதினம் 16 ஆம் திகதி அமெரிக்கா செல்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் இந்திய வருகையையொட்டி அவரது நிகழ்ச்சிநிரலை இறுதி செய்வது குறித்து அமெரிக்க அதிகாரிகளுடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி ஒபாமா வரும் நவம்பர் 9 முதல் 11 ஆம் திகதிவரை இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அவரது வருகையின்போது இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவது குறித்து முடிவு செய்வதற்காக நிருபமா அமெரிக்கா செல்கிறார்.

விஸா கட்டண உயர்வு, வெளிப்பணி ஒப்படைப்புத் தடை விவகாரம், உயர் தொழில்நுட்ப ஏற்றுமதி உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் அமெரிக்க அதிகாரிகளுடன் நிருபமா பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே வரும் 20 ஆம் திகதி ஐ.நா. பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் செல்லும் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுடன் நிருபமாவும் அக்கூட்டத்தில் பங்கேற்பார் எனத் தெரிகிறது.

# கடல்வழியாக இலங்கைக்குக் கடத்தல் தமிழ்நாட்டில் மீண்டும் ஆரம்பம்

இராமநாதபுரம், செப். 14

கடல் வழியாக இலங்கைக்குப் பொருள்களைக் கடத்தும் கலாசாரம் மீண்டும் கடலோரப் பகுதிகளில் தலைதூக்கியுள்ளது.

இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பு இருந்தபோது, இந்தியக் கடலோரப் பகுதிகளிலிருந்து ஏராளமான பொருள்கள் கடத்தப்படுவது தொடர்ந்து வந்தது. ஜெலட்டின் குச்சிகள், வெடிமருந்துகள், பற்றரிகள், அலுமினியக் கட்டிகள் போன்றவை அடிக்கடி பிடிபடும் பொருள்களாக இருந்தன. இப்பொருள்கள் புலிகளின் பயன்பாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களாக இருந்தன. இதற்கிடையில் அவ்வப்போது போதைப்பொருள்களும் அதிகளவில் பிடிபட்டன.

இன்று புலிகள் அமைப்பை ஒட்டு மொத்தமாக அழித்துவிட்டது என இலங்கை அரசு தெரிவித்துவிட்டது.

இந்நிலையில் மீண்டும் கடலோரப் பகுதிகளில் கடத்தல் சம்பவங்கள் குறைந்தபாடில்லை. குறிப்பாக மின் உபகரணப் பொருள்கள் அதிகளவில் கடத்தப்படுகின்றன. அரசின் இலவச ரி.விகளுக்கு இதில் முக்கிய பங்கு உண்டு. இதுதவிர போதைப் பொருள்களும், ரேஷன் அரிசிகளும் அதிளவில் கடத்தப்படுகின்றன. இவை பொதுவான பயன்பாட்டிற்காக இலங்கைக்குக் கடத்தப்படுகின்றன எனத் தெரிகிறது.

முன்பு கடத்தப்பட்ட இதுபோன்ற பொருள்களும் இலங்கையின் பொதுவான பயன்பாட்டிற்கே கடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் புலிகள் மீது பழி போய்ச்சேர்ந்தது. புலிகள் நடமாட்டம் இருந்தபோது, இந்தியக் கடலோரப் பகுதிகளில் போதிய கண்காணிப்பு இருந்து வந்தது. அதிலும் சவால் விட்டு கடத்தல்காரர்கள் கடத்தலை அரங்கேற்றி வந்தனர். விடுதலைப் புலிகள் அழிவுக்குப் பின்னர் இந்தியக் கடலோரக் கண்காணிப்புக் குறைந்துள்ளது.

இந்த வாய்ப்பைக் கடத்தல்காரர்களும் நழுவவிடத் தயாராக இல்லை என்பதே, தற்போது அரங்கேறி வரும் கடத்தல் காரியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

## இந்தியச் செய்திகள்

# விஜயகாந்த் இலட்சியத்தை வரவேற்கிறோம்; தி.மு.க. ஆட்சி நீடித்தால் தமிழருக்கு ஆபத்து!

## தமிழகப் பா.ஜ.க. தெரிவிப்பு



சென்னை, செப். 14

தி.மு.கவை வீழ்த்துவதுதான் தமது இலட்சியம் என்று தே.மு.தி.கவின் தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார். இதை பா.ஜ.க. வரவேற்கிறது. தி.மு.க. ஆட்சி நீடித்தால் தமிழர்களுக்கும், தமிழ்ச் சமுதாயத்துக்கும் ஆபத்தாகி விடும் - என்று பா.ஜகவின் தமிழ் மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறியவை வருமாறு -

தி.மு.க. ஆட்சி நீடித்தால் தமிழர்களுக்கும், தமிழ்ச் சமுதாயத்துக்கும் ஆபத்தாக அமைந்து விடும். தி.மு.கவை வீழ்த்த, எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைய வேண்டும் என்று பா.ஜ.க. வலியுறுத்தி வந்தது. தற்போது தி.மு.கவை வீழ்த்துவதுதான் தமது இலட்சியம் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார். இதை பா.ஜ.க. வரவேற்கிறது.

இலவசப் பொருள்களைக் கொடுத்தும், போதைக்கு அடிமை ஆக்கியும் மக்களிடம் அரசு கொள்ளையடித்து வருகின்றது. வரும் 20 ஆம் திகதி கருணாநிதி குமரி மாவட்டம் வரும்போது, மத்திய அரசின் துணை விளையாட்டு மையம், ஏற்கனவே அடிக்கல் நடப்பட்ட இடத்தில் செயற்படுத்தப்படும் என்ற அறிவிப்பை வெளியிட வேண்டும். இந்த இடத்தை மாற்ற, கலெக்டர் வற்புறுத்தி வருகிறார். அப்படி ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டால், கலெக்டர் அறைக்குள்ளேயே பா.ஜ.க. போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்படும்.

கோவையிலும், திருச்சியிலும் அ.தி.மு.கவிற்கு கூடிய கூட்டத்தை கண்டு, தி.மு.க. சார்பில் போட்டி பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. நாகர்கோவிலில் கல்வி உதவித்தொகைக்காக பா.ஜ.க. சார்பில் நடந்த போராட்டத்தில் கலந்து கொண்ட கூட்டத்தைப் பார்த்து, தி.மு.க. முப்பெரும் விழா நடத்துகிறது.

தி.மு.க. ஆட்சியில் அதிகமாக மிரட்டல்களும், தாக்குதல்களும் நடக்கின்றன. அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். உதவி இன்ஸ்பெக்டர் ஒருவரை இரண்டு அமைச்சர்களின் கண்முன்னால் வெட்டிக் கொலை செய்த சம்பவமும் இந்த ஆட்சியில்தான் நடைபெற்றது.

காய்ச்சலால் தமிழ்நாடு ஸ்தம்பித்து போய் உள்ளது. தி.மு.க. ஆட்சி வெளியேறினால்தான் பன்றிக்காய்ச்சலும் வெளியேறும். - இப்படி அவர் தெரிவித்தார்.

# காஷ்மீரில் மீண்டும் ஊரடங்கு; அமைச்சர் வீடு மீதும் தாக்குதல்



ஸ்ரீநகர், செப். 14

வன்முறை மீண்டும் ஏற்பட்டுள்ளதால் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் ஸ்ரீநகர் உள்ளிட்ட 7 நகரங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது; அமைச்சரின் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் கடந்த ஜூன் மாதம் முதலே வன்முறை, கலவரங்கள் நடந்து வருகின்றன. படையினர் மீது பொதுமக்கள் என்ற போர்வையில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். வன்முறையை அடக்குவதற்காக அங்கு இராணுவத்தினர் பணியில் ஈடுபட்டுள்ளனர். படையினரும் ரோந்து சுற்றி வந்து கலவரத்தை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சில நாள்களாக வன்முறைச் சம்பவங்கள் ஏதும் நடைபெறாத தால் செப்டம்பர் 9 ஆம் திகதி ஊரடங்கு உத்தரவு வாபஸ் பெறப்பட்டிருந்தது. இந்த நிலையில் சனிக்கிழமை முதல் அங்கு மீண்டும் வன்முறைச் சம்பவங்கள் அரங் கேறத் தொடங்கியுள்ளன.

ஹுரியத் மாநாட்டுக் கட்சியின் பிரிவினைவாதத் தலைவர் மீர்வய்ஸ் உமர் பாரூக் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். பொது சொத்துகள், அரசு அலுவலக ஆவணங்களை எரித்த வழக்கில் மீர் வய்ஸ் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த ஒரு கும்பல் ஜம்மு-காஷ்மீர் மாநிலக் கல்வித்துறை அமைச்சர் பீர்ஜாதா முகமது சயீத் வீட்டின் மீது ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தியது.

வீட்டின் மீது அந்த கும்பல் கற்களை வீசி கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத் தியது. அவர் வீடு ஸ்ரீநகரிலிருந்து 55 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கோகர்நாக் பகுதியில் உள்ளது.

ரம்ழான் பண்டிகைக்காக அவர் தனது சொந்த ஊருக்குச் சென்றுள்ளதால் வன்முறைக் கும்பலின் தாக்குதலில் இருந்து அவர் தப்பினார். மீண்டும் வன்முறைச் சம் பவம் ஏதும் நடைபெறாமல் தடுக்கும் வகையில் ஸ்ரீநகர் உள்ளிட்ட 7 நகரங்களில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது.

அனந்த்நாக், பிஜ்பெகாரா, புல்வாமா, காகாபோரா, சோபூர், பாராமுல்லா ஆகிய நகரங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டு பொலிஸார் ரோந்து சுற்றி வருகின்றனர்.


## அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



பிறப்பு 28.01.1935 இறப்பு 16.08.2010

கடந்த 16.08.2010 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

அமரர்

**கதிரவேலு தியாகராஜா**

(இராசம் லோறி உரிமையாளர்)


அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

8/3, புகையிரத வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (103312) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்

நிகழும் விகிர்தி வருடம் ஆடி மாதம் 31 ஆம் நாள் திங்கட்கிழமை (16.08.2010) சிவபதமடைந்த எமது தந்தையார்

## அமரர் சு.வி. முருகேசு

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை காலை முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும். நாளை (15.09.2010) புதன்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 11 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு உற்றார், உறவினர், நண்பர்கள் எமது வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

171டீ பொன்சேகா வீதி,
கொழும்பு-05,
தொ.பே: 0114378676

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 07.07.1932 — மறைவு 15.08.2010

## திருமதி சிவஞானசுந்தரம் தங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா / அருணோதயாக் கல்லூரி)

கடந்த 15.08.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமெய்திய அமரர் சிவஞானசுந்தரம் தங்கம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(103309)

பாடசாலை ஒழுங்கை, தாவடி தெற்கு, கொக்குவில். — மகன்மார் ஆதித்தன், ஆரூரன், மகள், மருமகன்.

## சங்கானை விபத்தில் சிறுமி படுகாயம்

சங்கானை, செப். 14

சங்கானை கூடத்தம்மன் கோயிலடியில் நேற்று மாலை 6.30 மணிக்கு இடம் பெற்ற மினிபஸ் விபத்தில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அன்பழகன் லோஜினி (வயது 12) என்ற சிறுமி உடன் சங்கானை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டார்.

நல்ல தண்ணீர் கிணற்றில் தண்ணீர் எடுத் துக்கொண்டு வீதியால் சென்ற பிரஸ்தாப சிறுமியைபோட்டி போட்டுக் கொண்டு ஓடிய மினிபஸ் ஒன்றை ஒன்று முந்த முனைந்த போது இந்த விபத்து நிகழ்ந்தாக அந்த பஸ்ஸில் பயணித்தவர்கள் தெரிவித்தனர். (ஒ-ஐ-29)

## செம்பியன்பற்று பாடசாலை மீண்டும் இயங்குகிறது

பருத்தித்துறை, செப். 14

வடமராட்சி கிழக்கில் செம்பியன்பற்று அ.த.க பாடசாலை இன்று முதல் தனது சொந்தக் கட்டடத்தல் இயங்கவிருக்கிறது.

வடமராட்சி கிழக்கில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தை அடுத்து இப்பாடசாலை மூடப்பட்டது.

மீண்டும் அப்பகுதியில் மக்கள் மீளக் குடியமர்துள்ளதை அடுத்து கட்டடங்கள் சேதமடையாத காரணத்தால் உடனடியாக அப்பாடசாலை இயங்கவிருக்கிறது.

இப்பாடசாலையின் அதிபராக வீ. இந்திரலிங்கம் வடமராட்சிக்கல்வி வலயத்தால் நியமிக்கப்பட்டள்ளார். (ஒ-ஐ-190)

# மரண அறிவித்தல்

## தம்பையா கந்தசாமி



(முன்னாள் முகாமையாளர், சுப்பிரமணியா ஸ்ரோர்ஸ், நுவரெலியா)

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் விதானையார் வீதி, ஈச்சமோட்டை, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கந்தசாமி நேற்று (13.09.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா - வள்ளியம்மை தம்பதியரின் மரு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத் துரை, நாகம்மா, தங் கரத்தினம், தங்கமுத்து ஆகியோரின் சகோதரனும் யோகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை நாகரத்தினம், சின்னையா ராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமுதகுமாரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரகாந்தி மற்றும் கலைச்செல்வி (கனடா), தமிழ்ச்செல்வி (கனடா), சிவஞானச் செல்வன் (ஜேர்மனி),சிவயோகச்செல்வன் (பிரான்ஸ்), பங்கயச் செல்வி (கனடா), வசந்தகுமாரி (கனடா), மோகனச்செல்வன் (குமரன் ஸ்ரோர்ஸ், ஈச்ச மோட்டை), குகதாஸ் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந் தையும் சண்முகலிங்கம் (பிரான்ஸ்), சடாச்சரம் (கனடா), காலஞ்சென்ற சிவராசா மற்றும் நகுலேஸ்வரன் (கனடா), லவ நாதன் (கனடா), ஜெயந்தி (ஜேர்மனி), சசிரேகா (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகா வித்தி.), பவிந்தினி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனும் செந்துரு, அஜந்தன், கஜா னன், நாகதர்ஷா, சோபிகா, தர்ஷன், அஜித்குமார், விஜித்குமார், சருண்குமார், கிஷோக்குமாரி, தர்மின், கரிஷ்மா, கீர்த் திகா, கீர்த்தனன், பிரவீன், பிரவிகா,யானுயன், பிரகஷ்வினி, பிரசாஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் கமிஸ்,ஜெனுஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.09.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/6, விதானையார் வீதி, ஈச்சமோட்டை,சுண்டுக்குளி. (103310) தகவல்: மோகனச்செல்வன் (மகன் - குமரன்)

Barnabas இன் மலிவு விற்பனை

Life Time Free Service

5 வருட உத்தரவாதம்

உடன் விரையுங்கள் உங்கள் தெரிவுக்கு...

★ 29" Sony Flat TV, 21 " Flat TV, 14" TV மிக மிகக் குறைந்த விலையில்.
★ தற்போது 21 " TV , 12,490 ரூபாய் மட்டுமே.....
★ எங்கும் பெறமுடியாத உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய அதி வேகமான சேவையும் எம்மிடம் மட்டுமே உடனே அழையுங்கள் 0777448668
★ மிகமிக இலகுவான கொள்வனவு முறைமைகள் தற்போது நடைமுறையில்
★ எந்த மொத்த வியாபாரிக்கும் வியக்கவைக்கும் விசேட சலுகைகள்

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியில் தொடங்கி குருதியில் முடிந்த ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டம்

## ஜேர்மன் மாநாட்டில் அரியநேத்திரன் எம்.பி. உரை



ஜேர்மன், செப்.14

கடந்த 61 வருடங்களாக அறவழியாகவும் ஆயுத ரீதியாகவும் நடைபெற்ற ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டங்கள் குருதியில் தொடங்கி குருதி யிலேயே முடிந்துள்ளன என்பதுதான் உண்மை என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஜேர் மனியில் நடைபெறும் அகம் புலம் தமிழர் வாழ்வியல் சிறப்பு மாநாட்டில் உரை யாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

அறவழியில் நடத்தப்பட்ட போராட்டம் எப்படி குருதியில் முடியும் என நீங்கள் கேட்கலாம். தமிழ்த் தலைவர்களால் 1956இல் கொழும்பு, காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகத்தில் சிங்கள குண்டர்களால் தாக்கப்பட்டு தமிழ்த் தலைவர்கள் குருதி சிந்தினார்கள். இது தான் முதல் குருதி.

1958இல் பொலிஸ்துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் இரு மலையகத் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். இதுதான் தமிழர்கள் மீது திட்டமிட்டு நடத்தப்பட்ட முதல் கொலை.

இவ்வாறு தொடர்ந்த தமிழர்கள் மீதான இனப்படுகொலைகள் இறுதியில் சர்வதேச நாடுகளின் உதவியுடன் கடந்த வருடம் (2009) மே 19ஆம் திகதி ஒப்பேற்றப்பட்டது. விடுதலைப்புலிகள் முற்றாக அழிக்கப்பட்டதாக இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு செய்திருந்தது.

இந்த அறிவிப்புக்கு பின்னர் தமிழ் மக்களிடையே இலங்கை அரசு பல குழப்பங்களைத் திட்டமிட்டு செய்து வருகிறது.

### நிலத்துக்காகப் போராடியவர்கள் இன்றுஆறு தகரங்களுக்காக கையேந்தி நிற்கும் நிலை

விடுதலைக்காகப் புறப்பட்ட எமது இனம் பல கட்டங்களில் 2 இலட்சம் மக்களை இழந்தவர்களாய் - 3 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களாய் - 10 இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அனைத்துலகிலும் இடம் பெயர்ந்தவர்களாய் - 89 ஆயிரம் இளம் பெண்கள் கணவனை இழந்தவர்களாய் - 25 ஆயிரம் பேர் அங்கவீனர்களாய் - 12 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் புனர்வாழ்வு என்ற பெயரில் முகவரி தெரியாத முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டவர்களாய் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள்.

தாயைத் தேடும் பிள்ளையின் அழுகுரலும், பிள்ளையைத் தேடும் தாயின் ஒப்பாரியும், உறவுகளைத் தேடும் சொந்தங்களின் விம்மல்களும் அழுகுரல்களும் தான் இன்று ஈழத்தமிழர்களின் தேசிய கீதங்கள்.

எமது இல்லங்களை மட்டும் இழக்கவில்லை. துயிலும் இல்லங்களையும் நாம் இழந்திருக்கிறோம். உரிமைகள், உடைமைகள் ஆகியவற்றை இழந்து பாரம்பரியமாக வாழ்ந்த மண்ணையும் எமது இனம் இழந்து நிற்கிறது.

நிலத்துக்காகப் போராடிய இனம் இன்று 6 தகரங்களுக்காக கையேந்தி நிற்கிறது. சுதந்திரத்திற்காய் போராடிய இனம் இன்று சோற்றுக்காய் இலங்கை அரசிடம் கையேந்தி நிற்கிறது.

இந்த யதார்த்தங்களை உணர்ந்து மேற்குலகில் வாழும் மக்கள் வீழ்ந்து கிடக்கும் எமது இனத்துக்கு கைகொடுத்து தூக்கிவிட வேண்டியதே இன்று முதலில் செய்யவேண்டிய கடமையாகும்.

இவ்வாறு பா.அரியநேத்திரன் தெரிவித்தார். (ஒ-சி)

# அரசமைப்புத் திருத்தம் குறித்து அமெ. கருத்து: இலங்கை வெளிவிவகார அமைச்சு கவலை

கொழும்பு, செப். 14

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக அமெரிக்கா வெளியிட்ட கருத்து வருத்தமளிக்கிறது என இலங்கை வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

'இலங்கையின் 18ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கான செப்ரெம்பர் பாதை' என்னும் தலைப்பில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட தகவல் வெளிவிவகார அமைச்சின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அரசமைப்புத் திருத்தத்திற்கான வழிவகையானது முழுமையாகவே ஓர் உள்நாட்டு விடயம். அரசமைப்பின் அடிப்படை சட்டங்களினது முழுமையான சரத்துக்க ளுக்கு உட்பட்டே நடைபெற்றது. உயர் நீதிமன்றத்தின் ஏகோபித்த தீர்மானத்தின் பிரகாரமும், பெரும்பான்மையாக 161 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்குச் சார்பாக வாக்களித்ததன் பிரகாரமே இத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் குறிப்பிடத்தக்க ஏற்புடைத் தன்மை என்னவென்றால் அரசமைப்புத் திருத்தமானது மிகக் கவனமாகப் பரிசீலனையின் பின்னரே சமர்ப்பிக்கப்பட்டதென்பதாகும். 17ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்கீழ் பல முக்கிய நிறுவனங்களின் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்கு தடை ஏற்பட்டது. இந்நிலையிலேயே 18ஆவது அரசமைப்புத் திருத்தம் உருவாக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவுடனான நீண்டகால உறவை அரசும், இலங்கை மக்களும் பெருமதிப்பளிக்கின்றனர். அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் கருத்தானது 18ஆவது அரசமைப்பு திருத்தத்தின் பின்னணியில் உள்ள உண்மையான சூழ்நிலைகளையிட்டு நீதிப்படுத்த முடியாதுள்ளதையிட்டு வெளிவிவகார அமைச்சு கவலை கொள்கின்றது - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீதி ஒழுங்கைப் பேண சைகை குறியீடுப் பலகைகள்

யாழ்ப்பாணம், செப். 14

வீதி ஒழுங்கைப் பேணும் முகமாக அமைக்கப்பட்டுள்ள குறியீட்டுப் பலகைகளை அவதானித்து அதன்படி போக்குவரத்துக்களில் ஈடுபடுமாறு சுன்னாகம் வலி.தெற்குப் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் நகர மையப் பகுதியில் பொதுமக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள அதே சமயம் வாகன நெரிசலும் ஏற்படுவதால் விபத்துக்களைத் தடுக்கும் வகையில் சைகைக் குறியீடுகள் ஆங்காங்கே நிறுவப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் இவற்றை அனுசரித்து நடக்குமாறும் தவறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதேச சபைச் செயலாளர் எச்சரித்துள்ளார். (ஒ-16)

# வடக்கிற்கு இதுவரை 2 லட்சம் சுற்றுலாப் பயணிகள்


கொழும்பு,செப். 14

யாழ்- கண்டி ஏ-9 பிரதான வீதி திறந்து விடப்பட்ட பின்னர் இதுவரை தென்பகுதியிலிருந்து சுமார் 20 லட்சத்துக்கும் அதிகமான உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வடக்கு சென்றுள்ளனர் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் வேலை நாள்களில் நாளொன்றுக்கு சுமார் 1000 தொடர்க்கம் 1500 சுற்றுலாப் பயணிகள் வரை தங்கியிருக்கின்றனர். விடுமுறை நாள்களில் இந்த எண்ணிக்கை 20,000 வரை அதிகரிக்கிறது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல சந்தை வாய்ப்புக் கிடைப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை,வடக்கில் உள்நாட்டு மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நன்மை கருதி அவர்களுக்கான வசதிகளை அதிகரிப் பதற்கு எதிர்காலங்களில் பல்வேறு திட்டங்களை அரசு முன்னெடுக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



பொதுநலவாய தொலைத்தொடர்புகள் அமைப்பின் 50ஆவது மாநாடு நேற்றுக்காலை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றபோது...

# குடத்தனையிலும் மருதங்கேணியிலும் 24 மணி நேர அம்புலன்ஸ் சேவை

## வடமராட்சி கிழக்கில் நடமாடும் மருத்துவ சேவையும்

யாழ்ப்பாணம், செப். 14

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமரும் மக்களுக்கு உதவும் நோக்குடன் இரு இடங்களில் 24 மணிநேர அம்புலன்ஸ் சேவை இடம்பெறவுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

குடத்தனையிலும் மருதங்கேணியிலும் இரு அம்புலன்ஸ்கள் 24 மணி நேரமும் தயார் நிலையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சேவையைப் பெறுவதற்கு பொதுமக்கள் குடத்தனையில் 0213207150 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் மருதங்கேணியில் 0213213580 என்ற இலக்கத்துடனும் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறியத்தருகின்றார்.

இதேவேளை - மீள்குடியமரும் மக்களுக்காக செம்பியன்பற்று பாடசாலையிலும் உடுத்துறை மகா வித்தியாலயத்திலும் நடமாடும் மருத்துவ சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-ஐ)

# சன் சீ கப்பல் அகதிகள் விவரம் பதிவுசெய்யப்பட்ட கணனி திருட்டு

## திட்டமிட்ட செயல் என்கிறது தமிழர் பேரவை

றொறண்டோ, செப்.14

சன் சீ கப்பலில் கனடா சென்றடைந்த 492 இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக கனேடியத் தமிழர் பேரவை திரட்டி வைத்திருந்த விவரங்கள் அனைத்தும் இனந்தெரி யாதோரால் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

கனேடியத் தமிழர் பேரவையின் அலுவலகத்துக்குள் சனிக்கிழமை இரவு புகுந்த இனந்தெரியாதோர் இலங்கைத் தமிழர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டிருந்த கணனியை எடுத்துச் சென்றுவிட்டனர் என்று றொறண்டோ பொலிஸாரிடம் தமிழர் பேரவை முறைப்பாடு செய்துள்ளது.

சன் சீ கப்பலில் வந்த தமிழர்கள் குறித்த ஆவணங்கள் மாத்திரமே திருடப்பட்டுள்ளன என்றும் இது திட்டமிட்ட செயல் எனவும் பேரவையின் பேச்சாளர் டி.பூபாலபிள்ளை பொலிஸாரிடம் தெரிவித்தார். றொறண்டோ பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி)

# ஜனவரியில் நாடு முழுவதும் ஒரே நாளில் உள்ளூராட்சிச் சபைகளுக்கு 'மினி' தேர்தல்

கொழும்பு, செப். 14

நாடுமுழுவதும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் ஜனவரியில் 'மினி' தேர்தலாக ஒரே நாளில் நடத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அனைத்து மாநகரசபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கே ஒரேநாளில் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாவது பதவிக் காலத்துக்கான பதவிப்பிரமாணம் செய்வதை அடுத்து வரவு - செலவுத் திட்டம் முன் வைக்கப்படவுள்ளது. வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் முடிவடைந்ததும் சகல உள்ளூராட்சிச் சபைகளையும் கலைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்தகால யுத்தம் காரணமாக அனைத்துப் பிரதேசங்களிலும் ஒரே நாளில் பிரதேச சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை இருந்தது. ஆனாலும் இம்முறை வடக்கு - கிழக்கு உட்பட சகல பிரதேசங்களிலும் ஒரே நாளில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஓராண்டு காலம் பின்தள்ளிவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் மாதத்தில் முடிவடைவதால், ஜனவரியில் தேர்தலை நடத்த [illegible] திட்டமிட்டுள்ளது. (ஒ-22)

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலை ஆசிரியை திருமதி நந்தினி கிருஸ்ண பவான் அவர்களின் அன்புத் தந்தையார்

*செல்லையா நடராசா*

அவர்கள் 11.09.2010 மரணமான செய்தி குறித்து ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/570879) யா/புற்றளை மகாவித்தியாலய சமூகத்தினர்

## மரண அறிவித்தல்

### செல்லையா நடராசா



யார்க்கரு வீதி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா 11.09.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்தினியின் அன்புக் கணவரும் புஸ்பராணி (இந்தியா), புஸ்பராசா (நோர்வே),புஸ்மாலா (கரவெட்டி), காலஞ்சென்ற புஸ்பகலா மற்றும் வசந்தன்(நோர்வே), புகழேந்திரன் (சுவிஸ்), நளினி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (14.09.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வீரக்களி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யார்க்கரு,*
*கரவெட்டி கிழக்கு.*

(101764)

தகவல்:
நாகரத்தினம்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்

# 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையை 7ஆம் ஆண்டில் நடத்த வைத்திய நிபுணர்கள் சிபார்சு

யாழ்ப்பாணம், செப். 14

மாணவர்களது வயதுக்கேற்பப் பொதுப் பரீட்சைகளை நடத்தாமையால் அவர்கள் பெரும் மன அழுத்தத்துக்கும் உடல் ஆரோக்கியக் குறைவுக்கும் ஆளாகிறார்கள் என்பதால்-

தரம் 5இல் நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சையைத் தரம் 7இல் நடத்துமாறு கல்வி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் அண்மையில் நடைபெற்ற கல்வி அமைச்சுக்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே வைத்திய நிபுணர்குழுவால் மேற்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அங்கு வைத்திய நிபுணர்கள் குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு :-

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படுகின்ற தரம்-5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ சாதாரண தரம், ஜி.சீ.ஈ உயர்தரம் ஆகிய மூன்று பரீட்சைகளும் மாணவர்களுக்கு ஏற்ற பருவத்தில் - வயதில் நடத்தப்படுவதில்லை. அதனால் இப்பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்கள் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்படுவதோடு தேவையற்ற விதத்தில் மனஉளைச்சலுக்கும் ஆளாகின்றனர்.

எனவே மாணவர்களுக்கான மேற்படி மூன்று பரீட்சைகளையும் உரிய வயதுகளுக்கு மாற்றி நடத்துமாறும் மிகக்குறிப்பாக தரம்-5 மாணவர்களுக்கு நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சையை அவர்களின் பன்னிரண்டாவது வயதில் தரம் 7 இல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது மிகப்பொருத்தமானதாகும்.

அத்துடன் சர்வதேச ரீதியாக நடத்தப்படுகின்ற லண்டன் சாதாரண தர, உயர்தர பரீட்சைகளுடன் ஒப்பிடும்போது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் பரீட்சைகள் சுமை கூடியதாக உள்ளன.

குறிப்பாகப் பரீட்சைக்குத் தயார்செய்யும் காலத்தில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் ஆரோக்கியக் குறைபாட்டால் வைத்தியசாலைகளை நாடுகின்றனர். நரம்பியல் நிபுணர் பிரசன்ன குணசேன தலைமையிலான நால்வர் அடங்கிய மருத்துவ நிபுணர்குழுவே கல்வி அமைச்சுக்கு இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளது. இதில் இரு குழந்தை வைத்திய நிபுணர்களும் அடங்குகின்றனர்.

இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூக் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாசுதேவ நாணயகார, ஆர்.யோகராஜன், பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ-16)

## சேனக சில்வாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களைத் தங்க வைத்திருந்தார், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரின் குடும்பத்தினரையும் கொலைசெய்யச் சதி செய்தார் போன்ற குற்றச்சாட்டுகள் தொடர் பாக அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 7500 புலிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள்,போரை வழிநடத்தியவர்கள் உள்ளடங்கிய 700 பேரும் இதில் அடங்குகின்றனர். புனர்வாழ்வு அளிக்கப் பட்ட மேலும் இரண்டாயிரம் பேர் விரைவில் விடுதலை செய்யப்பட உள்ளனர். இதேவேளை, அரசு சிறைக் கைதிகளுக்காக வருடாந்தம் பெருந்தொகை பணத்தை செலவிட்டு வருகின்றது - என்றார்.

# சாவு எங்களைத் துரத்திக்கொண்டிருக்கிறது கொள்கையில் உறுதியோடு செயற்படுவோம்

## ஜேர்மனியில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

"ஆறு தசாப்தங்களாக விடுதலைக்காகப் போராடிய இனம் இன்று தோற்றுப்போய் விட்டோமா என்ற ஏக்கத்துடன் மீண்டும் எப்படி தலைநிமிர்ந்து வாழ்வது என ஏங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மனநிலையை மாற்றி விழுதிலிருந்து எழும் ஆலமரமாய் உயர்ந்து நிற்பதற்கு நாங்கள் முனைய வேண் டும்"

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

ஜேர்மனியில் நடைபெற்ற உலக தமி ழர் பண்பாட்டு இயக்கத்தின் அகம் புலம் தமிழர் வாழ்வியல் சிறப்பு மாநாட்டில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியவை வருமாறு:-

தமிழர்களின் நிலம் இன்று அவனுக்கு சொந்தம் இல்லை என்ற நிலையை இலங்கை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. எமது நிலம் எங்கும் வேற்று மொழி பேசும் மனிதர்களைக் காண்கிறோம். எங்களை வீழ்த்திவிட்டு அவர்கள் எம்மீது ஏறி மிதித்துக்கொண்டு செல்லுகின்ற காட்சிகளைத் தான் நாங்கள் காண்கிறோம்.



இந்த உண்மைகளை உணர்ந்தவர்களாய் வீழ்த்தப்பட்ட மக்களைத் தூக்கி விடுவதற்கு உண்மைகளை - யதார்த்தங்களை உணர்ந்து செயற்பட வேண் டிய கடமையில் மேற்குலக நாடுகளில் உள்ள தமிழர்கள் உள்ளனர். பொதுவான ஒரு கொள்கையின் கீழ் அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும்.

நாடு இழந்து அகதிகளாய் இருந்த இஸ்ரேல் இனம் எப்படி உறுதியோடு ஒற்றுமையாகச் செயற்பட்டு தங்களுக்கான ஒருநாட்டைப் பெற்றுக்கொண்டார்களோ அதேபோன்று நாங்களும் உறுதியோடு செயற்பட வேண்டும்.

ஜப்பானை அழித்த அமெரிக்காவுடன் இன்று இருதரப்பும் கைகோர்த்து இருக்கிறார்கள். எனவே இந்தியாவுடன் நாகரீகம் கருதி உலக ஒழுங்கு கருதி நாங்கள் பேச வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், கூனிக் குறுகி நின்று பேச வேண்டிய அவசியம் இல்லை. உறுதியோடு தலைநிமிர்ந்து நின்று பேச வேண்டும்.

இன்று பத்தாயிரம் சிங்களக் குடும்பங்களை வடமாகாணத்தில் குடியேற்ற அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. எங்கும் வேற்று மொழி பேசித்திரியும் வியாபாரிகளையும் உத்தியோகத்தர்களையும் படைகளையும் தான் எங்கள் நிலத்தில் இப்போது காண்கிறோம்.

எனவே எங்கள் நிலத்தில் நாங்கள் உறுதியாக தலைநிமிர்வதற்கு தயவுசெய்து உதவுங்கள். யதார்த்தமான நோக்கோடு வாழ்வியல் கட்டுமானங்களை கட்டி எழுப்ப நீங்கள் உறுதியோடு செயற்படவேண் டும்.

சாவு எங்களைத் துரத்திக்கொண்டிக்கிறது. ஆனாலும் நாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியோடு செயற்படுவோம்.

- இப்படி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

## நல்லூர்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியசாலையிலும், மூவர் தேசிய வைத்தியசாலை யிலும் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

கமலராசன் கட்டார் நாட்டில் இருந்து ஓரிரு மாதங்களுக்கு முன்னர்தான் நாடு திரும்பி இருந்தார் என்றும் இவரின் யாழ்ப்பாண வீட்டில் கடந்த மாதம் 14 ஆம் திகதி திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 147 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டன. யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் இது சம்பந்தமாக குடும்பத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்டு, பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ஒ-சி)

## தேசிய மாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுசீரமைப்புக் குழுவின் அறிக்கை தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். அதன் பின்னர் மறுசீரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் வகையில் கட்சி அடிமட்டத்திலிருந்து கட்டி எழுப்பப்படும். அத்துடன் மறுசீரமைப்புக் குழுவின் சிபார்சின்படி மாற்றியமைக்கப்பட்ட அரசமைப்பின்படி கட்சித் தலைவர் தெரிவு இடம்பெறும். இணக்கப்பாட்டின் அடிப்படையில் தலைவர் தெரிவுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தலைவர் தெரிவு நடைபெறும்.

அரச அமைச்சர்கள் கூட ஐ.தே.கட்சியின் மறுசீரமைப்புப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றுமாறு எம்மிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் 25 எம்.பிக்களைக் கொண்ட குழுவினர் நாடாளுமன்றத்தில் சுயேச்சைக் குழுவாக இயங்கப்போவது குறித்து எதிர்க்கட்சித் தலைவருக்கோ அல்லது சபாநாயகருக்கோ உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. (ஒ-சி)

## 40 குதிரை வலு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்தத் தடையை நீக்கும்படியாகக் கடந்த சில காலமாகவே மீன்பிடியாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துகொண்டிருந்தன. அத்துடன் நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினை அண்மையில் முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் படையினர் 40 குதிரை சக்தி வாய்ந்த இயந்திரங்களுடன் கூடிய சுமார் 141 படகுகளைக் கைப்பற்றி தேச உடைமையாக்கியிருந்தார்கள். இந்தப் படகுகளை மீளவும் அந்த மீனவர்களுக்கே திருப்பிக் கொடுப்பதற்கும் பாதுகாப்பு அமைச்சு சம்மதம் தெரிவித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ப)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை நிறுத்தவேண்டும்.

தேவையற்ற விமர்சனங்களை நிறுத்த வேண்டும்

இலங்கை நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் தேவையற்றதும், பொறுப்பற்றதுமான விமர்சனங்களை அமெரிக்கா தெரிவிப்பதை நிறுத்தவேண்டும் - என அவர் தெரிவித்தார்.

இவ்வாறான தேவையில்லாத விமர்சனங்களை செய்வதினூடாக அமெரிக்கா இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட்டுள்ளது. அத்துடன், எமது நாட்டின் அதியுயர் மன்றமான உயர் நீதிமன்றத்தையும் அவமதித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

தற்போதைய அரசமைப்புத் திருத்தங்கள் இலங்கையின் அரசமைப்புக்கு அமையவே செய்யப்பட்டுள்ளன.

நாங்கள் செய்தது சட்டப்படியானது. எனவே, எவருக்கும் இதனை விமர்சிக்கும உரிமை கிடையாது எனவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையின் அரசமைப்பில் செய்யப்பட்டுள்ள 18ஆவது திருத்தங்களைக் கண்டித்து கடந்த சனிக்கிழமை அமெரிக்கா கடுமையாக விமர்சித்துள்ளதுடன், இத் திருத்தங்கள் ஜனநாயகத்தை பலவீனப்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தது.

(வெளி விவகார அமைச்சின் அறிக்கை 23ஆம் பக்கத்தில்)

## மாகாண சபைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புச் சட்டத்தில் மூன்று கட்டங்களாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அரசு முன்னர் அறிவித்திருந்தது.

முதற்கட்டமாக 18ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் அவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இரண்டாவதாக உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்பட இருக்கின்றது. அடுத்த மாதம் இத் திருத்தங்களை நாடாளுமன்றத்தில் கொண்டு வரும்பொருட்டு திருத்தம் சம்பந்தமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.

மூன்றாம் கட்டமாக அரசமைப்புக்கான 13ஆவது சட்ட திருத்தத்தில் மேலும் சீர் திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி எதிர்வரும் நவம்பரில் தமது இரண்டாவது பதவிக்காலத்தைப் பொறுப்பேற்ற பின்னர் மூன்றாம் கட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கு அதிகபட்ச அதிகாரங்களை வழங்கி அவற்றை வலுவுள்ளன வாக்குவதற்கான திருத்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசுதரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தத் திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்காக முன்னாள் பிரதமரும் தற்போதைய பொதுநிர்வாக சீர்திருத்த அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களான கலாநிதி சரத் அமுனுகம, சுசில் பிறேம ஜயந்த, ஜோன் செனவிரத்ன ஆகியோர் அக்குழுவில் அங்கம் வகிப்பர். (அ-ஐ)

## பிரணாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவரது விஜயம் குறித்த காரணத்தை, இரு நாட்டு அரசுகளும் உத்தியோகபூர்வமாக தகவல்கள் எதையும் வெளியிடவில்லை. (ஒ-சி)


ஆலோசனையும் வழிகாட்டலும்
உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சை
விசேட வழிகாட்டி விற்பனையில்
தொகுப்பு: த.தவசேகர்
பிரபல புத்தக நிலையங்களில்
விலை 200/=

Graphic Design தெரிந்தவர்கள் உடன் தேவை
எமது நிறுவனத்திற்கு PhotoShop தெரிந்த முன் அனுபவம் உள்ள திறமை வாய்ந்தவர்கள் உடன் தேவை.
Accounting தெரிந்தவர்களும் தேவை
திறமைக்கேற்ப கூடுதல் சம்பளம் வழங்கப்படும்.
நேர்முகத் தேர்வு : 15, 16-09-2010 ( புதன், வியாழன் )
நேரம்: 9.00 am-1.00pm
தொடர்புகளுக்கு
Andra Digital Printing
356A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 0215674444
0212228929
0776622981

Mobile Service
Repairs at your place
HOT LINE 0777425974
PC REPAIRS
Mobile Service
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம்: 218, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 0217913020
நெல்லியடி: கொடிகாமம் வீதி, நெல்லியடி. 0773039536

ESOFT
The Leader in Professional IT Education
ESoft Computer Studies
114, 267, Navalar Road, Jaffna.
T.P: 0212224142, 0217501120
கொழும்பின் பிரபல விரிவுரையாளர்களின் கற்பித்தலில், குறுகிய காலப்பகுதியில்.
NEW BATCHES START ON
15 - 09 - 2010
Auto CAD 2D 3D
C / C++, Java
Jaffna - 021222 0345 Chavakachcheri - 0212270333
Nelliyady - 021226 4940 Killinochchi - 021228 5444


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org